விலை: 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii


E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

டிஸ் அன்ரனா
மற்றும் கேபிள் TV
உதிரிப்பாகங்கள்
நியாயமான விலையில்
கிடைக்கும்
Satstech Engineers
28, Stanley Road,
Jaffna. 021 222 8812

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 வைகாசி 15 செவ்வாய்க்கிழமை (29.05.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 161

# வடக்கு மக்களுக்கு தேவையான அபிவிருத்தித் திட்டங்களை தயார்படுத்தி கொண்டு வாருங்கள்

## நடைமுறைப்படுத்த ஒத்துழைக்கிறோம் - யாழ். அபிவிருத்தி கூட்டத்தில் பிரதமர் ரணில்



(யாழ்ப்பாணம்) வடக்கு மக்களுக்கு தேவையான அபிவிருத்தி திட்டங்களை தயார்ப்படுத்துவதற்கு வடக்கில் உள்ள மக்கள் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து முடிவெடுத்து ஒற்றுமையாக செயற்படுத்த முன்வாருங்கள் எனத் தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அவ்வாறான திட்டங்களை நடைமுறைப்படுத்த தாம் சகல ஒத்துழைப்பும் வழங்குவதாகவும் தெரிவித்துள்ளார். (23-ம் பக்.)

கோட்டைக்குள் அனுமதித்தால்

## யாழ்.நகரிலிருந்து வெளியேறுவோம்

இராணுவத்தினர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டைக்குள் இராணுவத்தை அமர்த்த அனுமதித்தால் யாழ்.நகர்ப்பகுதியில் 24

## பொலிஸாரின் மோட்டார் சைக்கிள் மோதியதில் குடும்பஸ்தர் பலி

(யாழ்ப்பாணம்)

வீதியைக் கடக்க முற்பட்ட போது போக்குவரத்து பொலிஸாரின் மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் 4 நாட்களின் பின்னர் 23

## துப்பாக்கியை காட்டி வன அதிகாரி மிரட்டினார்

பிரதமரிடம் சிறீதரன் எம்.பி முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி வனவளத் திணைக்கள அதிகாரி என்னை ஊற்றுப்புலம் காட்டுக்குள் வைத்து கைத்துப்பாக்கியைக் காட்டி அச்சு 23

## நாட்டை முன்னேற்ற அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்

கிளிநொச்சியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

(கண்டாவளை)

எமது நாட்டை பொருளாதார ரீதியில் முன்னேற்றுவதற்கு நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சிக்கு விஜயம் செய்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற அபிவிருத்தி மீளாய்வு தொடர்பான கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றுகையில்,

கிளிநொச்சி மாவட்டத்திற்கு நான் விஜயம் செய்தது முக்கியமாக அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாடுவதற்கு என 24

## வற்றாப்பளைக்கு சென்ற குடும்பத்தை வழிமறித்து 20 பவுண் கொள்ளை

10க்கும் மேற்பட்ட கொள்ளையர் குழு அட்டகாசம்; இளைஞர்கள் துரத்தியதில் இருவர் பிடிபட்டனர்

(கண்டாவளை)

யாழ்ப்பாணம் கொடிகாமம் பகுதியில் இருந்து வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் திருவிழாவிற்கு மகேந்திர பிக்கப் வாகனத்தில் பயணித்தவர்களை வாள் மற்றும் கத்தி உட்பட பயங்கர ஆயுதங்களுடன் வழிமறித்த 10க்கும் மேற்பட்ட கொள்ளையர் குழுவொன்று பயணிகளைத் தாக்கி விட்டு பெண்கள் அணிந்திருந்த தாலிக் கொடி, சங்கிலி, உட்பட சுமார் 20 பவுண் நிறையுடைய தங்க நகைகளை கொள்ளையடித்து விட்டுத் தப்பிச் சென்ற போது இதனை 24

உலக சுகாதார நிறுவனத்தின்

## துணைத் தலைவராக அமைச்சர் ராஜித

(கொழும்பு)

உலக சுகாதார நிறுவனத்தின் துணைத் தலைவராக இலங்கை சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன வாக்கெடுப்பின்றி தெரிவாகியுள்ளார்.

உலக சுகாதார நிறுவனத்தின் வருடாந்த மாநாடு ஜெனிவாவில் இடம்பெற்று வருகிறது. இதில் நேற்று இடம்பெற்ற நிறை 24

## ரணில் விருந்துக்காக சென்ற விடுதி மீது

நேற்று இரவு கல்வீச்சு தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

இரவு விருந்துக்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவருடன் இணைந்த குழுவினர் சென்றிருந்த விடுதியின் வெளிப்புறத்தில் கல்வீசி தாக்குதலில் சிலர் ஈடுபட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று இரவு 9.45 மணியளவில் மின்தடைப்பட்டிருந்த போதே இடம் 23

## காலைக்கதிர் செய்தியாளர் மீது 10பேர் கொண்ட கும்பல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் காலைக்கதிர் நாளிதழின் பிரதேச செய்தியாளர் மற்றும் பத்திரிகை விநியோகஸ்தர் ஒருவர் மீது இனந்தெரியாத நபர்களால் நேற்று அதிகாலை வாள் வெட்டுத் தாக்குதலை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச் சம்பவத்தில் 3 பிள்ளைகளின் தந்தையான செல்வராசா இராஜேந்திரன் (வயது-55) என்பவரே படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை துண்டிச் சந்தியில் நேற்று அதிகாலை 3.45 மணியளவில் ஐந்து மோட்டார் சைக்கிள்களில் வந்த 10 பேர் கொண்ட கும்பலே இந்த 24

## வலி.வடக்கை தவிர்ந்த யாழின் ஏனைய பகுதியிலிருந்து வெளியேறுக

பிரதமர் படைத்தரப்புக்கு பணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் வலி.வடக்கு பகுதி தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் பாதுகாப்பு படையினர் நிலைகொண்டுள்ள ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பை விடுவிப்பதற்கான நடவடிக்கையை விரைவு படுத்துமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க படைத்தரப்பிடம் பணித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் படையினர் வசமுள்ள பொதுமக்களின் காணி விடுவிப்பு தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் பாதுகாப்பு படைத்தரப்பினர், அரச அதிகாரிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளுக்கு இடையிலான கலந்துரையாடல் ஒன்று நேற்று 23

## வற்றாப்பளை பொங்கல் விழா



## படையினர் வசமுள்ள அனைத்து காணிகளும் பொதுமக்களிடம் கையளிக்கப்பட வேண்டும்

வடக்கு முதல்வர் பிரதமருக்கு மனு



(யாழ்ப்பாணம்)

காணி விடுவிப்பு, கட்டமைப்பு அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் அவசர தேவைகள் ஆகிய நான்கு கோரிக்கைகளை முன்வைத்து வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் ஆவணம் ஒன்றை கையளித்துள்ளார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி அபிவிருத்திகள் தொடர்பில் ஆராய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார். அவர் நேற்று யாழ். செயலகத்தில் பல்வேறு 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## கணேசன் நாகபூசணி



மணற்குடியிருப்பு, முல்லைத்தீவை பிறப்பிடமாகவும் சிலாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட கணேசன் நாகபூசணி அவர்கள் கடந்த 26.05.2018 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு-நாகமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், வேலாயுதம்பிள்ளை- சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், கணேசனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான திரவியம், நாகையா, நாககன்னி மற்றும் மேரிபுலோமினா, தேவி, சகுந்தலா, சீதா ஆகியோரின் அன்புச் சகோதரியும், மேரி வேர்ஜினியா (ஜனா), யேந்திரன், அருள்ராஜ் (ராயு-பிரான்ஸ்), அருளானந்தம் (அனுஸ்ரன்-ஜதுர்சிகா பல்பொருள் வாணிபம், முல்லைத்தீவு) இரத்தினேஸ்வரன் (வரன்-பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மில்ரன், கமலா, மதி (பிரான்ஸ்), தீபா, லசிந்தா ஆகியோரின் அன்பு மாமியாரும், தனோஜினி, தனுசன் (லண்டன்), மிதுசன், சுடரினி, அக்ஷயா (பிரான்ஸ்), ஜதுர்சிகா, சதுர்சிகன் ஆகியோரின் பேர்த்தியும், நிகிதாவின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.05.2018) புதன்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக சிலாவத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-

(சி-2749) **சிலாவத்தை குடும்பத்தினர்**



## சிங்கராஜா ஜோசப் கொன்விக்ரர் (குணம்)

புனித அந்தோனியார் வீதி, பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிங்கராஜா ஜோசப் கொன்விக்ரர் அவர்கள் 26.05.2018 சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனி சிங்கராஜா-ஆரோக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மேரி கலைச்செல்வி (பேபி) அவர்களின் அன்புக் கணவரும், கமிலஸ் அன்ரனி, மேரி நிரோஷினி (நோர்வே), தோமஸ் டிலக்ஷன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற அல்பிறட் ஜோசப் (இளைப்பாறிய தபாலதிபர்), அமிர்தநாதர் (இளைப்பாறிய ஆசிரியர்), ஜோர்ச் அன்ரனி (திருகோணமலை), றோபேட் வேதநாயகம் (சுவீடன்), காலஞ்சென்ற யூலியற் ராணி (ஆசிரியை), திருமதி மேரி கரோலின் (பின்லாந்து), யஸ்ரின் றெஜினோல்ட் (மென் பொறியியலாளர்-நோர்வே) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், திருமதி கலைமொழி (வவுனியா), அமரர் அன்பழகன் (கனடா), திருமதி கலைமதி (கனடா), திருமதி உதயகுமாரி (கனடா), யூகன் (கனடா), இளங்கோவன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், செல்வி மரியாம்பிள்ளை கிளாறம்மா, காலஞ்சென்ற மேரி திரேசா (பவளம்) ஆகியோரின் உடன் பிறவா சகோதரரும், காலஞ்சென்ற அ.அந்தோனியம்மா, திருமதி ஜோ.கொலஸ்ரிகா, புஸ்பவதி, திருமதி றொ.தங்கராணி (சுவீடன்), பி.பசில் ராஜ்குமார் (மின் பொறியியலாளர்), மோகனதாஸ் (பின்லாந்து), மேரி றில்வியா (நோர்வே) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.05.2018) புதன்கிழமை அன்று நண்பகல் 12 மணிக்கு இல்லத்தில் நடைபெற்று அவரது பூதவுடல் பருத்தித்துறை புனித அந்தோனியார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பிற்பகல் 1.00 மணிக்கு திருப்பலி நிறைவேற்றப்பட்டு பின் நல்லடக்கத்திற்காக கோரியடி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-குடும்பத்தினர்

தொடர்பு:

0766576321 (கமிலஸ்)

0776651498 (டிலக்ஷன்)

புனித அந்தோனியார் வீதி,

பருத்தித்துறை

(சி-2752)

# இலங்கை இராணுவம் மீது போர்க் குற்றச்சாட்டு

# ஐ.நா. பேரவையின் 38ஆவது கூட்டத்தொடரில் அரசின் காட்டிக்கொடுப்புக்கள் அம்பலமாகும்

## அட்மிரல் சரத் வீரசேகர அச்சம்



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 38ஆவது கூட்டத்தொடர் இடம்பெறவுள்ள நிலையில் இலங்கை இராணுவத்தினருக்கு எதிராக புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் முன்வைத்த குற்றச்சாட்டுக்களை சர்வதேச அமைப்புக்கள் பகிரங்கப்படுத்த முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. இதன்போது அரசாங்கத்தின் காட்டிக்கொடுப்புக்களும் ஒரு முக்கிய ஆதாரமாக முன்வைக்கப்படும் என தேசப்பற்றுள்ள வல்லுநர்களின் அமைப்பின் பேச்சாளரும் முன்னாள் கடற்படை அதிகாரியுமான அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

புலம்பெயர் தமிழர் அமைப்புக்களின் கனவுகள் ஒரு போதும் நிறைவேறாது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளமையானது அரசியல் இராஜதந்திரமாகவே காணப்படுகின்றது.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இராணுவம் போர்க் குற்றங்களை மேற்கொண்டனர் என்று மேற்குலக நாடுகள் பொய்யான குற்றச்சாட்டுக்களை சுமத்தியிருந்தன.

இவ்விடயம் தொடர்பில் கடந்த மார்ச் மாதம் இடம்பெற்ற ஐ.நா. மனித உரிமை பேரவையின் 37 ஆவது காலக்கிரம கூட்டத்தொடரில் சர்வதேச அமைப்புக்கள் மற்றும் புலம்பெயர் தமிழர் அமைப்புக்களும் இக்குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க பல உத்திகளை கையாண்டன.

38 ஆவது கூட்டத்தொடருக்கு இலங்கையில் இருந்து எவ்வித அமைப்புக்களும் இம்முறை கலந்து கொள்ளவில்லை. இது சர்வதேச அமைப்புக்களுக்கு சாதகமாக அமையலாம். ஐ.நா. விவகாரத்தில் தேசிய அரசாங்கமும் இதுவரை காலமும் விரைவான தீர்வினை பெற்றுக் கொள்ளும் தீர்மானங்களை செயற்படுத்தாமல் மந்தமாகவே செயற்பட்டு வருகின்றது.

மனித உரிமை ஆணையகத்தில் இராணுவத்தினருக்கு எதிராக போர்க் குற்றங்கள் ஏதும் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையில் உள்ளடக்கப்படவில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளமை உண்மைக்கு புறம்பானதாகவே காணப்படுகின்றது. அரசாங்கம் போர்க்குற்றங்கள் தொடர்பிலான விவகாரத்தில் அரசியலை மையப்படுத்தியே செயற்பட்டு வருகின்றது.

தெற்கு வாழ் மக்களை அமைதிப்படுத்தும் நோக்கிலே அரசாங்கம் தற்போது ஐ.நா.விவகாரத்தினை கையாண்டு வருகின்றது.

மறுபுறம் புலம்பெயர் தமிழர் அமைப்புக்களின் நோக்கங்கள் நிறைவேறாது என்று குறிப்பிட்டுள்ளமை வேடிக்கையாகவே உள்ளது. புலம்பெயர் அமைப்புக்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதாக தேசிய அரசாங்கம் சர்வதேச நாடுகளுக்கு வாக்குறுதி வழங்கியுள்ளது.

இதற்காகவே அரசாங்கம் போர்க்குற்றம் தொடர்பில் மந்தகரமாக செயற்பட்டு வருகின்றது. அரசாங்கம் மேற்கொள்ளும் அரசியல் திட்டங்களுக்குள் மறைமுகமாக புலம்பெயர் தமிழர் அமைப்புக்களின் நலன்கள் நிறைவேற்ற அடித்தளமிடப்பட்டு வருகின்றது.

எனவே 38 ஆவது கூட்டத்தொடரில் தேசிய அரசாங்கத்தின் காட்டிக் கொடுப்புக்கள் வெளிப்படும், மேற்குலக நாடுகளின் அமைப்புக்கள் இதனை சாதகமாக பயன்படுத்திக் கொள்ளும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## கப்பம் பெறும் நிவாரணக் குழுக்கள் தொடர்பில் ஆராய அரசு உத்தரவு

(கொழும்பு)

வெள்ளம், மண் சரிவு போன்ற அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவி செய்யும் நிவாரணக் குழுக்களால் மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்கள் குறித்து ஆராயுமாறு, அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் யொலிஸ்மா அதிபர் பூஜித் ஜெயசுந்தரவிற்கு உத்தரவிட்டுள்ளார்.

நேற்றுப் பகல் அலைபேசி மூலம் அமைச்சர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

சில நிவாரணக் குழுக்கள் மக்களிடம் கப்பம் பெறுவதாக கிடைக்கப்பெற்றுள்ள தகவல்களுக்கமையவே அமைச்சரால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, இவ்வாறான குழுக்கள் தொடர்பில், 119 அல்லது 117 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு அறிவிக்குமாறு அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (இ-7)

## உணவு விஷமானதால் 35 மாணவர்கள் வைத்தியசாலையில்

(கொழும்பு)

திடீர் நோய் நிலைமை காரணமாக பிலியந்தலை சேர் ஜோன் கொத்தலாவல வித்தியாலயத்தின் 35 மாணவர்கள் பிலியந்தலை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முற்பகல் பாடசாலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றை தொடர்ந்து காலை உணவினை உட்கொண்ட மாணவர்களே இவ்வாறு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மாணவர்கள் உட்கொண்ட காலை உணவு விஷமாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

## போட்டியிடுவதைத் தடுக்கவும்

## திலங்கவுக்கு எதிராக நிஷாந்தவினால் மனு



(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் பதவிக்கு திலங்க சுமதிபால போட்டியிடுவதை தடுக்கும் வகையில் இடைக்கால தடை உத்தரவொன்றை பிறப்பிக்குமாறு நிஷாந்த ரணதுங்க மனு ஒன்றை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்றுத் தாக்கல் செய்துள்ளார்.

அந்த நிறுவனத்தின் செயலாளர் மற்றும் நடக்கவிருக்கும் தேர்தலில் தலைவர் பதவிக்காக போட்டியிடும் வேட்பாளரான நிஷாந்த ரணதுங்கவினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த மனுவிற்கு பிரதிவாதிகளாக விளையாட்டுத்துறை அமைச்சர் பைஸர் முஸ்தபா, அமைச்சின் செயலாளர், கிரிக்கெட் பரிந்துரைக் குழுவின் உறுப்பினர்கள், இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தற்போதைய தலைவர் திலங்க சுமதிபால உட்பட 27 பேரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

குறித்த மனுவில் எதிர்வரும் 31 ஆம் திகதி நடைபெற உள்ள இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் பதவிக்கான தேர்தலில் வேட்பாளருக்காக திலங்க சுமதிபாலவின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளமை சட்டத்திற்கு முரணானது என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் திலங்க சுமதிபால குறித்த பதவிக்காக போட்டியிட்டால் விளையாட்டுச் சட்டத்தின் விதிகள் மீறப்படும் என மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால் குறித்த மனுவை கருத்திற்கொண்டு, இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் பதவிக்கு திலங்க சுமதிபால போட்டியிடுவதை தடுக்கும் வகையில் இடைக்கால தடை உத்தரவொன்றை பிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (இ-7)

## 20ஆவது திருத்தச்சட்டமூலம் ஸ்திரத்தன்மையை பாதிக்கும்

### அமைச்சர் சம்பிக்க கூறுகிறார்



(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணி அண்மையில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள அரசியலமைப்புச் சட்டத்தின் 20ஆவது திருத்தச்சட்டமூலம் நாட்டின் ஸ்திரமற்ற நிலைமைக்கு காரணமாக அமையலாம் என ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரான அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.


கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் 20ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் குறித்து கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அரசியலமைப்புச் சட்டத்தின் முக்கியமான வார்த்தைகளை மாற்றுவதன் மூலம் அதன் பொருளை தலைகீழாக மாற்ற முயற்சிக்கும் யோசனையான 20ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் சித்தாந்த ரீதியிலும் தவறானது.

அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தங்களை செய்ய வேண்டுமாயின் முறையான வழிகளில் அதனை செய்யக் கூடாது. இதற்கு பதிலாக முழுமையான அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட வேண்டும் எனவும் சம்பிக்க ரணவக்க சுட்டிக் காட்டியுள்ளார். (இ-7)

# ஐ.பி.எல் விருதுகள்

## 'ஸ்ரைலிஷ் வீரர்' ரிஷப் பன்ட்




11ஆவது ஐ.பி.எல்., தொடரில் சிறந்த இளம் வீரர் மற்றும் 'ஸ்ரைலிஷ்' வீரராக டில்லி அணியின ரிஷப் பன்ட் (வயது-20) தேர்வு செய்யப்பட்டார். இவர், லீக் சுற்றில் 14 போட்டிகளில் ஒரு சதம், 5 அரைச்சதம் உட்பட 684 ஓட்டங்கள் (ஸ்டிரைக் ரேட் 173.60) எடுத்தார். இதை யடுத்து இத்தொடரின் வளர்ந்து வரும் வீரர்களில் சிறந்தவர் என்ற விருதை பெற்றார். தவிர 'ஸ்ரைலிஷ்' வீரராகவும் பன்ட் தேர்வு செய்யப்பட்டார்.




### 'ஒரேஞ் கப்' வில்லியம்ஸன்

11ஆவது ஐ.பி.எல்., சீசனில் அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர்களுக்கான பட்டியலில ஹைதராபாத் அணியின் தலைவர் கேன் வில்லியம்சன், முதலிடம் பிடித்தார். இவர், 17 போட்டிகளில், 8 அரைச்சதம் உட்பட 735 ஓடங்கள் குவித்தார். இதற்காக இவருக்கு "ஒரேஞ்ச்" நிற தொப்பியுடன் ரூ. 10 லட்சம் பரிசு வழங்கப்பட்டது.


## UNIVERSITY OF JAFFNA
## INVITATION FOR BIDS

1. **The Chairman, University Procurement Committee,** on behalf of **the University of Jaffna** now invites sealed bids from eligible bidders for **"Supply of skilled and unskilled labourers for daily works of University of Jaffna".**
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered as manpower supply agency/Community based organization/**ICTAD** registered (any grade) Civil work contractors.
4. Interested bidders may obtain further information from the **Deputy Registrar, General Administration, University of Jaffna, Jaffna,** and inspect the bidding Document at the same address on any working day from **9.00 hrs to 16.00 hrs.**
5. A Complete set of Bidding documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Deputy Registrar, (General Administration) University of Jaffna (T.P: 0212226517), from 30th May, 2018** until **11th June, 2018 from 9.00 hrs to 15.00 hrs,** upon payment of a non-refundable fee of **Rupees one thousand (Rs 1000/-) at the Shroff counter of the University of Jaffna.**
6. Bids shall be delivered or sent by registered post to the **Registrar, University of Jaffna, P.O.Box 57, Thirunelvely, Jaffna** to reach **on or before 11.00 hrs on 14th June 2018.** Bids will be opened soon after closing at the **Board Room of the University of Jaffna,** in presence of the bidder's representatives who choose to attend.
7. Bids shall be valid for a period of **90 Days** from the date fixed for closing of Bids or any extended period.
8. All Bids shall be accompanied by a Bid security for and which shall be;
   - In the form included with the Bidding document
   - In favourof **Vice-Chancellor, University of Jaffna.**
   - For an amount **of Rs.150000.00** valid up to **12th October, 2018**
   - Issued by one of the agencies
     a. A bank operating in Sri Lanka,
     b. A bank based in another country but the guarantee "confirmed" by a bank operating in Sri Lanka;
9. A pre-bid meeting will be held on **07th June, 2018** at 10.00 am in the Board Room of the University of Jaffna.

Chairman,
Department Procurement Committee
University of Jaffna.
P.O.Box57, Thirunelvely,
Jaffna.

(C-2750)


ஃபிபா கால்பந்து கவுண்ட் டவுண் 16

# ஆதிக்கம் செலுத்திய ஆர்ஜென்ரீனா

பதினோறாவது உலக கிண்ண கால்பந்து தொடர், 1978ல் ஆர்ஜென ரினாவில் நடந்தது. இங்கு ராணுவ ஆட்சி புரிந்த ஜென ரல் விடேலாவின் சர்வாதி கார போக்கு மற்றும் மனித உரிமை மீறலை கண்டித்து பல நாடுகள் போட்டியை புறக்கணிக்க முடிவு செய் தன. பின் சர்வதேச கால்பந்து கூட்டமைப்பு (ஃபிபா) தலை யிட்டு சமரசம் செய்தது.

முதல் சுற்றுப் போட்டி களின் முடிவில், இத்தாலி, நெதர்லாந்து, பிரேசில், மேற்கு ஜேர்மனி, ஆஸ் திரியா, ஆர்ஜென்ரீனா, போலந்து, பெரு ஆகிய அணிகள் இரண்டாவது சுற் றுக்கு முன்னேறின. இரண் டாவது சுற்றின் முடிவில் ஆர்ஜென்ரீனா, பிரேசில் அணிகள் தலா 5 புள்ளிகள் பெற்று சமநிலையில் இருந் தன. பின் அதிக கோலடித் ததன் அடிப்படையில் இறுதி வாய்ப்பை ஆர்ஜென்ரீனா பெற்றது.



மறுபக்கம் ஆஸ்திரியா, இத்தாலி அணிகளை வென்ற நெதர்லாந்து அணி, உலக கிண்ண இறுதிக்கு இரண்டாவது முறையாக தகுதி பெற்றது.

இறுதியில் ஆர்ஜென் ரீனா, நெதர்லாந்து அணி கள் மோதின. ஆட்ட நேர முடிவில், இரு அணிகளும் 1-1 என சமநிலையில் இருந் தன. பின் கூடுதல் நேரத்தில், ஆர்ஜென்ரீனாவின் மரியோ கெம்பஸ், பெர்டோனி தலா ஒரு கோல் அடித்தனர்.

இறுதியில் ஆர்ஜென்ரீனா 3-1 என வென்று, முதன் முறையாக உலக கிண்ணத்தை கைப்பற்றி யது.

இத்தொடரில் 6 கோல் கள் அடித்து அசத்திய ஆர் ஜென்ரீனா வீரர் மரியோ கெம்பஸ், தங்கக்காலணி விருதை கைப்பற்றினார்.

**'பிரீ கிக்'**

உலக கிண்ண தொடரை நடத்தி, சொந்த மண்ணில் சம்பியன் பட்டம் வென்ற அணிகள் வரிசையில் ஐந் தாவது இடத்தை பெற்றது ஆர்ஜென்ரீனா. இதற்கு முன், உருகுவே (1930), இத்தாலி (1934), இங்கிலாந்து (1966), மேற்கு ஜெர்மனி (1974) அணிகள் இப்பெருமையை பெற்றன.


## தவறவிடப்பட்டது

மந்திகை-தம்பசிட்டி-கதிரவேற்பிள்ளை வாசிக சாலை - சுப்பர்மடம் வீதிக்கும் சுப்பர்மடம் - கல்லூரி வீதி - பருத்தித்துறை நகர் - மந்திகை வீதிக்கும் இடைப்பட்ட பகுதியில் ஒரு பவுண் நிறையுடைய டைமன் தங்கச்சங்கிலி ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (சன்மானம் வழங்கப்படும்)

தொ.பே: 0775252632, 0769984741
(C-2753) தம்பசிட்டி, பருத்தித்துறை.



- ✦ வாழைக்குட்டிகள் விற்பனைக்குண்டு
- ✦ ஒரு வயதுக்கு மேற்பட்ட பெண் பொமேரியன் நாய்க்குட்டி தேவை.

தொடர்புகளுக்கு:- (4230)
077 172 6839


# மரண அறிவித்தல்

## செல்வி புஷ்பாவதி செல்வநாயகம்

(நல்லூர்)

**அன்னை அருகில்**
**31•08•1929**

**ஆண்டவன் நிழலில்**
**27•05•2018**



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் கோவில் வீதி, நல்லூரை வதிவிடமாகக் கொண்டவரும் யா/இந்து மகளிர் கல்லூரி மற்றும் யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆகியவற்றின் இளைப்பாறிய ஆசிரியையும் யா/இந்து மகளிர் கல்லூரியின் முன்னாள் பழைய மாணவிகள் சங்கத் தலைவியுமான செல்வி புஷ்பாவதி செல்வநாயகம் அவர்கள் நேற்று முன்தினம் (27.05.2018) ஞாயிற்றுக்கிழமை நல்லைக் கந்தன் திருவடியிற் சரணபுகுந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வநாயகம் - மங்கையர்க்கரசி தம்பதிகளின் பாசமிகு இளைய மகளும் காலஞ்சென்ற பத்மாவதி (நல்லூர்) மற்றும் Dr. செல்வேந்திரா (அவுஸ்திரேலியா), ஹரிச்சந்திரன் (மலேசியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற Dr. சோமசுந்தரம் (நல்லூர்) மற்றும் சந்தானலட்சுமி (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற விமலாதேவி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் சியாமளா (நல்லூர்), Dr. முரளிதரன் (அவுஸ்திரேலியா), யாமினி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு சிறிய தாயாரும் அஜித் இந்திரஜீத் (அவுஸ்திரேலியா), மீரா (அவுஸ்திரேலியா), ரொமேஷ், சாவித்திரி, விஜயஈஸ்வரன் (ஓய்வுபெற்ற நீர்ப்பாசன திணைக்களம் - படவரைஞர்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் யாழினி (ஆசிரியை - தனியார்), யனகன் (திருச்செந்தூரன் Netcafe), பவனி (Tube tamil fm), மதிசாதரன் (M.A தென்னைப் பயிர்ச்செய்கை சபை, யாழ்ப்பாணம்), சிறிசியா (பொறியியலாளர்), துவாரகா M.A தென்னைப் பயிர்ச்செய்கை சபை, யாழ்ப்பாணம்), இனேஷ் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.05.2018) புதன்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அவர் சார்ந்த கல்விச் சமூகத்தோர், அவருடைய மாணவ மாணவியர் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோவில் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(C-2751)

தகவல்:- சியாமளா விஜயஈஸ்வரன்
021-222 3499

# தூத்துக்குடியில் தமிழர்கள் படுகொலை; யாழ்.பல்கலை.மாணவர்கள் போராட்டம்




தமிழ்நாடு, தூத்துக்குடி மாவட்ட மக்களின் சூழலியல் நீதிக்கான (ஸ்டெர்லைட் ஆலை மூடல்) போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டைக் கண்டித்தும் இதன் போது உயிரிழந்த தமிழ் மக்களுக்கு நீதி கோரியும் நேற்று யாழ்.பல்கலைக்கழக மாணவர்களால் போராட்டம் ஒன்று பல்கலை முன்றலில் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த போராட்டத்தில் மாணவர்கள் பலர் கலந்து கொண்டு தமது கண்டனத்தை வெளியிட்டிருந்தனர். (இ-9)

# மாகாண போக்குவரத்து பேருந்துகளுக்கு ஜி.பி.எஸ்.தொழில்நுட்பம் இனி கட்டாயம்

(கொழும்பு)

மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்து சேவையினை முன்னெடுக்கும் அனைத்து பேருந்துகளிலும், அடுத்த வருடம் முதல் ஜி.பி.எஸ் தொழில்நுட்பம் பொருத்தப்பட வேண்டியது கட்டாயப்படுத்தப்படவுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளது.

மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்து சேவையினை முன்னெடுத்துவரும், சொகுசு மற்றும் அரை சொகுசு பேருந்துகளில், ஜி.பி.எஸ்.தொழில்நுட்பம் ஏற்கனவே கட்டாயப்படுத்தப்பட்டுள்ளதாக அவ்வாணைக்குழுவின் பொது இயக்குநர், டாக்டர். டி.எம்.எஸ். திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜி.பி.எஸ்.தொழில்நுட்பம் பொருத்தப்படாத மாகாணங்களுக்கிடையிலான பேருந்துகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜி.பி.எஸ்.தொழில்நுட்பம் பொருத்தப்பட்ட பின்னர், மாகாணங்களுக்கிடையிலான பேருந்துகள் எந்தவழிகளில் பயணிக்கின்றன. எவ்வளவு வேகத்தில் பயணிக்கின்றன என்பது தொடர்பான தகவல்களைக் கண்காணிக்க முடியுமெனவும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (இ-7)

# வெள்ளத்தினால் எலிக் காய்ச்சல் பரவும் அபாயம்

(கொழும்பு)

தென்மேற்குப் பருவப்பெயர்ச்சி மழையினால் ஏற்பட்டுள்ள வெள்ளத்தால், எலிக்காய்ச்சல் நோய் பரவக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ள நீரில் நடக்கும்போது பாதணிகளை அணிந்து கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தியுள்ள சுகாதாரப் பரிசோதகர்களின் செயலாளர், மகேந்திர பாலசூரிய வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட உணவுப்பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நட்வடிக்கை எடுக்கப்படுமெனவும் எச்சரித்துள்ளார். (இ-7)

# ஊடகவியலாளர் லசந்த கொலை குறித்து ரணிலிடம் வாக்குமூலம் பெற வேண்டும்

(கொழும்பு)

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவை கொலை செய்தது சரத் பொன்சேகா என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போது நாடாளுமன்றத்தில் கூறியுள்ளதாக கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சித் தலைவராக பதவி வகித்த எமது அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் லசந்த விக்கிரமதுங்கவை சரத் பொன்சேகாவே கொலை செய்ததாக நாடாளுமன்றத்தில் கூறினார்.

அப்படியானால் ரணில் விக்கிரமசிங்கவிடம் வாக்குமூலம் பெற வேண்டும். எந்த சாட்சியங்களின் அடிப்படையில் அவர் இதனைக் கூறினார்.

நாடாளுமன்றத்தில் பொய்யான விடயங்களைக் கூற முடியாது. இதனால் ரணில் விக்கிரமசிங்கவிடம் வாக்குமூலத்தை பெற்று, அதற்கு அமைய லசந்த கொலை வழக்கை முன்னெடுத்துச் செல்ல முடியுமே. ஏன் அப்படி செய்வதில்லை.

ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போது கூறிய விடயம் தொடர்பிலும் நாம் ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

சரத் பொன்சேகா தொடர்பான சந்தேகத்தை விசாரிக்கும் தேவை அரசாங்கத்திற்கு இல்லை என்பதால், அப்படியான விசாரணைகளை நடத்துவதில்லை என வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)


## கண்ணீர் அஞ்சலி



அமரர் கிருஸ்ணலிங்கம் கோபு

தோற்றம் 25.03.2001 மறைவு 26.05.2018

எமது கல்வி நிறுவனத்தின் O/L பகல் நேர வகுப்பு மாணவன் அமரர் கிருஸ்ணலிங்கம் கோபு அவர்களின் அகாலமரணச் செய்தியினைக் கேட்டு துயர் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பிரிவால் துயருறும்
விக்னா கல்வி நிலைய இயக்குநர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள்.


## இராசி பலன்

**மீனம்:** அன்பால் சாதித்துக் காட்டும் நாள், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தொழில் ரீதியான பயணங்கள் அனுகூலம் தரும்.

**மேடம்:** இறைவழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**இடபம்:** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மிதுனம்:** வீட்டை பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், மாற்றுக் கருத்துக் கருத்துடையோர் மனம் மாறுவர், சுப தகவல்கள் வந்து சேரலாம், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**கும்பம்:** எதிர்கால நலன்கருதி புதிய திட்டமொன்றைத் தீட்டுவீர்கள், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும்.

**கடகம்:** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், எதிர்கால நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பெற்றோர் மீதான பாசம் கூடும்.

**மகரம்:** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறலாம், பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.

**சிம்மம்:** சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காண வேண்டிய நாள், வாகன சுகமுண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**இராசி பலன்** — கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | | சூரி, புத | சுக் |
| | இராசி பலன் | | ராகு |
| செவ், கேது | கிரகநிலை | | |
| சனி | சந் | குரு | |

சந்திராஷ்டமம்: பரணி, கார்த்திகை

**29.05.2018**

வைகாசி 15, செவ்வாய்க்கிழமை
சூரிய உதயம் காலை 5.52 மணிக்கு
பூரணை முன்னிரவு 8.16 மணிவரை
அனுசம் பின்னிரவு 1.22 மணிவரை
சுபநேரம் 10.22-11.52 மணிவரை
இராகுகாலம் 2.52-4.22 மணிவரை
பூரணை விரதம்

வளவன்

**தனுசு:** திட்டமிட்ட பயணமொன்றால் திசை திருப்பங்கள் ஏற்படலாம், சுப செலவுகள் கூடும், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள்.

**விருச்சிகம்:** விரும்பிய காரியம் விரும்பியபடியே நடைபெறலாம், போசன சுகமுண்டு, வழிபாடு குதூகலம் தரும், பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள்.

**துலாம்:** நிலையான வருமானத்திற்கு வழிகாட்டுவீர்கள், உங்கள் பொறுமைக்கு பலன் கிடைக்கும், சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கன்னி:** சுய முயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் அகலும், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.



யாழ்ப்பாணம் - நல்லூர் சிவன் கோவில் (அம்மன்) சப்பறத் திருவிழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை வெகுவிமர்சையாக இடம்பெற்றது. (படங்கள்: ஐ.சிவசாந்தன்)

# தேசிய இளைஞர் சேவைகள் மன்ற இளைஞர் விருது போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் வருடந்தோறும் நடத்தப்படும் மாவட்ட மட்டத்தினாலான் 13-29 வயதுக்குட்பட்டவர்களுக்கான போட்டியானது சாதாரண போட்டியாளர்களுக்கு 2018.05.12 ஆம் திகதி யாழ். சன்மார்க்க வித்தியாலயத்திலும், விசேட தேவைக்குட்பட்ட போட்டியாளர்களுக்கு 2018.05.19ம் திகதி யாழ்.கைதடி நவீல்ட் வித்தியாலயத்திலும் நடத்தப்பட்டது. இதன்படி யாழ்.மாவட்ட மட்ட இளைஞர்விருதுப்போட்டியின் முடிவுகள் வருமாறு.

**பேச்சு - தமிழ்**

முதலாம் இடம்:-மோ.ஹரிகரன்-சண்டிலிப்பாய், இரண்டாம் இடம்:-வ.றொபின்சன் -உடுவில்,மூன்றாம்இடம்:-ம.வீணஜா-சாவகச்சேரி.

**பேச்சு-ஆங்கிலம்**

முதலாம் இடம்:-அ.திருமருகன்-சண்டிலிப்பாய், இரண்டாம் இடம்:-செ.ஆன்டனியா-சாவகச்சேரி, மூன்றாம் இடம்:- ச.டெனிக்சன்-யாழ்ப்பாணம்.

**அறிவிப்பாளர் - தமிழ்**

முதலாம் இடம்:-க.வினோதன்-காரைநகர், இரண்டாம் இடம்:-அ.பிருந்திகா-நல்லூர், இரண்டாம் இடம் :- ப.ராஜசோபனா-யாழ்ப்பாணம்.

**இளம்பாடகர் - தமிழ்**

முதலாம் இடம்:-தி.ரஞ்சித்குமார்-உடுவில், இரண்டாம் இடம்:-அ.சே.வி. பிரசாந்தன்-கரவெட்டி, மூன்றாம் இடம்:-ச.அஜீபன்-உடுவில், மூன்றாம் இடம்:-க.பிரபுராஜ் சாவகச்சேரி.

**சித்திரம்**

முதலாம் இடம்:-ரா.பானுஜன்-சண்டிலிப்பாய், இரண்டாம் இடம்:-செ.டிலக்சன் - காரைநகர், மூன்றாம் இடம்:-பு.சேந்தன்- காரைநகர்,

**கிராமியப்பாடல் - ஆண்**

முதலாம் இடம்:-வ.அருசாந்-பருத்தித்துறை, இரண்டாம் இடம்-கு.டினுஜன்- மானிப்பாய், மூன்றாம் இடம்:-ஜெ.கருசன்-மானிப்பாய், மூன்றாம் இடம்:-ப.பவித்திரன்-பருத்தித்துறை.

**கிராமியப்பாடல் - பெண்**

முதலாம் இடம்:-ச.யஜீவா-கோப்பாய், இரண்டாம் இடம்:-தி.வருணியா-கோப்பாய், மூன்றாம் இடம்:-ஸ்ரீ.கலையரசி-உடுவில்.

**சாஸ்திரியப்பாடல் தென்னிந்திய இராகம்(ஆண்-தனி)**

முதலாம் இடம்:-தி.ரஞ்சித்குமார்-உடுவில், இரண்டாம் இடம், மு.சுலக்சன்-கோப்பாய், மூன்றாம் இடம்:-க.தனுஜன்-சண்டிலிப்பாய், மூன்றாம் இடம்:-ஜெ.கருசன்-சண்டிலிப்பாய்.

**சாஸ்திரியப்பாடல் தென்னிந்திய இராகம் (பெண்-தனி)**

முதலாம் இடம்:-ச.யஜீவா-கோப்பாய், இரண்டாம் இடம்:-தி.வருணியா- கோப்பாய், மூன்றாம் இடம்:-ர.நிருக்சிகா- சாவகச்சேரி, மூன்றாம் இடம்:-பா.ஸப்தகி-கரவெட்டி

**அபிநய நடிப்பு**

முதலாம் இடம்:-இ.காமராஜ்-உடுவில், இரண்டாம் இடம்:-கெ.நிலக்சன் - உடுவில், மூன்றாம் இடம்:-நி.மோகனதர்சன் -கோப்பாய்.

**பரதம் - தனி (பெண்)**

முதலாம் இடம்:-அ.நிந்துஷா- கரவெட்டி,இரண்டாம் இடம்:-வி.வானதி -உடுவில், மூன்றாம் இடம்:-த.கேம்பியா-சண்டிலிப்பாய்.

**மிருதங்கம் தனி**

முதலாம் இடம்:-ஸ்ரீ.திலுக்சன்-கோப்பாய், இரண்டாம் இடம் ந.கேதாரநாத்-நல்லூர், மூன்றாம் இடம்:-மு.சுலக்சன்-கோப்பாய்.

**வயலின் - தனி**

முதலாம் இடம்:-சு.மயூரதி-நல்லூர்.இரண்டாம் இடம்:- ம.டொன்சியா-உடுவில், மூன்றாம் இடம்:-தி.வருணியா- கோப்பாய்.

**புத்தாக்க நடனம் பெண் குழு**

முதலாம் இடம்:-தேவிகா குழு சங்கானை, இரண்டாம் இடம்:-வானதி குழு உடுவில், மூன்றாம் இடம்:- பானு குழு நல்லூர்.

**கிராமிய நடனம் பெண் குழு**

முதலாம் இடம்:-கிஷாலினி குழு கரவெட்டி, இரண்டாம் இடம்:-மிதுனா குழு கரவெட்டி, மூன்றாம் இடம்:-வானதி குழு உடுவில்.

**விசேட தேவைக்குட்பட்டோர்யாழ்.மட்ட இளைஞர் விருதுப் போட்டியின்**

**பேச்சு-தமிழ்**

முதலாம் இடம்:-த.அன்றூட் ஜக்சன்- உடுவில், இரண்டாம் இடம்:-க.பிரகான்-உடுவில், மூன்றாம் இடம்:-ச.அமலசாம்-உடுவில், மூன்றாம் இடம்:-ஜே.லோகேஸ்வரி-உடுவில்.

**அறிவிப்பாளர் - தமிழ்**

முதலாம் இடம்:-சு.காயத்திரி-பருத்தித்துறை, இரண்டாம் இடம்:-க.பிரகான்-உடுவில், மூன்றாம் இடம்:-ச.அமலசாம்-உடுவில், மூன்றாம் இடம்:-சி.லக்சிகா-உடுவில்.

**இளம்பாடகர் - தமிழ்**

முதலாம் இடம்:-சு.காயத்திரி - பருத்தித்துறை, இரண்டாம் இடம்:-வி.விஜயலட்சுமி- சாவகச்சேரி, மூன்றாம் இடம்:-த.அமலநிதுசன்-உடுவில், மூன்றாம் இடம்:-த.அன்றூட் ஜக்சன்-உடுவில்.

**சித்திரம்**

முதலாம் இடம்:-அ.எப்சிபா-சாவகச்சேரி, இரண்டாம் இடம், ஜெ.சுரேஸ்-சாவகச்சேரி, மூன்றாம் இடம்:-இ.மதுலன்-சாவகச்சேரி.

**கிராமியப்பாடல்**

முதலாம் இடம்:-த.அமலநிதுசன்-உடுவில், இரண்டாம் இடம்:-வி.விஜயலட்சுமி-சாவகச்சேரி, மூன்றாம் இடம்:-வெ.யனுபா-உடுவில், மூன்றாம் இடம்:-ச.அலஸ்ரீனா-உடுவில்

**புத்தாக்க நடனம் பெண் குழு**

முதலாம் இடம்-க.ஜனனி-சாவகச்சேரி, இரண்டாம் இடம்-த.ந.கிருஸ்திகா- சாவகச்சேரி, மூன்றாம் இடம்:-கு.ஜனுசாயினி-சாவகச்சேரி.

என தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் அறிவித்துள்ளது. (இ-7)

# மாணவன் உயிர்மாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

தொலைபேசி வாங்குவதற்கு பணம் தர தாயார் மறுத்த காரணத்தினால் மாணவர் ஒருவர் விபரீத முடிவை எடுத்து தனது உயிரை மாய்த்த சம்பவம் நீர்வேலி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நீர்வேலி தெற்கை சேர்ந்த கிருஷ்ண பிள்ளை கோபு (வயது-17) என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த மாணவன் தொலைபேசி ஒன்றை வாங்குவதற்கு கடந்த 25 ஆம் திகதி தனது தாயிடம் ஒரு இலட்சம் ரூபாய் கேட்டுள்ளார். தாய் கொடுக்க மறுத்துள்ளார்.

மீண்டும் 26 ஆம் திகதி பணத்தை கேட்டு சண்டை பிடித்துள்ளார். தாய் தன்னிடம் பணம் இல்லை என தெரிவித்துள்ளார்.

தாயுடன் வாக்குவாதம் செய்து விட்டு தனது அறைக்குள் சென்றுள்ளார். தற்செயலாக தாய் அவரது அறையை எட்டி பார்த்த போது குறித்த மாணவன் தூக்கில் தொங்கிய படி காணப்பட்டார்.

இந்நிலையில் குறித்த மாணவனை ஏற்றிக்கொண்டு யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வரும் வழியில் கோப்பாய் கிருஷ்ணர் கோவில் பகுதியில் வேறு ஒரு இளைஞர் அம்புலன்ஸில் மோதுண்டு விபத்துக்குள்ளாகியிருந்தார்.

அந்த இளைஞரும் அதே வண்டியில் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை தூக்கில் தொங்கிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மாணவன் உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். (இ-9)

# யாழ்.சின்மயா மிஷனில் "பஜனை பயில்வோம்" பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். சின்மயா மிஷன், பிரார்த்தனை மண்டபத்தில் எதிர்வரும் 01/06/18 வெள்ளிக்கிழமை முதல், சின்மய ஸ்வராஞ்சலி அணியினரின் ஏற்பாட்டில், பஜனை பயில்வோம் - பயிற்சி வகுப்பு, மாலை 5 மணி முதல் 6 மணி வரை ஆரம்பமாகவுள்ளது.

ஆர்வலர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு யாழ். சின்மயா மிஷன் அழைப்பு விடுத்துள்ளது. அனுமதி இலவசம். (இ-7)




# திருஞானசம்பந்தர் குருபூசை தின திருமுறை மனனப்போட்டி பரிசளிப்பு

(யாழ்ப்பாணம்)

வண்ணை -சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகம் நடத்தும் திருஞானசம்பந்தர் குருபூசை தின திருமுறை மனனப் போட்டி பரிசளிப்பு விழா நாளை மறுதினம் வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பரிசளிப்பு விழாவுக்கு கைதடி நுணாவில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அதிபர் ஆதங்கவேலு முதன்மை விருந்தினராகக்கலந்துகொண்டு திருமுறை மனனப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்குவார்.

திருஞானசம்பந்தர் குருபூசையை முன்னிட்டு கடந்த 20.05.2018 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற திருமுறை மனனப்போட்டியில் முதல் 3 இடங்களை பெற்றவர்களின் விபரம் வருமாறு,

**பாலர் பிரிவு - தரம்-1**

1ஆம் இடம்:-கு.அக்ஷயா-யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை, 2ஆம் இடம்:-சி.லேகிஷா- யா/அளவெட்டி வடக்கு அ.மி.த.க பாடசாலை, 3ஆம் இடம்:- ர.தேனுஷா-யா/ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை.

**பாலர் பிரிவு - தரம்-2**

1ஆம் இடம்:- ஜெ.தனவர்ஷினி- யா/தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, 2ஆம் இடம்:- உ.தட்சா-யா/கல்வியங்காடு இ.த.க.பாடசாலை, 3ஆம் இடம்:- கி.டிலக்சன்-யா/தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி.

**கீழ் பிரிவு-தரம்-3**

1ஆம் இடம்:- சி.சுருதிகா-யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம், 2ஆம் இடம்:-ம.கமல்ஜா- யா/பாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை, 3ஆம் இடம்:- சி.வர்சவி- யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்.

**கீழ்ப்பிரிவு - தரம்-4**

1ஆம்இடம் ர.உஷாந்தன்-உரும்பிராய்கற்பகவிநாயகர் அறநெறிப்பாடசாலை, 2 ஆம் இடம்:- ஜெ.ஜெனோஜன்-யா/ கொக்குவில் ஸ்ரீஇராம கிருஸ்ண வித்தியாசாலை, 3 ஆம் இடம்:- வி.சிறிகலா- யா/ இந்து ஆரம்பபாடசாலை என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ



யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கமும் சிவகணேசன் புடைவையகமும் இணைந்து நடத்திய திருவள்ளுவர் விழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு, நல்லூர் ஸ்ரீதுர்க்காதேவி மணிமண்டபத்தில் தமிழ்ச்சங்கத் தலைவர் விரிவுரையாளர் ச.லலீசன்தலைமையில் நடைபெற்றது.

# ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக பொதுத் தேர்தல்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக பொதுத் தேர்தல் நடத்துவது தொடர்பில் ஜனாதிபதியின் ஆலோசகர்கள் அவதானம் செலுத்தியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பில் சட்டத்துறை வல்லுநர்கள் ஆராய்ந்து வருவதாகவும் நம்பத்தகுந்த வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், ஜனாதிபதியின் சிரேஷ்ட இணைப்புச் செயலாளர் தமது பேஸ்புக் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவு தொடர்பில் அரசியல் ஆய்வாளர்கள் அவதானம் செலுத்தியுள்ளனர்.

19ஆவது அரசியல் அமைப்புத் திருத்தத்துக்கு அமைய 1 (3) பிரிவின்படி அடுத்த ஜனாதிபதித் தேர்தல் 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அன்றி, 2020 ஓகஸ்ட் மாதமே நடைபெறுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# சுதந்திரக் கட்சிக்கு சவாலாக புதியகட்சி

## தயாசிறி தகவல்

(கொழும்பு)

சிறந்த அரசியல் பயணமொன்றை முன்னெடுப்பதற்கு தனியானதொரு கட்சியை உருவாக்க அரசாங்கத்திலிருந்து விலகிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்களும் தீர்மானித்து வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் இடம்பெற்ற ஊடகசந்திப்பொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.



"நாங்கள் 16 பேரும் அரசியல் பயணத்தை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு எமக்கென ஒரு தலைவர், தேசிய அமைப்பாளர் மற்றும் ஊடகப் பேச்சாளர் ஆகிய பதவிகளை உருவாக்க தீர்மானித்துள்ளோம்.

இதன்மூலம் கூட்டு எதிரணி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மற்றும் ஏனைய கட்சிகளுடன் ஒன்றிணைந்து அரசியல் பயணத்தை தொடரும் வாய்ப்பு உருவாகும்.

இதனால் நாங்கள் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியுடன் இணைவதோ அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் பொதுஜன முன்னணி இணைவதோ அல்ல. நாம் எப்போதும் சுதந்திரமான, நேர்மையான அரசியல் பயணத்தையே மேற்கொள்வோம்.

இதேவேளை எமது புதிய அரசியல் பயணத்தின் முதலாவது பயணம் மாத்தறையில் சிறப்பாக நடைபெற்றது. இதன் இரண்டாவது பயணம் மாத்தளையில் இடம்பெறும்" எனவும் தயாசிறி ஜெயசேகர மேலும் தெரிவித்தார். (இ-7)

# 13 இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க பிஸ்கட்டுகளுடன் ஒருவர் கைது!

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் தங்க பிஸ்கட்டுகளை எடுத்து வந்த ஒருவரை நேற்று முன்தினம் மாலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

குறித்த நபர் கொழும்பு பகுதியைச் சேர்ந்த 44 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவில் இந்திய விமான சேவைக்கு சொந்தமான AI 274 விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

குறித்த நபர் எடுத்து வந்த பிரயாணப்பையின் கைப்பிடியில் 3 தங்க பிஸ்கட்டுகளும் மேலும் 3 சிறிய தங்க பிஸ்கட்டுகளும் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த நபரிடம் இருந்து 225 கிராம் எடை கொண்ட 13 இலட்சத்து 46 ஆயிரத்து 100 ரூபா பெறுமதியுடைய தங்க பிஸ்கட்டுகள் மீட்கப்பட்டுள்ளதாக சுங்க ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இது தொடர்பில் சுங்க அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு தங்க பிஸ்கட்டுக்களை அரசுடைமை ஆக்கியதுடன் சந்தேக நபருக்கு 250,000 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# 25 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்து!

# காரில் சென்றோரைத் தேடி பொலிஸார் வலை வீச்சு

(ஹற்றன்)

ஹற்றன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹற்றன் கொழும்பு பிரதான வீதியின் குயில்வத்தை பிரதேசத்தில் கார் ஒன்று 25 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்திற்குள்ளாகியுள்ளதாக ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.



இச் சம்பவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 09.45 மணியளவில் இடம்பெற்றது.

குறித்த கார் நேற்று முன்தினம் இரவு ஹற்றனிலிருந்து கொழும்பு நோக்கி பயணிக்கும் போதே இவ்விபத்து இடம்பெற்றது.

குறித்த காரில் பயணிந்தவர்கள் மது அருந்திய நிலையில் காரைச் செலுத்தியமையினாலேயே குறித்த விபத்து ஏற்பட்டுள்ளதெனவும் மது அருந்தியமைக்கான ஆதாரங்கள் காரினுள் உள்ளனதெனவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இந்நிலையில் விபத்திற்குள்ளான கார் குறித்து எவரும் ஹட்டன் பொலிஸாருக்கு அறிவிக்கவில்லையென தெரிவித்த பொலிஸார் வாகன உரிமையாளரையும் வாகனத்தை செலுத்திய சாரதி மற்றும் அதில் பயணித்தவர்கள் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவித்தனர். (இ-7)

Chullipuram Rotaract Rotary Club Partner

சுழிபுரம் றோட்டறக்ட் கழகத்தினால் எதிர்கால சமூக சேவை அர்ப்பணிப்பு நிதிக்காக நடாத்தப்பட்ட அதிஸ்டலாப சீட்டிழுப்பின் முடிவுகள்.

சீட்டிழுப்பில் வெற்றி பெற்ற வெற்றி இலக்கங்கள்.

முதலாம் பரிசு இலக்கம்: 0085
இரண்டாம் பரிசு இலக்கம்: 3481
மூன்றாம் பரிசு இலக்கம்: 1646

ஆறுதல் பரிசுகள்

| | |
|---|---|
| 1)1206 | 4)2025 |
| 2)0418 | 5)3229 |
| 3)3225 | 6)0066 |

மேற்படி வெற்றி இலக்கங்களுக்குரிய அதிஸ்டசாலிகள் கீழே குறிப்பிட்ட தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (சி-2745)

Rtr.அ.சங்கரன்-077 106 0314

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் (VOGT)
கள உத்தியோகத்தர் பதவி வெற்றிடம்/ஆட்சேர்ப்பு

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம், இலங்கை சோசலிசக் குடியரசின் 1980ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புக்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதாகும்.

இந் நிறுவனத்திற்கு பின்வரும் தகைமையுடைய வடமராட்சியில் நிரந்தரமாக வசிக்கும் 18-40 வயதிற்குட்பட்ட இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவி வெற்றிடங்கள் எண்ணிக்கை-04

தகைமைகள்:

1. க.பொ.த (சாதாரணம்) சித்தி அல்லது அதற்கு மேற்பட்ட தகைமைகள்.
2. மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம்.
3. சமூக சேவை அனுபவம்/ ஆர்வம்.

சம்பளம்: சேவையின் அனுபவம், திறன்கள் அடிப்படையில் பேசித் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பதாரி சுயவிபரக்கோவையுடன் விண்ணப்பங்களை தலைவர், வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் (VOGT), அல்வாய் கிழக்கு, அல்வாய் என்ற முகவரிக்கு 11.06.2018 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

கல்யாணமாலை
சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 56 செவ் 8 இல்<br>உயரம்: 5<br>தகைமை/தொழில்: பொறியியலாளர் லண்டன் PR<br>தொ.இ: B/6650 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 3 ஆம் பாதம் கி.பா: 58 செவ் 8 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BSC MSC PHD ஆராய்ச்சியாளர் அமெரிக்கா<br>எதிர்பார்ப்பு: திருமணமாகி அன்றே பிரிந்து விவாகரத்து பெற்றவர்<br>தொ.இ: G/6057 |
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 1ஆம் பாதம்<br>கி.பா: 47 செவ் 12 இல்<br>தகைமை/தொழில்: A/L சொந்தத் தொழில்<br>தொ.இ: B/7740 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 4ஆம் பாதம்<br>கி.பா: 15<br>உயரம்: 165cm<br>தகைமை/ தொழில்: BSC MSC ஆசிரியர்<br>தொ.இ: G/6428 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>உயரம்: 6'2"<br>தகைமை/தொழில்: A/L நோர்வே PR<br>தொ.இ: B/7742 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 1ஆம் பாதம் கி.பா: 32 சூரிசெவ் 11 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: HNDA வங்கி ஊழியர்<br>தொ.இ: G/7922 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: மகம் 2 ஆம் பாதம்<br>கி.பா: 34<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: BBM CIMA CGMA தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: B/7745 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 2 ஆம் பாதம்<br>கி.பா: 42 சூரிசெவ் 8 இல்<br>தகைமை/தொழில்: A/L கணக்காளர்<br>தொ.இ: G/7927 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் பல்வேறு விடயங்கள் ஆராய்வு

## பிரதமர் ரணில் தலைமையில் நடைபெற்றது





(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. அபிவிருத்தி மீளாய்வுக் கலந்துரையாடல் நேற்று முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. யாழிலிருந்து கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கரடிப்போக்குச் பகுதியில் அமைந்துள்ள தும்பிரி விகாரையில் விசேட வழிபாட்டில் பங்கு கொண்டு ஆசிபெற்றார். தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு வருகை தந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அரசாங்க அதிபர் வரவேற்றார். தொடர்ந்து மாநாட்டு மண்டபத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் பிரதமர், மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், பா.ம. உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சி.சிறிதரன், வடக்கு மாகாண சபை விவசாய அமைச்சர் சிவநேசன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், வடக்கு மீள் குடியேற்ற அமைச்சின் செயலாளர் சுரேஸ் பொன்னையா, வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சு.அருமைநாயகம், மாகாண அமைச்சின் செயலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

ஆரம்பத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது. தொடர்ந்து தற்போது நிலவும் காணி, வீட்டுத் திட்டம், கல்வி, விளையாட்டு, நகர அபிவிருத்தி, சிறுகுளங்கள் உள்ளிட்ட விடயங்களில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பில் விளக்கம் அளிக்கப்பட்டது.

தொடர்ந்து மேற்குறித்த விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது.

இதன்போது பூநகரி மற்றும் பரந்தன் பகுதிகளை நகர திட்டமிடல் வரைபொன்றை சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டது. பூநகரி பகுதி சுற்றுலாவிற்கு பொருத்தமான பகுதி என்பதால் அங்கு நகர திட்டமிடல் ஒன்றை மேற்கொண்டு செல்வது தொடர்பில் நீண்டகாலமாக ஆலோசித்து வருவதாகவும் வடமாகாண சபை ஊடாக அபிவிருத்தி செய்வதற்கான திட்ட வரைபொன்றை தரு மாறும் அவர் கோரியிருந்தார்.

பூநகரி பகுதியில் பூநகரி குளம் அமைப்பதற்கான திட்டம் ஏற்கனவே இருந்த போதிலும் அதனை அபிவிருத்தி செய்வது தொடர்பிலும் திட்ட வரைபொன்றை மேற்கொள்ளுமாறும் பணிக்கப்பட்டது. அதேபோன்று கிளிநொச்சி சந்தை கட்டடத் தொகுதி, கிளிநொச்சியிலுள்ள சிறு குளங்களின் அபிவிருத்தி தொடர்பிலும் திட்ட வரைபுகளை தயாரிக்குமாறும் கோரப்பட்டதுடன், பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை தொடர்பிலும் குறிப்பிடப்பட்டது.

இதேவேளை பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனினால் 20 விடயங்கள் அடங்கிய கோரிக்கை சபையில் வாசிக்கப்பட்டது. கிளிநொச்சி நகரில் இராணுவத்தினரால் 90 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார். 500 ஏக்கர் வரையான காணி இராணுவத்தினர் வசமுள்ளதாகவும், அவற்றை விடுவிப்பது தொடர்பில் ஆராய்வதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார். (2)

# உப்பு நீரில் விளக்கெரியும் அன்னைக்கு நேற்று பொங்கல் விழா



(பனிக்கன்குளம்)

வரலாற்று சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் நேற்றுக் காலை முள்ளியவளை காட்டாவிநாயகர் ஆலயத்திலிருந்து மடைப்பண்டம் எடுத்து வரப்பட்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 14 ஆம் திகதி பாக்குத் தெண்டல் உற்சவத்தோடு ஆரம்பமாகி கடந்த 21 ஆம் திகதி உப்பு நீரில் விளக்கெரியும் அன்னைக்கு தீர்த்தம் எடுக்கும் வைபவம் முல்லைத்தீவு கள்ளப்பாடு தீர்த்தக்கரை பகுதியில் இடம்பெற்றது.

நேற்று முன்தினம் முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலயத்தில் பொங்கல் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து நேற்று திங்கட்கிழமை அதிகாலை முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலயத்திலிருந்து வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்துக்கு மடைப்பண்டம் எடுத்து வரப்பட்டு ஆலயத்தில் விசேட பொங்கல் வழிபாடுகள் இடம்பெற்றன. (2-281)

# இனந்தெரியாத நபர்களினால் மாரியன்னை சிலை உடைப்பு




(மன்னார்)

மன்னார் - சௌத்பார் கடற்கரைக்குச் செல்லும் பாதையில் புகையிரத நிலையத்துக்கு முன் பகுதியில் கத்தோலிக்க கன்னியர்மடம் அமைக்க ஒதுக்கப்பட்ட இடத்தில் அமைந்திருந்த மரியாள் சிலை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இனம் தெரியாத நபர்களினால் உடைத்து சேதப்படுத்தப்பட்டுள்ளது.

பல வருடங்களாக காணப்பட்ட சிறிய கோவில் போன்று அமைக்கப்பட்டு அதனுள் வைக்கப்பட்டிருந்த மரியாளின் சிலையே இனம் தெரியாத நபர்களினால் உடைத்து சேதப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த வீதியூடாக நேற்று பயணித்த மக்கள் குறித்த சிலை உடைக்கப்பட்ட நிலையில் காணப்பட்டதை கண்டு உரிய தரப்பினருக்கு தெரியப்படுத்தியுள்ளதோடு, மன்னார் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

அண்மைக் காலங்களாக மன்னார் மாவட்டத்தில் மதச் சிலைகள் இனம் தெரியாத நபர்களினால் உடைக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டு வருகின்றபோதும் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்ற போதும், சிலைகள் உடைப்பு தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (2)

# பேயாடி கூழாங்குளம் காணியை இராணுவ தேவைக்காக சுவீகரிப்பதை உடன் நிறுத்தவும்

## மீள்குடியேற்ற அமைச்சருக்கு மாகாணசபை உறுப்பினர் கடிதம்

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்திலுள்ள பேயாடி கூழாங்குளம் கிராமத்திலுள்ள பொதுமக்களின் காணிகளை இராணுவத் தேவைக்காக சுவீகரிப்பதை உடனடியாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனுக்கு வடக்கு மாகாண சபை உறுப்பினர் வைத்தியர் ப.சத்தியலிங்கம் அவசரக் கடிதமொன்றை நேற்று அனுப்பி வைத்துள்ளார்.


அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வவுனியா நகரத்திலிருந்து நான்கு கிலோமீற்றர் தொலைவில் ஏ-9 வீதியில் அமைந்துள்ள பழைய கிராமம் பேயாடிகூழாங்குளம் ஆகும். இங்கு பாடசாலை, பிரதேச சபையின் உப அலுவலகம், பொது நோக்கு மண்டபம், கடைத்தொகுதி, மத தலங்கள் மற்றும் மக்கள் குடியிருப்புகள் இருந்தன.


1990 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கையின் போது மேற்படி கிராமத்திலிருந்த மக்கள் இடம் பெயர்ந்ததை தொடர்ந்து இராணுவத்தினரால் இங்கு முகாம் அமைக்கப்பட்டு தற்போது 56 ஆவது பிரிகேட் இராணுவத் தளம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் 30.09. 2014 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி மூலம் இராணுவத் தேவைக்காக காணிகளை சுவீகரிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் 11 குடும்பங்களுக்கான 8.3 ஹெக்டேயர் காணி இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக மேற்படி முகாமைச் சூழவுள்ள மேலும் 5.96 ஹெக்டேயர் காணியை சுவீகரிப்பதற்கான முனைப்புகளை இராணுவத்தினர் ஆரம்பித்துள்ளதாக பொதுமக்களால் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் புதிதாக காணிகள் சுவீகரிக்க முயற்சிப்பதானது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாததாகும்.

இராணுவத்தினரால் பொதுமக்களின் காணிகள் சுவீகரிக்கப்படுவதை உடனடியாக தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் இராணுவத்தினர் வசமுள்ள காணிகளை பொதுமக்களிடம் மீள ஒப்படைப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (2-250)




# 42 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள்



நாட்டில் இடம்பெற்று முடிந்த யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வவுனியா வடக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட பிரதேசத்தில் வாழும் 42 குடும்பங்களுக்கு வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கத்தால் வாழ்வாதார உதவிகள் அண்மையில் வழங்கிவைக்கப்பட்டன.

மாகாணசபை உறுப்பினர்களுக்கான 2018ஆம் ஆண்டுக்கான நிதியொதுக்கீட்டில் மேற்படி வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன. நெடுங்கேணி கால்நடை வைத்தியர் பணிமனையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் 39 குடும்பங்களுக்கு நல்லின கோழிக் குஞ்சுகளும் 03 குடும்பங்களுக்கு ஆடு வளர்ப்பிற்கான காசோலைகளும் வழங்கி வைக்கப்பட்டன. (2-250)






வடக்கு மாகாணத்திற்கான உத்தியோகபூர்வ விஜயமொன்றை நேற்று முன்தினம் மேற்கொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு விஜயம் மேற்கொண்டு நடைபெற்ற அபிவிருத்தி மீளாய்வு தொடர்பான கலந்துரையாடலில் கலந்துகொண்டிருந்தார். இதன்போது மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடியதுடன், மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற நல்லாட்சி அரசு ஏற்பட்டதன் பின்னர் முன்னெடுக்கப்படுகின்ற அபிவிருத்திகள் தொடர்பான மீளாய்வு கலந்துரையாடலிலும் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தார். இக்கலந்துரையாடலில் அமைச்சர்களான டி.எம்.சுவாமிநாதன், விஜயகலா மகேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன், மாவை. சேனாதிராஜா, மாகாணசபை அமைச்சர்கள், உறுப்பினர்கள் , திணைக்கள அதிகாரிகள், இராணுவ உயர் அதிகாரிகள், பொலிஸார் எனப்பலர் கலந்து கொண்டிருந்தனர்.

(படங்கள்: கண்டாவளை, பரந்தன் செய்தியாளர்கள்.

# கிளிநொச்சி மாவட்டத்தின் அவசர தேவைகள்; சிறிதரன் எம்.பி. பிரதமருக்கு வலியுறுத்து

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் உடனடியாக தீர்வுகள் காணப்பட வேண்டிய அவசர தேவைகளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு யாழ். மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் வலியுறுத்தியுள்ளார்.

'கிளிநொச்சிக்கு நேற்றுக் காலை 10 மணிக்கு விஜயம் செய்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற அபிவிருத்தி மீளாய்வு தொடர்பான கலந்துரையாடலில் கலந்துகொண்டார்.

இதன்போதே சிறிதரன் எம்.பியினால் உடனடியாக தீர்வுகள் காணப்பட வேண்டிய விடயங்கள் வலியுறுத்தப்பட்டது. அவையாவன,

கிளிநொச்சி மாவட்டத்தின் நகர வடிவமைப்பை மேற்கொள்வதற்கு காணிகள் இராணுவத்தின் வசமுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் வலயக் கல்வி அலுவலகம் சொந்தமாக இயங்குவதற்கான கட்டடங்கள் இல்லை.

கடும் பாதிப்புக்கு உட்பட்டோருக்கான (உயிரிழப்பு) கொடுப்பனவாக 100,000 ரூபாவே வழங்கப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 12 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் மாதாந்த சமுர்த்திக் கொடுப்பனவைப் பெறுவதற்கு தகுதியுடையவர்களாக உள்ள போதும் தற்போது 7 ஆயிரம் பேருக்கே இக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது.

இம்மாவட்டத்தில் இன்னமும் 11 சமுர்த்தி முகாமையாளர்களுக்கும், 61 சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கும், 4 அலுவலக உதவியாளர்களுக்குமான பதவிகள் வெற்றிடங்களாகவே உள்ளன.

ஆனையிறவு உப்பளத்தின் நிர்வாக நடவடிக்கைகள் வடக்கு மாகாணத்தினுள் கொண்டு வரப்பட வேண்டும்.

மாவட்ட செயலகம், பிரதேச செயலகம், இலங்கை மின்சார சபை, நில அளவைத் திணைக்களம், மீன்பிடித் திணைக்களம், தபாலகங்கள், வங்கிகள் போன்ற பெரும்பாலான அரச திணைக்களங்களில் புதிதாக உள்வாங்கப்பட்டுள்ள மின்மானி வாசிப்பாளர்கள், சாரதிகள், அலுவலக உதவியாளர்கள் ஆகியோர் தென்பகுதியைச் சேர்ந்த சிங்களமொழி பேசும் இளைஞர்களாகவே யுள்ளனர்.

வட்டக்கச்சி அரசினர் விவசாயப் பண்ணை, விவசாயப் பாடசாலை என்பன 1954 களில் இருந்து 1900 வரை குண்டகசாலை விவசாயப் பாடசாலைக்கும், திருநெல்வேலி விவசாயப் பாடசாலைக்கும் நிகரான வகையில் இயங்கி வந்தன.

இந்நிலையில் 295 ஏக்கர் காணிப்பரப்பளவைக்கொண்ட இப்பண்ணை இன்று வரை இராணுவத்தளமாக வைத்திருக்கப்படுவது இந்த மாவட்டத்தின் உற்பத்தியை மட்டுமன்றி பல மக்களுடைய தொழில் வாய்ப்பையும் சிதைத்துள்ளது.

முழங்காவில் மரமுந்திரிகைத் தோட்டம் 1100 ஏக்கர், முழங்காவில் கடற்படை முகாம் 800 ஏக்கர், வட்டக்கச்சி அரசினர் விவசாயப் பண்ணை விவசாயப் பாடசாலை 295 ஏக்கர், முக்கொம்பன் தென்னந்தோட்டம் 180 ஏக்கர், சாந்தபுரம் பண்ணை 680 ஏக்கர், ஜெயபுரம் பண்ணை 120 ஏக்கர், மலையாளபுரம் பண்ணை 78 ஏக்கர் என்பவை இராணுவத்தின் சிவில் பாதுகாப்புப் பிரிவினரால் கையகப்படுத்தப்பட்டுள் ளன.

தங்களோடு நாங்கள் ஏற்கனவே பேசியதற்கிணங்க கிளிநொச்சி சேவைச்சந்தை புனரமைப்புக்கென மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, புனரமைப்பு, வடக்கு அபிவிருத்தி, மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சினால் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டது.

ஆனால் இன்றுவரை அந்த நிதி அமைச்சரவை யினால் விடுவிக்கப்படவில்லை.

மேலதிகமாக 21 இடங்களில் புகையிரதக் கடவைகள் அமைக்கப்பட வேண்டிய தேவை அவசியமானதாகவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள நீர்ப்பாசனக் குளங்களான கரியாலை நாகபடுவான் குளம், சின்னப்பல்லவராயன் கட்டுக்குளம், அக்கராயன்குளம், ஆனைவிழுந்தான் குளம், மாயவனூர் புழுதியாற்றுக் குளம், மலையாளபுரம் ஐயன்குளம் ஆகிய குளங்கள் விரைவாக புனரமைப்புச் செய்யப்பட வேண்டும்.

பரந்தன் இரசாயனத்தொழிற்சாலை இராணுவ முகாமாக காணப்படுகின்றது.

இத்தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பதன் மூலம் இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பை வழங்க முடியும்.


கிளிநொச்சி மாவட்டத்தில் புதிய கிராம அலுவலர் பிரிவுகள் உருவாக்கப்பட வேண்டியது அவசியமானதாகும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் தபால் சேவையை சீர் செய்யும் வகையில் புதிய தபாலகங்களை உருவாக்க வேண்டிய தேவைப்பாடு உள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் வடகிழக்குக் கரையோரமாக இருக்கின்ற கல்லாறு, பூனைத்தொடுவாய், பேய்ப்பாரப்பிட்டி கடற்பகுதிகள் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்குச் சொந்தமான கடல் இறைப்பகுதிகளைக் கொண்டுள்ளன. ஆனால் இங்கு தொழில் செய்கின்ற கடற்றொழிலாளர்கள் அனைவரும் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாகவே உள்ளனர்.

எனவே கிளிநொச்சி மாவட்ட மீன்பிடித் தொழிலாளர்களின் நன்மைகருதி யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களுக்குச் சொந்தமாகவுள்ள இக்கடற்பகுதிகளை இலங்கை வரைபடத்தினூடாக கிளிநொச்சி மாவட்டத்திற்கு விடுவிக்க வேண்டும்.

சிவில் பாதுகாப்புப் பிரிவின் கீழ் நடத்தப்படுகின்ற கிளிநொச்சி மாவட்ட முன்பள்ளிகளை அந்த இராணுவ வலையமைப்பிலிருந்து விடுவித்து வடக்கு மாகாண முன்பள்ளி செயற்பாட்டுத் திட்டத்திற்குள் அதே சம்பள அளவுத்திட்டத்தோடு உள்வாங்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். (2)




## தலைமன்னார் கிராமத்துக்கான பிரதான பாலம் திறந்த வைப்பு



(மன்னார்)

வடக்கு மாகாணசபை உறுப்பினர் எஸ்.பிரிமூஸ் சிறாய்வாவினால் தலைமன்னாரில் அமைக்கப்பட்ட, தலைமன்னார் கிராமத்திற்கான பிரதான பாலம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப் பட்டுள்ளது.

மன்னார் பிரதேசசபை உறுப்பினர் ராஜன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வின் போது, வடக்கு மாகாண சபையினால் அமுல் படுத்தப்பட்ட கிராமிய பாலத் திட்டத்தின் கீழ் அமைக்கப் பட்ட சுமார் 22 மீற்றர் கொண்ட குறித்த பாலம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

குறித்த திட்டத்தின் கீழ் வடக்கில் 87 கிராமிய பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், மன்னார் மாவட்டத்தில் 16 பாலங்களும் அமைக்கப்பட்டுள்ள நிலையில் தலைமன்னாரில் அமைக்கப்பட்ட பாலமே திறந்து வைக்கப் பட்டு மக்களின் போக்குவரத்திற்காக விடப்பட்டுள்ளது.

இதன்போது நிகழ்வில் அருட்தந்தை நவரெட்ணம் அடிகளார், வடக்கு மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி பா.டெனிஸ்வரன், மன்னார் பிரதேச சபையின் தலைவர் எம்.முஜாகிர் மற்றும் மன்னார் பிரதேசசபை உறுப்பினர்கள் ஆகியோர் இணைந்து திறந்து வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

## கால்நடை வைத்திய அலுவலகங்களில் வாகனமின்மையால் சேவையாற்றுவதில் சிக்கல்

### வடக்கு மாகாண கால்நடை வைத்திய அதிகாரிகள் சங்கம் குற்றச்சாட்டு

(குருமன்காடு)

வடக்கு மாகாணத்தின் கால்நடை வைத்திய அலுவலக பிரிவுகளில் உத்தியோகபூர்வ வாகனம் இல்லாத காரணத்தால் கால்நடை வைத்தியர்களால் பொது மக்களுக்கு பூரணமான சேவையை வழங்க முடியாமல் உள்ளது என வடக்கு மாகாண கால்நடை வைத்திய அதிகாரிகள் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பாக வடக்கு மாகாண கால்நடை வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளதாவது,

ஒரு சில திணைக்களங்களிலுள்ள வாகனங்கள் இருபது வருடத்துக்கும் அதிகமான பழைய வாகனங்களாதலால் அவை எப்போதும் அடிக்கடி பழுதுபடுகின்றன. இதனால் கால்நடை வைத்தியர்கள் களப் பணிகளின் போது பண்ணையாளர்களின் ஆட்டோக்களிலும் மோட்டார் சைக்கிள்களிலும் செல்ல வேண்டி ஏற்படுகிறது. வடக்கு மாகாணத்தில் அரைவாசிக்கும் அதிகமாக கடமை புரியும் பெண் வைத்தியர்களுக்கு இவ்வாறான பிற வாகனங்களில் செல்வதனால் அசௌகரியமான நிலைமை காணப்படுகின்றது.

மேலும் வடக்கு மாகாணத்தில் மட்டும் திணைக்களத்தின் தரம் 1 இற்குரிய சிரேஷ்ட கால்நடை வைத்தியர்களின் வேதன படியேற்றம் நிறுத்தப்பட்டுள்ளது. .

அத்துடன் மிக குறைந்த கொடுப்பனவுகளே வழங்கப்பட்டும் வருகின்றது எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர். (2-250)

# தனது ஆட்சிக்காலத்தில் இராணுவத் தளபதிகள் இலக்கு வைக்கப்பட்டதை மகிந்த மறந்துவிட்டார்

## சரத் பொன்சேகா நினைவுபடுத்தல்

(கொழும்பு)

தனது ஆட்சிக்காலத்தில் இராணுவத் தளபதிகளை இலக்கு வைத்ததை மகிந்த ராஜபக்ஷ மறந்து விட்டார் என்று அமைச்சரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.



"போர் வீரர்களை இந்த அரசாங்கம் இலக்கு வைப்பதாக மகிந்த ராஜபக்ஷ குற்றம்சாட்டுகிறார்.

ஆனால், தனது ஆட்சிக் காலத்தில் இராணுவத் தளபதிகளை தாம் இலக்கு வைத்ததை, மகிந்த ராஜபக்ஷ மறந்து விட்டார்.

மற்றவர்களுக்கு ஆலோசனைகளை வழங்குவதற்கு முன்னர், முதலில் அவர் அதனைப் பின்பற்றுபவராக இருக்க வேண்டும்." என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## வேளாங்கன்னி மாதா ஆலயத்திருவிழா

(யாழ்ப்பாணம்)

குருநகர் புனித வேளாங்கன்னி மாதா ஆலயத்திருவிழா நாளை புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். மாலை 5 மணியளவில் லோறன்ஸ் அடிகளாரின் குணமாக்கல் வழிபாடு இடம்பெறும். எதிர்வரும் முதலாம் திகதி நற்கருணைப் பெருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை காலை 6 மணியளவில் திருவிழா திருப்பலியும் திருச்சொருபப் பவனியும் இடம்பெறும். (இ-106)

## கிழக்குப் பல்கலை. விஞ்ஞான பீடம் காலவரையறையின்றி இடைநிறுத்தம்

(ஏறாவூர்)

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடத்தின் கல்வி நடவடிக்கைகள் வெள்ளிக்கிழமை மாலை முதல் காலவரையறையின்றி இடைநிறுத்தப்பட்டுள்ளதாக கிழக்குப் பல்கலைக்கழக பதில் பதிவாளர் அமரசிங்கம் பகிரதன் தெரிவித்துள்ளார்.

சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த அனைத்து மாணவர்களையும் நேற்று முன்தினம் மாலை 6 மணிக்கு முன்பு வளாகத்தினை விட்டு வெளியேறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பீடத்தைச் சேர்ந்த மாணவர்கள் சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகம், வந்தாறுமூலை வளாகம், திருகோணமலை வளாகம் ஆகியவற்றுக்குள் நுழைவதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## பொலிஸ் பொறுப்பதிகாரி கடமைகளை பொறுப்பேற்பு



(கரணவாய்)

நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக பி.எல்.கீர்த்திசிங்க பொலிஸ்மா அதிபரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இங்கு கடமையாற்றிய பிரியந்த களனரி பொலிஸ் நிலையத்திற்கு மாற்றலாகி சென்றதையடுத்து அவரின் இடத்துக்கு காலி மாவட்டத்தின் வதுரம பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் பரிசோதகராக கடமையாற்றிய பி.எல். கீர்த்திசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்

இவர் நேற்று திங்கட்கிழமை தனது கடமையினைப் பொறுப்பேற்றுக்கொண்டார். (இ-60)

## பாடசாலை பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய பரிசளிப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் யோகர் சுவாமி மண்டபத்தில் பாடசாலை அதிபர் தவகீஸ்வரன் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (முகாமைத்துவம்) ரி.மோகன்ராஜ் ஆகியோர் கலந்து கொள்வர். (இ

## சமைத்த உணவு குறித்து அவதானம் செலுத்துங்கள்

(கொழும்பு)

அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்காக சமைக்கப்பட்ட உணவுகளை வழங்கும் போது அவை உண்பதற்கு உகந்ததா என அவதானம் செலுத்துமாறு சுகாதார அமைச்சு, பொது மக்களிடம் கோரியுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட சுகாதார கல்வி பணியகத்தின் இயக்குநர், பபா பலிஹவடன இதனைத் தெரிவித்தார். (இ-7)



கோண்டாவில் இராமகிருஸ்ண மகா வித்தியாலயத்தின் மாணவர் பாராளுமன்ற அமர்வுகள் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதில் யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட சட்டத்துறை விரிவுரையாளர் திருமதி சயந்தன் துஷானி, யாழ். கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் திருமதி மேரிதிரேசா மரியதாஸ் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டு 2018 ஆம் ஆண்டுக்கான மாணவர் பாராளுமன்ற அமர்வுகளை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தனர். (படங்கள்:-கிஷோர்)







ஈவினை கற்பக விநாயகர் முன்பள்ளிக் கட்டடத் திறப்பு விழாவும் கௌரவிப்பு நிகழ்வும் கடந்த சனிக்கிழமை நிலையத் தலைவர் இ.அரிகரன் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வலி.தெற்கு பிரதேச சபைத் தவிசாளர் க.தர்சன் கட்டடத்தை நாடாவெட்டி திறந்து வைப்பதையும் பரிசளிப்பு மற்றும் கௌரவிப்பு நிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்:-சக்தி)



சாவகச்சேரி சங்கத்தானையில் அமைந்துள்ள தமிழ்க் கோட்ட மண்டபத்தில் தென்மராட்சி இலக்கிய அணியினரால் நடத்தப்பட்ட "தமிழமுதம்" இலக்கிய நிகழ்வு யாழ்.பல்கலைக்கழக பொருளியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ் எஸ் உதயகுமார் தலைமையில் நடைபெற்றது.
(படங்கள்:- விஜயவாசன்.சுபேசன்)

# கோத்தபாயவின் தோல்வி உறுதி!

## வாசுதேவ கணிப்பு



(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால் வெற்றி பெறுவது சிரமம் என நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கடந்த அரசாங்கத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக கடமையாற்றிய கோத்தபாய ராஜபக்ஷ இராணுவ முறைமைக்கு அமைய செயற்பட்டவர் எனவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.

கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்த தகுதியானவர் அல்ல. அவருக்குப் பதிலாக சமல் ராஜபக்ஷ தகுதியானவராக இருப்பார் என எண்ணுவதாகவும் வாசுதேவ தெரிவித்தார்.

சமல் ராஜபக்ஷ. ராஜபக்ஷ குடும்பத்தை சேர்ந்தவர் என்பதற்காகத்தான் இதனைக் கூறவில்லை எனவும் சமல் ராஜபக்ஷ நடுநிலையாக செயற்படக் கூடியவர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)




# நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்கக் கோரும்

# 20 ஆவது திருத்தச் சட்டமூலம் குறித்து மகிந்த அணி நாளை முக்கிய தீர்மானம்

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கான 20ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பில் நாளை புதன்கிழமை தீர்மானிக்கப்படுமென முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பாக அன்றைய தினம் எதிரணி தலைவர்களுடன் சந்திப்பை நடத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.



கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

20ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பான பிரேரணை கடந்த வெள்ளிக்கிழமை சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் கையளிக்கப்பட்டது.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவினால் சமர்ப்பிக்கப்பட்ட இந்தப் பிரேரணை நாடாளுமன்ற விவாதத்துக்காக எடுத்துக் கொள்ளப்படும் திகதி, வெகு விரைவில் அறிவிக்கப்படும் என்று சபாநாயகர் தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இது தொடர்பில் நாடாளுமன்ற கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையிலேயே, நாளை 20ஆவது திருத்தச் சட்ட மூலம் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படுமென முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இப்பிரேரணையின் பின்னணி மற்றும் இதன் உண்மையான நோக்கம் தொடர்பில் ஆராயவேண்டியுள்ளதாகவும் இதற்காக புதன்கிழமை ஒருங்கிணைந்த எதிரணியின் தலைவர்கள் ஒன்று கூடுகின்றனர் என்றும் மகிந்த தெரிவித்தார்.

அத்தோடு, தனிநபர் பிரேரணையாக நாடாளுமன்றில் கொண்டுவரப்படவுள்ள இந்தச் சட்டமூலத்துக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணி கேட்டுக் கொண்டுள்ளதுடன், நாட்டை அபிவிருத்தி பாதையின் கீழ் கொண்டுசெல்ல வேண்டுமென்றால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை இல்லாதொழிக்கப்பட்டு அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தருக்கு பதவியுயர்வு வழங்கல்



(கொழும்பு)

வெள்ளத்தில் சிக்கியிருந்தவர்களை மீட்பதற்கு முயற்சித்த போது நீரில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தருக்கு பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

பொலிஸ்மா அதிபரின் பணிப்பின் பேரில் இந்தப் பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

பொலிஸ் கான்ஸ்டபிளாக (88587) இருந்த இவருக்கு பொலிஸ் சார்ஜனாக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

மாதம்பைப் பொலிஸில் கடமையாற்றும் இவர் 29 வயதுடைய திருமணம் ஆகாதவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)



நயங்கன்புளியடி முருகன் கோவிலில் நேற்று முன்தினம் நடைபெற்ற வேட்டைத் திருவிழாவை முன்னிட்டு நெல்லியடி நகரப் பகுதியில் சுவாமி வீதி வலம் வரும் போது..
(படங்கள்:-மகாலிங்கம்)

# பாரதம்

## ஸ்டெர்லைட் ஆலைக்கு சுற்றுச்சூழல் அனுமதி நான் வழங்கவில்லை

### முன்னாள் மத்திய அமைச்சர் ஜெய்ராம் மறுப்பு



(டில்லி)

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலைக்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்கியதில் எனக்கு எந்த தொடர்பும் கிடையாது என்று முன்னாள் மத்திய அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் கூறினார்.

தூத்துக்குடியில் உள்ள ஸ்டெர்லைட் ஆலையை மூடக்கோரி மக்கள் போராடி வருகின்றனர். 100ஆவது நாள் போராட்டத்தின்போது நடந்த வன்முறையில் 13 பேர் பொலிஸ் துப்பாக்கி சூட்டில் பலியாகினர்.

இந்த நிலையில் ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியின்போது அப்போதைய சுற்றுச்-சூழல் அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ், ஸ்டெர்லைட் ஆலைக்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்கியதாக சில ஊடகங்களில் செய்திகள் வெளியாயின.

இதை மறுத்து காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான ஜெய்ராம் ரமேஷ் நேற்று முன்தினம் ஒரு அறிக்கை வெளியிட்டார். அதில் அவர் கூறியிருப்பதாவது.

இதில் எந்த உண்மையும் இல்லை என்பதை அது தொடர்பான தகவல்களே கூறும். சுற்றுச்சூழல் மற்றும் வன இலாகா அமைச்சராக நான் 2009ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி நியமிக்கப்பட்டேன்.

ஆனால்ஸ்டெர்லைட்ஆலை 3 சுற்று அனுமதிகளை 2007 மார்ச்30, 2007 ஓகஸ்ட் 9 மற்றும் 2009 ஜனவரி 1 ஆகிய நாட்களில் பெற்றுள்ளது. எனவே இந்த அனுமதிகள் எல்லாமே நான் சுற்றுச்சூழல் அமைச்சராக பதவி ஏற்பதற்கு முன்பாக வழங்கப்பட்டவை.

மேலும் சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவது தொடர்பாக நாடாளுமன்ற மக்களவையில் 2010 மார்ச் 10 மற்றும் 2010 ஓகஸ்ட் 11 ஆகிய நாட்களில் உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதில் அளித்து இருக்கிறேன். அமைச்சகத்தில் எனக்கு அளிக்கப்பட்ட அனுவல்பூர்வ தகவல்களின் அடிப்படையில் இதை தெரிவித்து இருக்கிறேன். எந்த நேரத்திலும்நான்நாடாளுமன்றத்தை தவறாக நடத்தியதில்லை.

ஆனாலும் ஸ்டெர்லைட் ஆலைக்கு நான் சுற்றுச்சூழல் அனுமதி வழங்கியதாக தொடர்ந்து தவறான செய்திகள் வெளிவருவதால் பதில் சொல்லும் நிலைக்கு தள்ளப்பட்டு இருப்பதால் இந்த அறிக்கையை வெளியிடுகிறேன். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். (7)

## தூத்துக்குடி கலவரத்தில் காயமடைந்தவர்களை நேரில் சென்று நலன் விசாரித்தார் ஓ.பி.எஸ்





(தூத்துக்குடி)

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையை மூடக்கோரி நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிசூட்டில் காயமடைந்தவர்களை தமிழக துணை முதல்வர் பன்னீர்செல்வம் நேரில் சென்று சந்தித்துள்ளார்.

தூத்துக்குடி அரசு வைத்தியசாலைக்கு நேற்றுக் காலை பயணித்த துணை முதல்வர், அங்கு சிகிச்சை பெற்று வருவோரிடம் நலம் விசாரித்துள்ளார்.

துணை முதல்வருடன் அமைச்சர்களான ஜெயக்குமார், கடம்பூர் ராஜூ ஆகியோரும் உடன் சென்று காயமடைந்தவர்களிடம் நலன் விசாரித்துள்ளனர்.

தூத்துக்குடியில், ஆர்ப்பாட்டத்தின் போதான பொலிஸாரின் அடாவடியில் 43 பேர் காயமடைந்த நிலையில் தூத்துக்குடி அரசு வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். தூத்துக்குடியில் தொடர்ந்து நீடித்த பதற்றத்தினால் அங்கு 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்த தடை உத்தரவு நேற்று முன்தினம் நீக்கப்பட்டதை தொடர்ந்து துணை முதல்வர் அங்கு விஜயம் செய்துள்ளார்.

தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலையை மூடக்கோரி நடத்தப்பட்ட தொடர் போராட்டத்தின் 100ஆவது நாளன்று ஆட்சியர் அலுவலகம் நோக்கி ஆர்ப்பாட்டக் காரர்கள் பேரணியாக சென்றபோது, ஆர்ப்பாட்டக்காரர்களை கலைக்க பொலிஸார் தடியடி மற்றும் கண்ணீர் புகை தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அதனையும் மீறி பேரணி தொடர போராட்டம் வன்முறையாக மாறியதுடன், ஆர்ப்பாட்டக்காரர்களை அடக்க பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர். இதில் 13 பேர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (7)

## ஸ்டெர்லைட் ஆ

## புழல் சிறை

## 22 பேருடன்

## சிறைச்சாலையில்

(சென்னை)

ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூட வேண்டும், துப்பாக்கிசூடு நடத்திய பொலிஸார் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி புழல் சிறையில் 23 பேருடன் வேல்முருகன் 2ஆவது நாளாக உண்ணாவிரதம் மேற்கொண்டு வருகிறார்.

கடந்த மாதம் முதலாம் திகதி உளுந்தூர்பேட்டை அருகே செங்குறிச்சியில் உள்ள சுங்கச்சாவடி தாக்கப்பட்டது.

இந்த போராட்டத்தில் ஈடுபட்ட தமிழக வாழ்வுரிமை கட்சி தலைவர் வேல்முருகன பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்ட அவர் சென்னை புழல் சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்த நிலையில் வேல்முருகன் நேற்று முன்தினம் காலை புழல் சிறையில் திடீர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டார்.

ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூட வேண்டும். துப்பாக்கிச்சூடு நடத்திய பொலிஸார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அங்கு உண்மை

## ஜெயலலிதா ம

## ஓ.பி.எஸ்.ஐ

(சென்னை)

ஜெயலலிதா மரணம் தொடர்பாக விசாரித்து வரும் ஆறுமுகசாமி தலைமையிலான விசாரணை ஆணையம் ஓ.பன்னீர்செல்வத்தை விசாரிக்க முடிவு செய்துள்ளது.

ஜெயலலிதா மரணத்தில் மர்மம் இருப்பதாக துணை முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் உட்பட பல்வேறு தரப்பினரும் சந்தேகம் எழுப்பினார்கள்.

இதையடுத்து அதுபற்றி விசாரணை ஆணையம் அமைத்து விசாரிக்கப்படும் என்று முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி அறிவித்தார்.

அதன்படி கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் 28 ஆம் திகதி ஓய்வு பெற்ற நீதிபதி ஆறுமுகசாமி தலைமையில் ஒரு நபர் விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டது. அந்த ஆணையம், ஜெயலலிதா மரணத்தில் உள்ள மர்மங்கள் குறித்து விசாரணை நடத்தி வருகிறது.

ஜெயலலிதாவுக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டபோது உடன் இருந்தவர்கள், சிகிச்சை அளித்த வைத்தியர்கள் மற்றும் பல்வேறு தரப்பினரை அந்த ஆணையம் சம்மன் அனுப்பி வரவழைத்து விசாரித்து வருகிறது. சசிகலா குடும்ப உறுப்பினர்களிடமும் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையே சசிகலாவின் சட்டத்தரணி ராஜா செந்தூர் பாண்டியன், ஆணையத்தில் ஆஜராகி வாதிட்டு வருகிறார். ஜெயலலிதா மரணத்தில்

## பாக்.படையினருடனான துப்பாக்கிச் ச
## ஆறு பயங்கரவாதிகள் சுட்டுக் கொ

(கராச்சி)

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் பாதுகாப்பு படையினர் உடனான துப்பாக்கிச் சண்டையில் 6 பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் சில பயங்கரவாதிகள் பதுங்கி இருப்பதாக பாதுகாப்பு படையினருக்கு ஒரு தகவல் கிடைத்தது.

இதையடுத்து அந்த இடத்தை பாதுகாப்பு படையினர் சுற்றிவளைத்து, பயங்கரவாதிகளை பிடிக்க முயற்சி செய்துள்ளனர்.



பாதுகாப்பு படையினர் வருவதை அறிந்த பயங்கரவாதிகள் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர். இதையடுத்து பாதுகாப்பு படையினர் பதில் தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்த துப்பாக்கிச் சண்டையில் ஆறு பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



# வெளிநாடு

## ஆலையை மூடக்கோரி
## ...றையில் வேல்முருகன்
## ...ன் உண்ணாவிரதம்
## ...பில் பரபரப்பு



நிலையை கண்டு அறிய வேண்டும் என்பன உட்பட பல்வேறு கோரிக்கைகளுக்காக இந்த உண்ணா விர்தத்தை தொடங்கினார். தொடர்ந்து சாப்பிட மறுத்த வேல்முருகன் நேற்று 2ஆவது நாளாக புழல் சிறையில் உண்ணாவிரதம் இருந்து வருகிறார். தனது கோரிக்கை நிறைவேறும் வரை உண்ணா விரதம் தொடரும் என்று அறிவித் துள்ளார்.

அவரது கோரிக்கைகளுக்கு ஆதர வாக புழல் சிறையில் அடைக்கப்பட் டுள்ள பெரியார் திராவிடர் கழக தொண்டர்கள், புரட்சிகர இளைஞர்கள் முன்னணி, தமிழ் தேசிய மக்கள் இயக்கம் ஆகியவற்றை சேர்ந்தவர்களும் நேற்று முதல் உண்ணா விரதம் இருக்கிறார்கள். ஏற்கனவே வேல்முரு கன் உண்ணாவிரதம் இருந்து வரும் நிலையில், இப்போது 3 இயக்கங்களை சேர்ந்த மேலும் 22 பேர் உண்ணா விரதம் தொடங்கி உள்ளனர்.

வேல்முருகனுடன் மொத்தம் 23 பேர் உண்ணாவிரதம் இருக்கிறார்கள்.

வேல்முருகன் நேற்று 2ஆவது நாளாக உண்ணா விரதம் இருப்பதால் அவருடைய உடல்நிலை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. புழல் சிறையில் 23 பேர் உண்ணாவிரதம் இருப்பதால் அங்கு பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (7)

## ...ா மரணத்தில் சர்ச்சை
## ...ஐ விசாரிக்க முடிவு

சந்தேகம் தெரிவித்தவர்களிடம் அவர் குறுக்கு விசாரணையும் நடத்தினார்.

இந்த நிலையில், இந்த விசாரணைக்கு துணை முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வத்தையும் அழைக்க வேண்டும் என்று சட்டத்தரணி ராஜா செந்தூர்பாண்டியன் கோரிக்கை விடுத்தார். ஜெயலலிதாவுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சைகள் குறித்து ஓ.பி.எஸ். நிறைய குற்றச்சாட்டுக்களையும், சந்தேகங்களையும் வலியுறுத்தி கூறி இருப்பதால் அவரை அழைத்து விசாரிக்க வேண்டியது அவசியமாகும் என்று சசிகலாவின் சட்டத்தரணி ராஜா செந்தூர் பாண்டியன் தெரிவித்தார். (7)

## பாகிஸ்தான் பாராளுமன்றத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி ஆஷிப் அலி போட்டி

(கராச்சி)

பாகிஸ்தானில் எதிர்வரும் ஜூலை 25ஆம் திகதி நடக்கவிருக்கும் பாராளுமன்ற தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி பாகிஸ்தான் மக்கள் கட்சி சார்பில் போட்டியிடுகிறார்.

பாகிஸ்தானில் எதிர்வரும் ஜூலை 25 ஆம் திகதி பாராளுமன்ற தேர்தல் நடக்கிறது.

அதில் முன்னாள் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி (வயது62) பாகிஸ்தான் மக்கள் கட்சி சார்பில் போட்டியிடுகிறார்.

இத்தகவலை சிந்து மாகாண முதலமைச்சர் சயீத் முராத் அலிஷா அளித்த இப்தார் விருந்தின் போது அறிவித்தார்.

இவர் தனது சொந்த தொகுதியான நவாப்ஷாவில் களம் இறங்குகிறார். இதன் மூலம் அவர் 24 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் நேரடி அரசியலுக்கு வருகிறார். (7)

## ...் சமரில் ...கொலை

மேலும் 3 பேர் தப்பியோடி விட்டதாகவும் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

கொல்லப்பட்ட அனைவருக்கும் கடந்த ஆண்டு பஞ்சாப் மாகாண முதலமைச்சர் அலுவலகம் அருகே நடத்தப்பட்ட தாக்குதலில் தொடர்பு இருக்கலாம் என கூறப்படுகிறது. அந்த தாக்குதலில் 26 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

## நிலவில் நடந்த நாசா விண்வெளி வீரர் அலன்பீன் உடல் நலக்குறைவால் மரணம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் 'நாசா' மையத்தைச் சேர்ந்த விண்வெளி வீரர் அலன் பீன் உடல் நலக்குறைவால் உயிரிழந்துள்ளார்.

86 வயதான அலன் பீன் உடல்நலம் சரியில்லாத காரணத்தினால் அவதிப்பட்டமையினால் ஹூஸ்டனில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த அவர் கடந்த சனிக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்நிலையில் அவரது மரண செய்தியை நாசா விண்வெளி மையம் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

1932 மார்ச் 15 ஆம் திகதி பிறந்த அலன் பீன் 1946 இல் அமெரிக்க கடற்படைச் சோதனை ஓட்ட விமானத்தின் விமானியாக பணிபுரிந்து 1963 ஆம் ஆண்டில் 'நாசா' விண்வெளி மையத்தில் இணைந்து பணியாற்றினார். (7)

## மலேசிய விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதற்கும் எங்களுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை

### ரஷ்ய ஜனாதிபதி புடின் மறுப்பு

(மொஸ்கோ)

2014ஆம் ஆண்டு மலேசிய விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதற்கும், எங்களுக்கும் எந்த தொடர்பும் இல்லை என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.



உக்ரைனில் கடந்த 2014 ஆம் ஆண்டு அரசியல் நிலையற்ற தன்மை ஏற்பட்ட போது, கிரீமியா பகுதி மக்கள் ரஷ்ய கூட்டமைப்பில் இணைய விருப்பம் தெரிவித்தனர். இதனால், ரஷ்ய இராணுவ படைகள் கடந்த 2014ஆம் ஆண்டு கிழக்கு உக்ரைன் பகுதிக்குள் ஊடுருவி கிரீமியா பகுதியை மீண்டும் ரஷ்யாவுடன் இணைத்தது.

அந்தாண்டில் ஜூலை 17 ஆம் திகதி மலேசிய ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் எம் எச்-17 விமானம் ஆம்ஸ்டர்டாம் நகரிலிருந்து, மலேசிய தலைநகர் கோலாலம்பூர் நோக்கி 298 பயணிகளுடன் சென்றது. அப்போது ஒரு ஏவுகணை இந்த விமானத்தை தாக்கியதில் விமானத்தில் பயணம் செய்த அனைவரும் கொல்லப்பட்டனர்.

விமானத்தை சுட்டு வீழ்த்தியது யார் என அறிய சர்வதேச அளவில் கூட்டு விசாரணை குழு ஒன்று அமைக்கப்பட்டது.

அந்த குழுவின் விசாரணை அறிக்கையின்படி, ரஷ்யாவின் விமான எதிர்ப்பு ஏவுகணை பிரிவிலிருந்து தான் பக்-டெலர் ரக ஏவுகணை ஏவப் பட்டு, மலேசிய விமானம் வீழ்த்தப்பட்டதாகவும் ஆனால் ஏவுகணையை உபயோகித்தது யார் என்பது குறித்து தெரிய வில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, நெதர்லாந்து நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஸ்டெப் பிளாக், விமானம் தாக்கப்பட்ட சம்பவத்தில் ரஷ்யாவிற்கு நேரடி தொடர்புள்ளதாக தெரிவித்துள்ளார்.

ஸ்டெப் பிளாக்கின் இந்த கருத்து சர்வதேச அளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ள நிலையில், மலேசிய விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதற்கு, ரஷ்யாவுக்கும் எந்த தொடர்பும் இல்லை என அந்நாட்டு ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார். (7)

## சிரியாவில் பயங்கரவாதிகள் தாக்குதல் 35 இராணுவ வீரர்கள் உயிரிழப்பு



(டமாஸ்கஸ்)

சிரியாவின் டெய்ர் அல்-சோர் பகுதியில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் நடத்திய ஆவேச தாக்குதலில் 35 இராணுவ வீரர்கள் உயிரிழந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்துக்கு எதிரான ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் ஜிஹாதி குழுவினர் நாட்டின் பல பகுதிகளை கையகப்படுத்தி, தங்களது ஆதிக்கத்தின்கீழ் வைத்து நிர்வகித்து வருகின்றனர். இதுதவிர, ஐ.எஸ். பயங்கரவாதிகளும் சில பகுதிகளை கைப்பற்றி தங்களது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளனர். இந்த குழுக்களையும் வேட்டையாட ரஷ்ய விமானப் படையின் துணையுடன் அந்நாட்டு முப்படைகளும் தீவிரமாக போரிட்டு வருகின்றன.

இதற்கிடையே, கடந்த சில தினங்களுக்கு முன் நடைபெற்ற சண்டையில் கூட்டுப்படையினர் ஐ.எஸ். பயங்கரவாதிகளிடம் இருந்து கடைசி நகரையும் கைப்பற்றினர்.

இந்நிலையில், டெய்ர் அல்-சோர் மாகாணத்தில் உள்ள மயாதின் நகரில் சிரியா மற்றும் ரஷ்யாவை சேர்ந்த இராணுவ வீரர்கள் நேற்று பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அவர்கள் மீது ஐ.எஸ். பயங்கரவாதிகள் கொலைவெறி தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 35 இராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த துப்பாக்கிச் சண்டையில் 43 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களில் 26 பேர் சிரியாவை சேர்ந்தவர்கள் எனவும், 9 பேர் ரஷ்யாவை சேர்ந்தவர்கள் எனவும் கூறப்படுகிறது. முன்னதாக இந்த பகுதியில் உள்ள அரசு ஆயுத கிடங்கை குறிவைத்து சில பயங்கரவாதிகள் நேற்றிரவு நடத்திய தாக்குதலில் 4 ரஷ்ய இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (7)



## 20 ஐ முழுமையாக எதிர்க்கின்றேன்

# சட்டம் அறியாத குழந்தைகளுக்கு அரசியலமைப்பில் விளையாட இடமில்லை

### ஜே.வி.பியை நோக்கி கம்மன்பில விமர்சனம்



**(கொழும்பு)**

**சட்டம் அறியாத குழந்தைகளுக்கு, நாட்டின் அரசமைப்பில் விளையாட இடமளிக்க முடியாதெனத் தெரிவித்த பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில, அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தை முழுமையாக எதிர்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில், அவர் மேலும் தெரிவிக்கையில், மக்கள் விடுதலை முன்னணியினரால் (ஜே.வி.பி) கொண்டுவரப்படும் அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தை, தாம் முழுமையாக எதிர்ப்பதாகவும் இந்தத் திருத்தம், எந்த அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென்பது குறித்து நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்தவுள்ளதாகவும் கூறினார்.

நாட்டின் சட்டம் அறியாத குழந்தைகளுக்கு, அதனை விளையாட்டுப் பொருளாக்கிக் கொள்ள இடமளிக்க முடியாதென்று குறிப்பிட்ட அவர், மக்கள் விடுதலை முன்னணியானது ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட சந்தர்ப்பங்களில் 4 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளை என்றுமே பெற்றுக்கொண்டதில்லையெனச் சுட்டிக்காட்டினார்.

எனவே, அக்கட்சிக்கு ஜனாதிபதித் தேர்தல் பெரும் இடையூறாக அமைந்துள்ளதென்றும் அதனாலேயே அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தைக் கொண்டுவர முயற்சிக்கின்றதென்றும் உதய கம்மன்பில மேலும் தெரிவித்தார். (இ-7)

# சீரற்ற காலநிலையால் பாதிப்புக்குள்ளான பாடசாலைகள், மாணவர்கள் குறித்து அறிக்கையிட விசேட குழு நியமனம்

### கல்வியமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

சீரற்ற காலநிலையினால் பாடசாலை மற்றும் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை அறிக்கையிடுவதற்காக, கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசத்தின் ஆலோசனைக்கு அமைய விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு மாகாண மற்றும் வலய மட்டத்திலும் பிரதேச செயலக மட்டத்திலும் பாடசாலைகளுக்கும் மாணவர்களுக்கும் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் குறித்த விபரங்களை கல்வி அமைச்சுக்கு வழங்கும் என்று கல்வி அமைச்சின் இராஜாங்க செயலாளர் திஸ்ஸ ஹேவாவிதாரண தெரிவித்துள்ளார்.

இந்தக் குழுவின் அறிக்கை கிடைத்தவுடன் மாணவர்களுக்கு சீருடை, பாடப் புத்தகங்கள், பாதணிகள் உள்ளிட்ட பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட உள்ளன.

இதேவேளை இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளை உடனடியாகப் புனரமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் கல்வி அமைச்சின் இராஜாங்க செயலாளர் திஸ்ஸ ஹேவாவிதாரண மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# திண்மக்கழிவு அகற்றலுக்குத் தேவையான நிதியை அரசினூடாக பெற்றுக்கொள்ள நடவடிக்கை

### அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு



(கொழும்பு)

எதிர்வரும் 80 வருட கால பகுதிக்கு திண்மக் கழிவகற்றலுக்காகத் தேவைப்படும் நிதியினை அரசாங்கத்தினூடாகப் பெற்றுக் கொள்ள தீர்மானித்துள்ளதாக மாநகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

மொரட்டுவ கடுபெத்த பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மீதொட்டமுல்ல குப்பை மேடு பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அரசாங்கம் உலக வங்கியிடம் கடனுதவி கேட்டதாகவும் பின்னர் உலக வங்கியினூடாக அது நிராகரிக்கப்பட்டதாகவும் கருத்து வெளியிட்டிருந்தனர். ஆனால் அது பொய்யான விடயமாகும்.

அரசாங்கத்தால் திண்மக்கழிவு அகற்றலுக்கான கடன் உதவியைப் பெற்றுக் கொள்ளும் திட்டம் எதுவும் முன்வைக்கப்படவில்லை.

ஆனால் எதிர்வரும் 80 வருடகாலப் பகுதிக்கும் கொழும்பு உள்ளிட்ட ஏனைய நகரங்களிலுள்ள திண்மக் கழிவுகளை அகற்றுவதற்கு தேவையான நிதியினை அரசாங்கத்தினூடாகப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அலோசியஸிடம் பணம் பெற்றவர்கள் பற்றிய விபரங்கள் வெளியிடப்பட வேண்டும்-அமரவீர



(கொழும்பு)

சர்ச்சைக்குரிய பேர்பெச்சுவல் ட்ரெஸரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸிடம் பணம் பெற்றுக் கொண்டவர்கள் பற்றிய விபரங்கள் வெளியிடப்பட வேண்டுமென விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அர்ஜுன் அலோசியஸிடம் எவரேனும் பணம் பெற்றுக் கொண்டிருந்தால் அது பற்றிய விபரங்கள் அம்பலப்படுத்தப்பட வேண்டுமென அவர் தெரிவித்தார்.

இவ்வாறு பணம் பெற்றுக் கொண்ட அனைவருக்கும் தராதரம் பாராது தண்டனை விதிக்கப்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### கடைசி நிமிட மனிதர்கள்!

உயர் அதிகாரி ஒருவருடன் பேசிக் கொண்டிருந்தேன். வீட்டு மனைகளுக்கும் Flat களுக்கும் விண்ணப்பிக்கிறவர்கள் பெரும்பாலும் கடைசி நிமிடம் தான் விண்ணப்பிக்கின்றார்களாம்.

விண்ணப்பிக்க மொத்தம் பத்து நாட்கள் அவகாசம் என்றால் முதல் மூன்று நாட்களில் 5 சதவிகிதம் பேர்தான் விண்ணப் பிப்பார்களாம். அடுத்த மூன்று நாட்களில் 15 சதவிகிதம் பேர்களாம்.

அடுத்த இரு நாட்களில் 25 சதவிகிதம் பேர்களாம். கடைசி இரு தினங்களில் 55 சதவிகிதம் பேர்.

பொருட்காட்சி நடத்துபவர்கள்; கண்காட்சி நடத்துபவர்கள், Sale என்கிற அதிக பட்ச கழிவு தரப்படும் கடைகளை நடத்து பவர்கள் என்று பலரும் நம்மவர்கள் கடைசி நிமிட மனநிலை உள்ளவர்களோ என்று அடித்துப் பேசுகிறார்கள்.

இன்று கடைசி நாள். எனவே அதிகமான கூட்டம் என்கிற வாக்கியத்தை நீங்களும் பலமுறை வெவ்வேறு சந்தர்ப்பங்களில் கேள்விப்பட்டிருப்பீர்கள்.

டிக்கெட் வாங்கணுமா? கடைசி நிமிடம் ஹவுஸ் புள், ரேஷன் வாங்கணுமா? கடைசி நிமிடம் எல்லாப் பொருட்களும் விற்றுத் தீர்ந்து விட்டன. வெளியில் புறப்படணுமா? கடைசி நிமிடம் வழியெல்லாம் பதற்றம். சமயங்களில் விபத்து. பிறந்த நாள் பரிசு வாங்கணுமே! கடைசி நிமிடம் கடையெல்லாம் மூடிட்டாங்களே! செலவைச் சரிக்கட்ட கடன் வாங்கணுமே! கடைசி நிமிடம் இப்பத் தானே அவரு வந்து வாங்கிட்டுப் போறாரு!

இந்த மனநிலை என்னைச் சற்று வியக்க வைக்கிறது. கையில் இருப்பது தீரப் போகிறது என்றதுமே (அது என்னவாக இருந்தாலும் சரி) அதை இடைவெளி இல் லாமல் பெறுவதற்கான முயற்சியை வெகு முன்கூட்டியே தொடங்கிவிட வேண்டும்.

"அதான் கொஞ்சம் இருக்கெல்லா; அப்புறம் என்ன அவசரம்?" என்று உற்சாகத்தைக் குறைக்கிற மனிதர்களைச் சமாதானப்படுத்திவிட்டு அதைப் பெறுவதற்கான முயற்சிகளைத் தொடங்கிவிட வேண்டும்.

"இப்படிக் கடைசி நிமிடத்தில் சொன்னா எப்படி? "என்று வாங்கிக் கட்டிக் கொள்கிற திட்டைவிட இது எவ்வளவோ தேவலை.

கடைசி நிமிட மனநிலையை நம்மிடமிருந்து விரட்ட வேண்டும். வரட்டும் பார்க்கலாம் என்கிற மனோபாவத்தை உதற வேண்டும்.

கடைசி நிமிடம் இதைச் சாதித்தேன் என்று சொல்லிவிட்டுச் சிரிப்பவர்களைவிட முதலிலேயே முடித்துவிட்டேன் என்று சொல் லுகிறவர்களின் புன்னகைக்குத் தான் உண்மையில் மதிப்பு அதிகம்.

நம் முயற்சிகளை நன்கு கால அவகாசம் இருக்கும் போதே மேற்கொள்ளுவதில் ஒரு தனி இன்பம் இருக்கிறது. வாருங்கள் இந்த இனிமையான உலகை அறிமுகம் செய்து கொள்வோம்.

**லேனா தமிழ்வாணன்**

# O/L, A/L பரீட்சார்த்திகளுக்கு வினாக்களை வாசிக்க 10 நிமிடம்

## பரீட்சைகள் ஆணையாளர் தகவல்


(கொழும்பு)

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை மற்றும் க.பொ.த. உயர்தரப் பரீட்சை என்பவற்றுக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு ஒவ்வொரு பாடத்துக்கும் விடை எழுத வழங்கப்படும் கால அளவை 10 நிமிடங்களால் அதிகரிப்பதற்கு பரீட்சைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பரீட்சார்த்திகளுக்கு பரீட்சை வினாக்களை வாசித்து விளங்கிக் கொள்வதற்கே இந்த மேலதிக கால அவகாசம் வழங்கப்படுவதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் புஜித தெரிவித்துள்ளார்.

இதன்படி, 3 மணித்தியாலங்களைக் கொண்ட வினாப் பத்திரத்துக்கு 10 நிமிட நேரம் மேலதிகமாக சேர்க்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் மற்றும் கல்வியியலாளர்கள் ஆகியோரை கலந்தாலோசனை செய்தே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். (இ-7)



நாட்டில் நிலவுகின்ற சீரற்ற காலநிலையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள கம்பஹா மாவட்டத்தின் பல பகுதிகளுக்கு அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் விஜயம் செய்துள்ளார். மல்வானை, பியகம, ரக்சபான உள்ளிட்ட பகுதிகளுக்கு நேற்று முன்தினம் மாலை சென்று பாதிக்கப்பட்ட மக்களை நேரடியாகச் சந்தித்துள்ளார். இதன்போது, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் அத்தியாவசிய தேவைகள் குறித்து கலந்துரையாடியுள்ளார்.

# ஊடகவியலாளர் கற்கைநெறி நிதி அதிகரிப்பு

(கொழும்பு)

ஊடகவியலாளர்களின் தொழில் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சு வருடாந்தம் நடைமுறைப்படுத்தும் ஊடகவியலாளர் கற்கை பயிற்சிநெறிக்காக வழங்கப்படும் நிதி அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, இதுவரை வழங்கப்பட்ட ஒரு இலட்சம் ரூபா நிதி, தற்போது இரண்டு இலட்சம் ரூபாவாக அதிகரிப்பதற்கு ஊடகத்துறை அமைச்சு தீர்மானித்துள்ளது.

இம்முறை கற்கை நெறிக்காக, திருப்பிச் செலுத்தப்படாத புலமைப்பரிசிலுக்கான நிதி பட்டம் மற்றும் பட்டப் பின்பிடிப்புக்காக வழங்கப்படும் நிதி இரண்டு இலட்சம் ரூபாவாகவும் அதிகரிக்கப்படவுள்ளது.

இதேபோன்று நீண்டகால மற்றும் குறுகியகால சான்றிதழ் கற்கை நெறிக்காக வழங்கப்படும் ஆகக்கூடிய தொகையாக ஒரு இலட்சம் ரூபா வழங்கப்படும்.

இதற்கான விண்ணப்பங்கள், தற்போது கோரப்பட்டுள்ளன. ஊடகத்துறையில் மூன்று வருட காலம் சேவையாற்றியிருக்க வேண்டும். நாட்டின் அங்கீகரிக்கப்பட்ட இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக நிறுவனங்களில் முழு நேர அல்லது பகுதி நேர அடிப்படையில் ஊடகவியலாளராக பணியாற்றியிருக்க வேண்டும்.

18 வயதிற்கும் 55 வயதிற்கும் இடைப்பட்ட ஊடகவியலாளர்கள், சுதந்திர ஊடகவியலாளர்கள், பிரதேச ஊடகவியலாளர்கள், இணையத்தள ஊடகவியலாளர்கள் ஆகியோர் இதற்கென விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பங்களை ஜூலை மாதம் 16ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக பணிப்பாளர் ஊடகம், நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சு, இலக்கம் 163, கிருலப்பனை மாவத்தை, பொல்ஹெயன்கொட, கொழும்பு 05 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்தை www.media.gov.lk என்ற இணையத்தளத்தில் தரவிறக்கம் செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# மரம் முறிந்து ஆலயம் மீது வீழ்ந்தது



(நோர்வூட்)

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெஞ்சர் தொழிற்சாலை பிரிவில் நேற்றுக் காலை 7.55 மணியளவில் வீசிய கடும் காற்றினால் மரம் முறிந்து வீழ்ந்து ஆலயம் ஒன்று சேதமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மத்திய மலைநாட்டில் கடந்த சில தினங்களாக நிலவிய சீரற்ற காலநிலையினை தொடர்ந்து நேற்று அதிகாலை முதல் சில பிரதேசங்களில் கடும் காற்று வீசி வருகிறது. இந்த காற்றின் காரணமாகவே மரம் முறிந்து வீழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த மரம் அம்மன் ஆலயம் மீது முறிந்து வீழ்ந்ததினால் ஆலயத்தின் கூரைக்கும் சுவர்களுக்கும் விக்கிரகங்களுக்கும் பலத்த சேதமேற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த சம்பவம் இடம்பெறும் போது கோயிலில் எவரும் இருக்கவில்லை என்றும் இதனால் ஏற்படவிருந்த உயிர்ச் சேதங்கள் தவிர்க்கப்பட்டுள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வெள்ளம் பார்க்கவும் செல்பி எடுக்கவும் வெளியிடங்களிலிருந்து வரவேண்டாம்

## பொலிஸ் பேச்சாளர் ருவான் வேண்டுகோள்

(கொழும்பு)

வெள்ள அனர்த்தம் ஏற்பட்டுள்ள பிரதேசங்களைப் பார்வையிடவும் வீடியோ எடுக்கவும் "செல்பி" எடுக்கவும் வெளியிடங்களிலிருந்து வருவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அதிகாரியுமான ருவான் குணசேகர வேண்டுகோள் விடுத்துள்ளார்.



இவ்வாறு வெளியிடங்களிலிருந்து பார்வையிட வருவது அனர்த்தங்களுக்குள்ளான மக்களுக்கும் அசௌகரியங்களை ஏற்படுத்துவதோடு, அனர்த்தங்களில் பாதிக்கப்பட்ட மக்களை மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ளவர் களுக்கும் இடைஞ்சலாக இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிப் பொருட்களை எடுத்து வருபவர்கள் பிரதேச செயலகங்களில் அதனை ஒப்படைத்து விட்டுச் செல்லுமாறும் அவர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார். (இ-7)

# விமானம் விபத்து!

(கொழும்பு)

கொச்சியிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு 228 பயணிகள், 12 பணியாளர்களுடன் நேற்று முன்தினம் மாலை வந்த UL 167 என்ற ஸ்ரீலங்கன் ஏர்லைன் விமானம், அப்பகுதியில் நிலவிய காலநிலையின் காரணமாக வழுக்கிச் சென்று அருகில் இருந்த மின்கம்பங்களில் மோதி விபத்துக்குள்ளானது.

இதனை அடுத்து, விமானம் உடனடியாக நிறுத்தப்பட்டு பயணிகள் பத்திரமாக கீழே இறக்கப்பட்டதாகவும் ஒருவருக்கும் பாதிப்புக்கள் ஏற்படவில்லை எனவும் சிறிது நேரத்திற்கு ஓடுதளம் மூடப்பட்டு, பின்னர் நிலைமை சீரானதும் திறக்கப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், இந்த விபத்தில் விமானத்தின் சக்கரம் சேதமடைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# மஹாசோன் தலைவர் உள்ளிட்ட 33 பேருக்கு விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

மஹாசோன் பலகாயவின் தலைவர் அமித் வீரசிங்க உள்ளிட்ட 33 பேரின் விளக்கமறியல் எதிர்வரும் 11 ஆம் திகதி வரையிலும் நீடிக்கப்பட்டுள்ளது.

கண்டி நிர்வாக மாவட்டத்தில், மார்ச் மாதம் முதல் வாரத்தில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுடன் நேரடியாகத் தொடர்புபட்டவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலும் வன்முறையைத் தூண்டி விடுவதற்கு காரணமானவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலும் இந்த 33 பேரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மாட்டிறைச்சி விற்பனையில் மோசடி சாவகச்சேரியில் தொடரும் சர்ச்சை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் கொல்களத்தில் சாவகச்சேரி பிரதேசசபையில் மாட்டிறைச்சிக் கடை உரிமம் பெற்ற நபர் மாடு ஒன்றினைக் கொண்டு வந்து இறைச்சியாக்கி இறைச்சியை நகர சபை எல்லைக்குட்பட்ட உணவகம் ஒன்றில் விற்ற சம்பவம் கடந்த 26 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

பிரதேச சபையில் மாட்டிறைச்சிக் கடை உரிமத்துக்கான தவணைப் பணம் கட்டாத காரணத்தால் பிரதேச சபையினர் மாட்டிறைச்சிக் கடை மற்றும் கொல்களத்தினை மூடியுள்ளனர்.

இருப்பினும் குறித்த நபர் பிரதேச சபையில் முன்னர் வழங்கிய மாடு வெட்டுவதற்கான அனுமதிப் படிவத்தை சாவகச்சேரி நகரசபையின் சுகாதார பரிசோதகரிடம் காட்டி இந்த ஏமாற்று வேலையில் ஈடுபட்டுள்ளார்.

அதன் பின்னரே குறித்த நபரின் உரிமம் பிரதேச சபையால் நிறுத்தப்பட்ட சம்பவம் சாவகச்சேரி நகரசபையினருக்கு தெரியவந்துள்ளது.

உரிமத்தினை இடைநிறுத்தும் போது மாடு வெட்டுவதற்கான விண்ணப்பப் படிவங்கள் மற்றும் அனுமதி வழங்கிய படிவங்கள் அனைத்தையும் பிரதேச சபையினர் மீளப் பெறத் தவறியதாலேயே குறித்த நபர் ஏமாற்றி இறைச்சியாக்கிச் சென்றுள்ளதாக தெரிய வருகிறது.

நகரசபையின் கொல்களத்தில் 37 கிலோ மாட்டிறைச்சி வெட்டப்பட்டு அதில் 10கிலோவினை நகர சபை எல்லைக்குட்பட்ட உணவகம் ஒன்றில் விற்பனை செய்யப்பட்டமை சுகாதார பரிசோதகரால் கண்டறியப்பட்டுள்ளது.

மீதி இறைச்சி எங்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது என்பது பற்றி தெரியவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

பிரதேச சபையில் மாட்டிறைச்சிக்கடை உரிமம் பெற்ற நபர் இறைச்சியாக்கிய மாட்டினை மிருசுவில் பகுதியில் உள்ள மாட்டிறைச்சிக் கடையில் மாத்திரமே விற்பனை செய்ய முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

அவ்வாறு இருக்கையில் நகரசபை எல்லைக்குள் மாட்டிறைச்சியினை விற்பனை செய்துள்ளார். சாவகச்சேரி நகரசபைக்குள் ஏற்கனவே மாட்டிறைச்சிக் கடை விவகாரம் பூதாகரமாக வெடித்து மாட்டிறைச்சிக்கடை மற்றும் கொல்களத்தை மூடுமாறு உண்ணாவிரதம் இடம்பெற்ற தினத்தில் இவ்வாறான சம்பவம் இடம்பெற்றமை பலரையும் கோபத்திற்கு, உள்ளாக்கியுள்ளது.

பிரதேச சபையின் அனுமதியை தவறாக பயன்படுத்தியமை, நகரசபை எல்லைக்குள் மாட்டிறைச்சி விற்றமை போன்ற குற்றச்செயல்களுக்காக குறித்த நபருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக சாவகச்சேரி நகரசபை வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (இ-7)

# கிரிக்கெட் வீரரின் தந்தையின் கொலை தொடர்பில் வெளியான அதிர்ச்சி தகவல்

(கொழும்பு)

கிரிக்கெட் வீரர் தனஞ்சய டி சில்வாவின் தந்தையின் கொலை தொடர்பிலான முக்கிய தகவலொன்றை பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

அதாவது அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர், அவரது மார்புப் பகுதியில் கூரிய ஆயுதம் ஒன்றினால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமை பிரேத பரிசோதனைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை இத்தாக்குதலுக்கு அவரின் மூத்த மகன் காரணமல்ல வென்பதும் விசாரணை களில் இருந்து கண்டறியப் பட்டுள்ளது.

இதனடிப்படையில் கொலையாளிகளை கண்டுபிடிப்பதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அதற்காக சில குழுக்கள் விசாரணைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இரத்மலானை பிரதேசத்திலுள்ள தனஞ்சய டி சில்வாவின் வீட்டின் முன் முற்றத்தில் வைத்து கடந்த 24 ஆம் திகதி அவரின் தந்தை இனந் தெரியாத மர்ம நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கொழும்பு குப்பைகள் மூலம் ரூ.300 இலட்சம் வருமானம்

(கொழும்பு)

கொழும்பு உட்பட ஏனைய நகரங்களில் கிடைத்த குப்பைகளின் மூலம் 300 இலட்சம் வருமானம் கிடைத்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 6 மாதங்களில் இந்த வருமானம் கிடைத்துள்ளதாக மாநகர சபை மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். கட்டுபெத தேவ பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துவெளியிடும்போதே அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.

கொம்பொஸ்ட் உரம் மற்றும் மீள் சுழற்சி பொருட்கள் மூலம் இந்த வருமானத்தை பெற்றதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். எதிர்வரும் காலங்களில் கொழும்பு நகரில் சேரும் குப்பைகளின் மூலம் கிடைக்கும் நிதியை, துறைமுக நகரத்தில் உருவாகும் பூங்காவை கட்டியெழுப்ப பயன்படுத்தவுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தூத்துக்குடி மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்

## நாடு கடந்த அரசு அறிக்கை



(தூத்துக்குடி)

தமிழ்நாடு தூத்துக்குடியில் சூழல் மாசுபடுவதற்கும் பொதுமக்களின் சுகாதாரக் கேட்டுக்கும் காரணமாக இருக்கும் ஸ்டெர்லைட் (Sterlite) ஆலையை மூடக்கோரி பொதுமக்கள் எதிர்ப்புப் போராட்டம் நடத்திய வேளையில், பொலிஸார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் எமது தொப்புள் கொடி உறவுகளான தமிழ் மக்கள் 13 பேர் கொல்லப் பட்டும் 100இற்கும் மேறபட்டோர் காயமடைந்தும் அறிந்தும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் பெருங் கவலையும் அதிர்ச்சியும் அடைந்திருக்கிறது. மே மாதம் 22, 23 ஆம் திகதிகளில் இடம்பெற்ற இக் கொலைகளையும் பொது மக்கள் மீதான தாக்குதலையும் வன்மையாகக் கண்டனம்செய்யும் அதேவேளை, இதற்குக்காரண மானவர்கள் இனங்காணப்பட்டு தண்டிக் கப்படுவதுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க ஆவன செய்யப்பட வேண்டுமெனவும்கோருகிறோம்.

போராட்டத்தில் தமது உயிர்களை இழந்த சமூகப் போராளிகளுக்கு நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தலை தாழ்த்தி மரியாதை வணக்கம் செய்வதுடன் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு எமது ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

இவ்வாறு நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி. உருத்திரகுமாரன் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# அரசாங்கத்துடன் உள்ள பிரபலங்கள் 12 பேர் விரைவில் எதிர்க் கட்சியில்

## சு.க. அதிருப்திக்குழு தகவல்

(கொழும்பு)

அரசாங்கத்திலுள்ள ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சிரேஷ்ட அமைச்சர்கள் பலர் பல்வேறு சந்தர்ப்பங்களில் எதிர்க் கட்சியில் அமரவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திலிருந்து வெளியேறிய 16 உறுப்பினர்களால் நடத்தப்பட்டு வருகின்ற "சுதந்திரத்தின் மனச்சாட்சி" பொதுக் கூட்ட நிகழ்வுகளின் போதும் சிலர் தம்முடன் அர சாங்கத்துக்கு எதிராக இணைந்து கொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, அரசாங்கத்துடன் உள்ள சுதந்திரக் கட்சியின் 23 பாராளுமன்ற உறுப்பினர்களில் 12 பேர் எதிர்க்கட்சியில் இணையவுள்ளதாக முன்னாள் அமைச்சர் எஸ். பி.திஸா நாயக்க தெரிவித்தார். (இ-7)

# லிந்துலை வைத்தியசாலை இடம் மாறுகிறது

(லிந்துலை)

மண்சரிவு அனர்த்தத்துக்கும் மற்றும் போதிய வசதியின்றியும் காணப்படும் லிந்துலை வைத்தியசாலையை பாதுகாப்பான இடமொன்றில் நிர்மாணிப்பதற்கு நுவரெலியா மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் நேற்றுத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக, நாக சேனைப் பகுதியில் லிந்துலை வைத்தியசாலையை நிர்மாணிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வைத்தியசாலையை இடம் மாற்றுவது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.திலகராஜ் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் முன்மொழிந்தமைக்கு அமைவாகவே, இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. (இ-7)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

**விநாயகராமன்**

**எண் 1 (சூரியன்)**
**(ஆளும் வேந்தர்கள்)**

அரசியலில் நீங்காத இடம் பிடித்து எப்பேர்ப்பட்ட பொறுப்பிலும் சிறப்பாகப் பணியாற்றும் திறமையுடன் மின்னுவார்கள்.

தலைமை தாங்கும் குணம் அதிகம் காணப்படும். மனத்தில் உள்ளது உள்ளபடி ஒளிவு மறைவின்றி உரைக்கும் குணமிருக்கும். இதனால் பலபேரின் எதிர்ப்புக்கு ஆளாவார்கள். வரலாறு படைப்பார்கள். இவர்கள் வெளிப்படுத்தும் அன்பு, கருணை, அதிகாரம், அடக்குமுறைகள் அனைத்தும் மிகவும் கடுமையானதாகவே இருக்கும்.

இவர்கள் யாருடைய நட்பையும் தேடி அலையமாட்டார்கள். இவர்களின் திறமை, உதவும் குணம், அதிகாரம் மிக்க பதவிக்காகப் பலபேர் இவருடைய நட்புக்காககாத்து நிப்பார்கள். இவர்கள் தங்களுடைய பிறவிக் குணத்தால் யாருக்கும் தலை வணங்கியோ கட்டுப்பட்டோ நடக்க மாட்டார்கள். இவர்கள் யாருக்கும் அடிமையாக இருப்பதை விருப்பமாட்டார்கள். பிறர் மீது அதிகாரம் செலுத்தி ஆளப் பிறந்தவர்கள். முன்னும் பின்னும் மாற்றிப் பேசமாட்டார்கள்.

எத்தகைய உயர் பதவியில் இருந்தாலும் தன்னைவிட மேலான பதவியில் யாரும் இருப்பதை இவர்கள் விரும்பமாட்டார்கள். சுதந்திரமான செயற்பாடுகள் உடையவர்கள். தனக்கென்று வகுத்த பாதையிலே கடைசி வரை பயணம் மேற்கொள்வார்கள். நுண்ணறிவு படைத்த இவர்கள் எதிரிகளை நண்பர்களாக்கும் சாமர்த்தியசாலிகள். பலருடைய வாழ்க்கைக்கு விளக்கேற்றி வைக்கும் நல்ல குணம் படைத்தவர்கள்.

மற்றவர்கள் பேசும்வார்த் தைகள் இவர்களிடம் எடுபடாது. உடனுக்குடன் மறுத்துப் பேசி மாற்றுக் கருத்தை வெளியிடுவார்கள். பிறருடைய கருத்தால் சிறிது அவப்பெயர் ஏற்பட்டாலும் உடனே பதவியை இராஜினாமா செய்து விடுவார்கள். பிறரை புகழ்ந்து பேசி முகஸ்துதி செய்யப் பிடிக்காது. தான் மற்றவர்களை புகழ்வதையும் மற்றவர் தம்மை புகழ்வதையும் உள்ளூர வெறுக்கவே செய்வார்கள். மிக அரியகலைகளில் ஆர்வம் காட்டுவார்கள். வீணான பேச்சை விரும்ப மாட்டார்கள். மருத்துவம், ஜோதிடம், மந்திரம், தியானம் ஆகியவற்றில் எளிதில் சாதனை செய்வார்கள் தேகபலம் மிக்கவர்கள்.

காதல் வசப்படும் இவர்கள் உண்மையான அன்பை மட்டுமே ஆராதிப்பார்கள். பல்கலைகளில் தேர்ச்சி பெறும் இவர்கள் நடிப்பு, நாட்டியம் கதை, காவியம், ஓவியம், சிற்பம், சங்கீதம், எழுத்தாற்றல், அரசியல் போன்ற பல துறை ஈடுபாட்டால் தங்களுடைய திறமையை வெளிக்கொணர்ந்து பாராட்டைப் பெறுவார்கள். தலைசிறந்த உயரிய விருதுகளையும் பெறுவார்கள். மற்றவர்களை வெகு சுலபத்தில் ஏடை போட்டு விடுவார்கள். பல விடயங்களை தெரி ந்து




கொண்டாலும் மிகவும் அடக்க குணத்துடன் வெளியில் காட்டிக் கொள்ள மாட் டார்கள். புகழ், பணம் இவை இரண்டும் இவர்களை எப் போதும் மயக்காது. மிகவும் கண்ணியமாக, நேர்மையாக உழைக்கக் கூடியவர்கள் வியா பாரம், தொழில் செய்து அதிக இலாபத்தை கருத்திற் கொள் ளாமல் பணத்தைத் தேடி அலையும் விருப்பம் இல்லா மல் சோம்பேறி என்று மற்ற வர்கள் தன்னை கூறிடாத வாறு உழைத்துக் கொண்டே இருப்பார்கள்.

பணம், பதவி, புகழ் எல் லாம் தன்னைத் தேடி வர வேண்டும் என்று நினைப்ப வர்கள். அதற்காக சுயமுயற் சியிலேயே எல்லாக் காரியத் திலும் ஈடுபடுவார்கள். பல பேர் இவர்களுடன் பழகினாலும் வெகுசிலரையே தன்னுடைய நண்பராக ஏற்றுக் கொண்டு மகிழ்ச்சி பொங்க பல உதவிகளைச் செய்து மகிழ்வார்கள்.

பிறருடைய பணம், புகழுக்கு துளிகூட ஆசைப்படமாட்டார்கள். கஷ்டப்பட்டு உழைப்பார்கள். பெரிய அதிகாரம் மிக்க பதவி வகிக்கும் நபர்களின் ஆதரவு கிடைக்கும். நிலையான அரசியல், நிர் வாகம் ஆகியவற்றில் நீடித்து நிற்பவர்கள் சூரிய ஆதிக்கத் தினரே. வெற்றி மேல் வெற்றி பெறும் இவர்கள் பல நாடுகளின் அரசியலிலும் அரசாங்கப் பதவியிலும் நீடித்து ஆட்சி செய்து நிலையான நிர்வாகத்தைச் செய்வதால் அரசரின் அரசன், அரசியல் சாணக்கியன் என்று அடைமொழிகளுடன் வாழ்கின்றார்கள்.

நாட்டைக்கட்டிக்காக்கும் நல்ல அரசியல் நுணுக்கங்கள் அறிந்தவர்கள். விவசாயம், கட்டடம், இராணுவம், மருத்துவம், விளையாட்டு, ஜோதிடம், சட்டம், சிற்பம், உலோக வேலைகள் அனைத்திலும் தனிச்சிறப்புடன் பணியாற் றுவார்கள்.

(தொடரும்)

# ஏழு நீதிமன்றங்களுக்கு ஒரு நீதிபதி

(கொழும்பு)


கொழும்பு மேல் நீதிமன்றக் கட்டடத் தொகுதியின் ஏழு நீதிமன்றங்களிலும் நேற்று ஒரே ஒரு நீதிபதி கடமையாற்றியுள்ளதுடன், வழக்குகள் அனைத்தும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதிகள் அனைவரும் நீதிபதிகளுக்கான செயலமர்வு ஒன்றில் கலந்து கொண்டுள்ள நிலையில் நீதிபதி ஹெய்யந்துடுவை மட்டுமே அனைத்து நீதிமன்றங்களின் நடவடிக்கை களையும் கவனித்துக் கொள்ள வேண்டியிருந்துள்ளது.

இதனையடுத்து ஒவ்வொரு நீதிமன்றமாகச் சென்று வழக்குகளை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட அவர் உடனுக்குடன் வழக்குகளை பிறிதொரு தினத்திற்கு ஒத்திவைத்துள்ளார்.

ஒரே நீதிபதியொருவர் கொழும்பு மேல்நீதிமன்றக் கட்டடத் தொகுதியின் அனைத்து நீதிமன்றங்களிலும் வழக்குகளை விசாரணை செய்த முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கொழும்பு-பதுளை வீதியில் திடீரென ஏற்பட்ட விரிசல்



(பதுளை)

பதுளை - கொழும்பு வீதியின் வல்ஹறுதென்ன பகுதியில் திடீரென பாரிய நில வெடிப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் சிறியளவில் காணப்பட்ட வெடிப்பு தற்போது பாரிய அளவு அதிகாரித்துள்ளது.

ஏ-9 வீதியின் 195 ஆவது மீற்றர் மைல் கல்லுக்கு அருகில் இந்த வெடிப்பு ஏற்பட்டுள்ளது.


வீதியை அண்மித்த பகுதியிலுள்ள மலையில் அண்மையில் மண்சரிவு ஏற்பட்டிருந்தது. இதன்காரணமாக நில வெடிப்பு ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

வெடிப்பு ஏற்பட்ட பகுதிக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை, தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் உட்பட பொறுப்புக்கூறும் அதிகாரிகள் நேற்றுக் காலை சென்றுள்ளனர்.

வெடிப்புக்கான காரணம் குறித்து ஆய்வுகளை மேற்கொண்ட நிலையில், அதனை உடன் சீர்செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்த வீதியில் மண் சரிவு ஏற்பட்டால் மாற்றுப் பாதை ஒன்று இல்லை என பொது மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (இ-7)

# மான் கொலை- நால்வர் கைது



(கொழும்பு)

ஹிங்குரங்கொடை- அரச பண்ணையொன்றிற்கு அருகில் மான் ஒன்றை கொலை செய்த நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை குறித்த மான் பிடிக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் பொலிஸாரால் இவர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

18 முதல் 35 வயதுடைய சந்தேகநபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

மிகப்பெரிய கொம்புகளைக் கொண்ட இந்த மான் சுமார் 100 கிலோ கிராம் எடையுடையது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நீர் வழங்கல்,நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகள் நேற்று பணிப்புறக்கணிப்பு

(கொழும்பு)

மின்சார பொறியியலாளர்கள் தமது தொழிற்சங்க நடவடிக்கையை பலப்படுத்தியுள்ள நிலையில், நீர் மற்றும் நுகர்வோர் அதிகார சபைகளின் விசாரணை அதிகாரிகள் நேற்றுப் பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

வார இறுதிநாள் பணிகள் மற்றும் அவசர புனரமைப்பு நடவடிக்கைகளையும் புறக் கணிப்பதாக மின் பொறியியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

நீண்டகால மின்னுற்பத்தித் திட்டம் ஒன்றுக்கு பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு இதுவரை அனுமதி வழங்காமைக்கு எதிர்ப்பு தெரிவித்து சட்டப்படி வேலை செய்யும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்தப் போராட்டம் கடந்த 9 ஆம் திகதி முதல் மின் பொறியியலாளர்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில், வார இறுதி மற்றும் அவசர சேவைகளையும் புறக்கணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வேதன உயர்வைக் கோரி நேற்று 4 மணி நேரம் அடையாள பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளதாக நீர் வழங்கல் தொழிற்சங்க கூட்டு குழுவின் ஏற்பாட்டாளர் உபாலி ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதனுடன் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் அதிகாரி ஒருவரை உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் உறுப்பினர் எனக் கூறப்படும் ஒருவர் அச்சுறுத்திய சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து அந்த அதிகார சபையின் அதிகாரிகள் நேற்று முதல் நாடளாவிய ரீதியில் தொழிற்சங்க நட வடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பயணச்சீட்டு மிகுதிப்பணம் தொடர்பில் அறிவிக்கலாம்

(கொழும்பு)

தனியார்பேருந்துகளில் பயணச்சீட்டு மிகுதிப்பணம் வழங்காமை தொடர்பில் குறிப்பிட்ட பேருந்து குறித்து அறிவிக்குமாறு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு பயணிகளிடம் கேட்டுக் கொண்டுள்ளது.

இது தொடர்பாக கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கு ஆணைக்குழு தயாராக இருப்பதாக குழுவின் மேல் மாகாண வீதிகள் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் துசித்த குலரத்ன தெரிவித்துள்ளார்.

நிர்ணயித்த கட்டணத்திற்கு மேலதிகமாக பணத்தை அறவிடும் பேருந்து குறித்து அறிவிப்பதற்கு விசேட தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் 011 555 9595 என்ற தொலை பேசியினூடாக முறைப்பாடுகளை தெரிவிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1426

Search for people, places and things | Nagendram Home

### உதய்

எந்தவொரு விடயத்தையும் சொல்லிப் புரியவைக்கும் முதலாளியாக இராதீர்கள்



செயலில் புரியவைக்கும் தலைவனாக இருங்கள்...!

### ஐங்கரன்


திருமண மண்டபங்களின் பின்னாலுள்ள இதுபோன்ற குப்பைத் தொட்டிகள்தான்



ஏழைகளின் பசி தீர்க்கின்ற அட்சய பாத்திரம்...!

### கிருசாந்

காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை... ஆனால்



உண்மையாக நேசிக்கும் இதயம் நிச்சயம் நமக்காகக் காத்திருக்கும்

### உதயா

உலகில் அனைவரும் நம்மை நேசிப்பார்கள் என்று இல்லை



காரணம் இல்லாமல் சிலர் வெறுப்பார்கள். அதற்கும் புன்னகைத்துவிட்டுச் செல்வோம்!

### ஐஸ்வர்யா

முயற்சிதான் வெற்றியின் முதற்படி என்றால்...



அந்த முயற்சியை அடைய முந்நூறு தடவை தோற்றாலும் பரவாயில்லை...

### கிசானி

வாழ்க்கையில் நம்பிக்கை, சத்தியம், நட்பு, இதயம் போன்ற நான்கையும் உடைத்துவிடாதே



ஏனெனில் இந்த நான்கில் எதை உடைத்தாலும் சத்தம் கேட்காது வலி இருக்கும்

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தினசரி அப்பாவி பொதுமக்களை கொலை செய்யும் அரசியல்வாதிகள்

## காமினி லொக்குகே குற்றச்சாட்டு

(கொழும்பு)

**ஆட்சியில் உள்ள அரசியல்வாதிகள் குற்றச்செயல்களுடன் தொடர்புடைய குழுக்களை வைத்து தினசரி அப்பாவி பொது மக்களை கொலை செய்வதாக மகிந்த அணி பாராளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே குற்றம் சாட்டியுள்ளார்.**



பிலியந்தல பகுதியில் வைத்து நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவர் கருத்து தெரிவிக்கையில்,

குற்றச்செயல்களுடன் தொடர்புடைய குழுக்களை கட்டுப்படுத்த பொலிஸாருக்கு சந்தர்ப்பம் இருந்தும் அரசிற்கு இது தொடர்பில் அக்கறை இல்லை என தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த அரசாங்கத்தின் ஆட்சியின் போதும் குற்றச்செயல்களுடன் தொடர்புடைய குழுக்கள் தீவிரமாக செயற்பட்டதாக அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ7)



வடமராட்சி கப்பூது காட்டுக்கந்தசாமி கோவிலில் நேற்றுத் தேர்த்திருவிழா இடம்பெற்றது. (படம்:-மகாலிங்கம்)

# மகிந்த ஆட்சிக்காலத்தில் மக்களின் வாழ்க்கையை குழப்ப முயற்சிக்கவில்லை

## கோத்தபாய கூறுகிறார்



(கொழும்பு)

மகிந்த ஆட்சியில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் சாதாரண வாழ்க்கை சூழலை குழப்பவோ அவர்களின் இன, மத, கலாசார நடவடிக்கைகளுக்கு பங்கம் விளைவிக்கவோ ஒருபோதும் முயற்சிக்கவில்லை. அவர்களின் வாழ்க்கையை பாதுகாக்கவே இப்போதும் நாம் முயற்சித்து வருகின்றோம் என முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

பேருவளையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இப்தார் நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ராஜபக்ஷவினர் குறித்து சிறுபான்மை மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்பட்டுள்ள பொய்யான கருத்துக்கள் இன்று வெளிச்சத்துக்குவரும்நிலைமை காணப்படுகின் றது.

குறிப்பாக பாதுகாப்பு செயலாளராக நான் கடமையாற்றிய காலத்தில் முஸ்லிம் மக்களை பாதுகாக்கவும் அவர்களின் அபிவிருத்திக்காக நான் முன்னெடுத்த நடவடிக்கைகள் குறித்தும் என்னுடன் கடமையாற்றிய நபர்களுக்கு நன்றாகத் தெரியும்.

அன்று யுத்தம் முடிவடைந்த பின்னர் வடக்கு, கிழக்கில் நாம் முன்னெடுத்த அபிவிருத்திகள், தமிழ் முஸ்லிம் மக்களை பாதுகாக்க நாம் முன்னெடுத்த வேலைத் திட்டங்களை அனைவரும் அறிந்திருப்பார்கள்.

யுத்தத்தில் பாதிக்கப்பட்ட தமிழ்-முஸ்லிம் மக்களை நாம் ஒருபோதும் கைவிடவில்லை. இந்த நாட்டில் வாழும் சகல மக்களுக்கும் இந்த நாட்டின் கௌரவமான மக்களாக வாழக்கூடிய நாடாக எமது நாட்டை மாற்றியமைக்க வேண்டும் என்பதே எமது கொள்கையாகும்.

எதிர்காலத்தில் மகிந்த ராஜபக்ஷவின் தலைமையின் கீழ் உருவாகும் ஆட்சியில் சிறுபான்மை மக்களுக்கு எவ்வித அச்சமுமின்றி மத நடவடிக்கைகளை தடுக்காத, வியாபாரத்தை சரியாக முன்னெடுத்து செல்லும் சூழலை பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மண்சரிவு அபாயத்தை எதிர்நோக்கியுள்ள 5000 குடும்பங்களுக்கு 6 மாதத்திற்குள் வீடு

## அமைச்சர் திகாம்பரம் உறுதியளிப்பு

(ஹற்றன்)

நுவரெலியா மாவட்டத்தில் மண்சரிவு அபாயத்தினை எதிர்நோக்கியுள்ள 5000 குடும்பங்களுக்கு ஆறுமாத காலப்பகுதிக்குள் புதிய தனி வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும் எனவும் நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையினை அடுத்து 5000 குடும்பங்கள் மண்சரிவு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருப்பதாக இனங்காணப்பட்டுள்ளது எனவும் மலைநாட்டு புதிய கிராமங்கள் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்தார்.



அவர்கள் அனைவருக்கும் வீடுகளை கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் மண்சரிவினால் பாதிக்கப்பட்டு வீடுகள் சேதமடைந்தவர்களுக்கும் அடுத்த வாரம் முதல் வீடுகளை கட்ட ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும், இந்த மண்சரிவானது நுவரெலியா மாவட்டத்தை மாத்திரம் பாதிக்கவில்லை. பதுளையிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இவர்கள் அனைவருக்கும் விரைவில் வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்டத்தில் சீரற்ற காலநிலையால் நோர்வூட், மஸ்கெலியா, மொக்கா, காட்மோர், தலவாக்கலை, மடகும்பர, லிந்துல ஆகிய பகுதிகளில் மண்சரிவு காரணமாக பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்களை நேற்று முன்தினம் பார்வையிடுவதற்காக விஜயம் செய்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன் போது இடர் முகாமைத்துவ நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களின் குறைபாடுகளையும் கேட்டறிந்ததுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான நிவாரண உதவிகளை பெற்றுக்கொடுப்பதாகவும் இதன் போது அமைச்சர் உறுதியளித்தார்.

இந்த விஜயத்தின் போது அம்பகமுவ பிரதேச செயலகத்தின் உதவி செயலாளர் ஆர்.வி.பி.சுமனசேகர, தொழிலாளர் தேசிய சங்கத்தின் முக்கியஸ்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர். (இ-7)



தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் அனுசரணையுடன் தென்மராட்சி கல்வி வலய இசையாசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இணைந்து நடத்திய ஏழிசை மாலை 23ஆவது நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் கலந்து சிறப்பித்தார். இந் நிகழ்வில் தென்மராட்சி கல்வி வலய இசையாசிரியர்கள் மற்றும் மாணவர்களின் இசைக்கச்சேரி, தனியிசை, நாட்டார்பாடல் மற்றும் குழுப்பாடல் ஆகியன இடம்பெற்றன. (படங்கள்:-சுபேசன்)



ரம்பொடை பகுதியில் இயற்கை அனர்த்தத்தினால் பாதிப்புக்குள்ளான பொது மக்களை இடர்முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் ரங்கே பண்டார நேற்று முன்தினம் நேரில் சென்று சந்தித்து கலந்துரையாடினார். அமைச்சர் பி.திகாம்பரத்தின் கோரிக்கைக்கு அமைய லிலஸ்லேண்ட் தோட்டத்தில் மண் சரிவு அபாயத்தினால் இடம்பெயர்ந்துள்ள 103 குடும்பங்களை சந்தித்த அமைச்சர் ரங்கே பண்டார நிவாரண பொருட்களையும் வழங்கினார். இதன் போது நாடாளுமன்ற உறுப்பினர் எம். திலகராஜ் மற்றும் மத்திய மாகாண சபை உறுப்பினர் சோ.ஸ்ரீதரனும் கலந்து கொண்டனர்.

# திருமலையிலுள்ள உள்ளூராட்சி சபைகளை தரமுயர்த்த ஆளுநர் ரோஹித வாக்குறுதி



(திருமலை)

கந்தளாய் மற்றும் மூதூர் பிரதேச சபைகளை நகர சபையாகவும் திருகோணமலை நகர சபையை மாநகர சபையாக தரமுயர்த்தவுள்ளதாகவும் கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகம தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தில் புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலொன்று நேற்று சம்பூர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற போதே அவர் இதனை தெரிவித்தார்.

திருகோணமலை நகரத்தை சிங்கப்பூர் நாட்டின் நிதியுதவியுடன் பாரிய அளவில் அபிவிருத்தி செய்யவுள்ளதாகவும்அதேபோல்அனைத்து பிரதேச சபைகளிலும் காணப்படுகின்ற வளப்பற்றாக் குறை, ஆளணி பற்றாக்குறை போன்றவற்றை நிவர்த்தி செய்யும் நோக்கில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனைகளை பெற்று அதனை தீர்த்து வைப்பேன் எனவும் கூறினார்.

இதேவேளை கட்சி பாகுபாடின்றியும், இன மத வேறுபாடின்றியும் பிரதேச சபைகளின் ஊடாக மக்களுக்கு சேவைகளை வழங்க வேண்டுமெனவும், ஒவ்வொரு வட்டாரங்களிலும் காணப்படுகின்ற மிக முக்கிய பிரச்சினைகளை இனங்கண்டு அவ்வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்குரிய நிதிகளை வழங்குவேன் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண உள்ளூராட்சிஆணையாளர் எம்.வை.சலீம்,முதலமைச்சின் செயலாளர் யூ.எல்.ஏ.அஸீஸ் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள்,செயலாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர். (இ-7)

# ஆட்ட நிர்ணய மோசடி தொடர்பில் வாய் திறந்துள்ள ஜீவந்த குலதுங்க

(கொழும்பு)

கிரிக்கெட் போட்டிகளில் ஆட்ட நிர்ணய மோசடியில் ஈடுபட்டதாக தம்மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை தாம் நிராகரிப்பதாக இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் ஜீவந்த குலதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அல்ஜெசீரா செய்திச்சேவையினால் வெளியிடப்பட்டுள்ள காணொலியில் தம்மால் குறிப்பிடப்படும் கருத்துக்கள் தவறான முறையில் பொருள் புலப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை, கிரிக்கெட்





டில் இடம்பெற்ற ஆட்ட நிர்ணய மோசடி தொடர்பில் அல்ஜெசீரா ஊடகம் வெளியிட்டிருந்த காணொலியை அடிப்படையாகக் கொண்டு, சர்வதேச கிரிக்கெட் பேரவை முழுமையான விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

அதன் ஊடக அறிக்கை ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட்துறை சார்ந்தவர்கள் உள்ளிட்ட பலர், ஆட்டநிர்ணய மோசடியில் ஈடுபட்டுள்ளமையை உறுதிப்படுத்தும்வகையிலான காணொலிகளை அல்ஜெசீரா ஊடகம் வெளியிட்டுள்ளது.

இதில் தொடர்புபடுத்தப்பட்டுள்ள இரண்டு இலங்கையர்கள் இடைநிறுத்தப்பட்டிருப்பதாகவும், அவர்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவில் முறையிடுவதாகவும் இலங்கை கிரிக்கெட் நிறுவனம் ஏற்கனவே அறிவித்திருந்தது.

அத்துடன் இதுதொடர்பில் சர்வதேச கிரிக்கெட் பேரவை மேற்கொள்ளும் விசாரணைகளுக்கு இலங்கை கிரிக்கெட் நிறுவனம் முழு ஒத்துழைப்பை வழங்கவும் தயார் நிலையை வெளிப்படுத்தி இருந்தது.

இந் நிலையில் சர்வதேச கிரிக்கெட் பேரவையானது, தமது அனைத்து அங்கத்துவ நாடுகளின் ஒத்துழைப்புடனும் இந்தக் குற்றச்சாட்டு குறித்து பூரண விசாரணைகளை மேற்கொண்டிருப்பதாக அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தெற்கில் இன்புளுவன்சா-பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு தனியார் வைத்தியசாலையிலும் சிகிச்சை-ராஜித அறிவிப்பு

(கொழும்பு)

தென்மாகாணத்தில் பரவி வரும் இன்புளுவன்சா நோய் காரணமாக சிறுவர்கள் பலர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் காலி கராப்பிட்டிய ஆதார வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகள் காரணமாக நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வைத்தியசாலையில் அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெறுவதற்கு முடியாத நிலை உள்ளது. இதன் காரணமாக சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன தான் இது தொடர்பாக சுகாதார அமைச்சின் செயலாளருக்கு சில ஆலோசனைகள் வழங்கியிருப்பதாக தெரிவித்தார். தென் மாகாணத்திலுள்ள தனியார் வைத்தியசாலைகளில் அவசர சிகிச்சை பிரிவுகளில் அரசாங்க செலவில் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு சிகிச்சை வழங்குமாறு ஆலோசனை வழங்கியுள்ளதாக தெரிவித்தார்.

இதேபோன்று கொழும்பு சிறுவர் வைத்தியசாலையிலும் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு சிகிச்சை வழங்குவது தொடர்பிலும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.(இ-7)

# ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவு செய்யும் உரிமை மங்களவுக்கு இல்லை-சுஜீவ எதிர்ப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதைத் தீர்மானிக்கும் உரிமை நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு இல்லையென, இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

கட்சி விட்டு கட்சி தாவி பின் மீண்டும் ஐ.தே.கவில் இணைந்து கொண்ட மங்கள சமரவீரவை விட தமக்கு அந்தக் கட்சியில் அதிக உரிமையுள்ளதாக அவர் தெரிவித்தார்.

2020 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் களமிறக்கக்கூடிய தகுதியான வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவே என அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் இந்த கருத்தை மறுக்கும் வகையில் இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க கொழும்பு தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்று கருத்து வெளியிடுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

எவ்வாறெனினும் ஒவ்வொரு ஜனாதிபதித் தேர்தலின்போதும், வேட்பாளர் தெரிவில், மங்கள சமரவீரவின் பணிசமான பங்களிப்பை சுட்டிக்காட்டியுள்ள அரசியல் அவதானிகள், சுஜீவ சேனசிங்கவின் கருத்தை பொருட்படுத்தத் தேவையில்லை எனத் தெரிவித்துள்ளனர். (இ-7)

# தோன்றி மறையும் பம்பரகந்த நீர்வீழ்ச்சி

(கொழும்பு)

இலங்கையில் மிகவும் உயரமான நீர்வீழ்ச்சியில் ஏற்படும் அதிசயம் பலரை வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

மிக உயரமான பம்பரகந்த நீர்வீழ்ச்சி திடீர் திடீரென தோன்றி மறைவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அண்மைய நாட்களில் இலங்கையில் மாறுபட்ட காலநிலை நிலவுகிறது. குறிப்பாக மலையகம் எங்கும் அடைமழை பெய்து வருகிறது.

இந்நிலையில் அங்குள்ள அனைத்து நீர்வீழ்ச்சிகளிலும் அதிகளவு நீர் வழிந்தோடுகிறது. நீர்வீழ்ச்சியை காண பெருந்தொகை சுற்றுலா பயணிகள் மலையக பகுதிக்கு படையெடுத்துள்ளனர்.

எனினும் தற்பொது நிலவும் பனிமூட்டம் நிறைந்த காலநிலையால் அடிக்கடி நீர்வீழ்ச்சி மறைந்து செல்கிறது. திடீரென மீண்டும் பனிமூட்டம்மறைந்து நீர்வீழ்ச்சி காட்சியளிக்க ஆரம்பித்துள்ளது.

இந்த மாற்றம் இயற்கை விரும்பி சுற்றுலா மேற்கொண்டுள்ள வெளிநாட்டவர்களை பெரிதும் கவர்ந்துள்ளது. (இ-7)

# செய்தித்துளிகள்

## பிரபல நடிகை தீபானி கைது



(கொழும்பு)

பிரபல நடிகை தீபானி சில்வா பண்டாரகம பொலிஸாரால் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த நடிகை பயணித்த கார் ஆட்டோ ஒன்றுடன் மோதியதில் ஆட்டோவில் பயணித்த குழந்தை காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதனையடுத்து குறித்த நடிகை கைது செய்யப்பட்டுள்ளார். (இ-7)

## 1,400 மில்லியன் ரூபா செலவில் விக்டோரியா அணை புனரமைப்பு

(கொழும்பு)

இலங்கையின் மிக உயர்ந்த அணைக்கட்டான, விக்டோரியா முழுமையாக புனரமைக்கப்பட்டிருப்பதாக அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீரியல்வள திட்டமிடல் பணிப்பாளர் ஆனந்த செல்லஹேவா தெரிவித்துள்ளார்.

1985ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட இந்த அணைக்கட்டு, 30 வருடங்களின் பின்னர் புனரமைக்கப்பட்டுள்ளது.

இதற்காக, 1,400 மில்லியன் ரூபாய் நிதி செலவிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதன் கீழ் எட்டு வான்கதவுகள் உள்ளிட்டவை சீர் செய்யப்பட்டுள்ளன. இதேபோன்று இதுவரையில், இருந்த இலத்திரனியல் கட்டமைப்புக்குப் பதிலாக புதிதாக இலத்திரனியல் கட்டமைப்பொன்றும் அமைக்கப்பட்டுள்ளது. (இ-7)

## திரைப்படம் பார்க்கச் செல்வோருக்கு இலவச முப்பரிமாண கண்ணாடிகள்

(கொழும்பு)

திரைப்படம் பார்க்கச் செல்வோருக்கு இலவச முப்பரிமாண கண்ணாடிகளை வழங்குமாறு, இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு பிரதமர் பணிப்புரை விடுத்துள்ளார். திரைப்படங்களை பார்க்கச் செல்வோரிடம் முப்பரிமாண கண்ணாடிகளுக்காக பணம் அறவீடு செய்யப்படுவதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் கவனம் செலுத்திய பிரதமர், உடனடியாக இலவசமாக கண்ணாடிகளை வழங்க ஆவன செய்யுமாறு உத்தரவிட்டுள்ளார். (இ-7)

## சோபித தேரரின் நினைவாக அ'புரத்தில் வீடமைப்புத்திட்டம்

(கொழும்பு)

அமரர் சோபித தேரரின் நினைவாக அநுராதபுரம் விலச்சி பிரதேசத்தில் சோபித ஹிமிகம கிராமத்தில் 153 வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

வறிய மக்களுக்காக இந்த வீடமைப்புத்திட்டத்திற்கு சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில் அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இவ் வீட்டுத்திட்டத்துக்காக இந்திய அரசாங்கம் 300 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

அமைச்சர்களான சஜித் பிரேமதாஸ, பீ ஹரிசன், சயந்த கருணாதிலக, தயா கமகே, பாராளுமன்ற உறுப்பினர் சந்திம கமகே, பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான், வட மத்திய மாகாண எதிர்க்கட்சி தலைவர் அனில் ரத்நாயக்க ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ-7)

## திருத்தங்களுக்கு இடமில்லை-அநுர



(கொழும்பு)

20 ஆவது அரசியல் திருத்தத்தில் செயற்குழு கூட்டங்களின் போது, நாட்டிற்குள் ஒரு விம்பத்தை ஏற்படுத்தும் திருத்தங்களுக்கு இடமளிக்கப் போவதில்லை என ஜே.வி.பி தெரிவித்துள்ளது.


கம்பஹாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் வைத்து, அக்கட்சியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க இதனைத் தெரிவித்தார்.

2020ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9 ஆம் திகதிக்கு பின்னர் இந்த திருத்தம் நடைமுறைக்கு கொண்டு வரப்படும்.அந்த திருத்தங்களின் படி, ஜனாதிபதி மற்றும் பிரதமர் அதிகாரங்களில் மாற்றங்கள் ஏற்படும் எனவும் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். (இ-7)



# சிறுவர் அரங்கம்

## கலைமானும் கரடியும்



கலைமான் ஒன்று தன் இரண்டு குட்டிகளுடன் அடர்ந்த காட்டுக்குள் இறை தேடி அலைந்து கொண்டிருந்தது. மாலை நேரத்தில் இருப்பிடம் திரும்பும் வேலை வந்ததும் தன் குட்டிகளை அழைத்துக்கொண்டு புறப்பட்டது.

அப்போது கலைமான் குட்டிகளில் ஒன்று காட்டுக்குள் வழி தவறி விட்டது. அந்தக் காட்டுக்குள் சிறிது தூரம் தன் தாயை தேடியது. ஆனால் தாயையும், உடன் பிறந்த மற்றொரு குட்டியையும் அதனால் கண்டுபிடிக்க முடியவில்லை.

பின்னர் அது காட்டின் ஒரு ஓரமாக நின்று கண்களில் கண்ணீர் பொங்க அழுது கொண்டிருந்தது. அந்தநேரத்தில் அந்த வழியாக கரடிக்குட்டி ஒன்று அங்கு வந்தது. அது கலைமான் குட்டியிடம் எதற்காக அழுகிறாய் என்று கேட்டது.

கலைமான் குட்டியும் தன் சோகக் கதையைக் கூறியது. பரிதாபம் கொண்ட கரடிக்குட்டி. கலைமான் குட்டியை தன்னுடன் தன் இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்றது.

இரண்டும் நண்பர்களாக இருந்து தங்களின் சிறு வயது காலத்தை கரடிக்குட்டியும் கலைமான் குட்டியும் சந்தோசமாக கழித்து வந்தன.

கலைமான் வளர வளர அதற்கு அழகிய கொம்பு முளைத்தது. அதன் காரணமாக அது பார்ப்பதற்கு மிகவும் அழகாகத் தோன்றியது. கலைமானைப் பார்த்த மற்ற விலங்குகள் அதன் அழகை பாராட்டிச் சென்றன. இதனால் கலைமானுக்கு கர்வம் உண்டானது.

அது மற்ற எந்த விலங்குகளையும் மதிக்காமல், ஏளனமாகப் பார்க்கத் தொடங்கியது. இதனால் வரை தனக்கு அடைக்கலம் கொடுத்து , தன்னுடன் உயிருக்கு உயிராக பழகி வந்த கரடியிடமும் அது தன் அழகின் கர்வத்தைக் காட்ட ஆரம்பித்தது.

கரடியே! நீ என்னைப்போல் அழகாக இல்லை. உன் முகத்தைப் பார்க்கவே அசிங்கமாக இருக்கிறது. ஆனால் என்னைப் பார், இயற்கையிலேயே அழகான எனக்கு, இப்போது வளர்ந்துள்ள கொம்புகள் மேலும் அழகு சேர்க்கின்றன. இப்போது உன்னை என் நண்பன் என்று சொல்லிக்கொள்ளவே எனக்கு வெட்கமாக இருக்கிறது . எனக்கு நண்பனாக இருக்க, என்னைப் போல் அழகு படைத்தவரே தகுதியானவர்கள். உனக்கு அந்தத் தகுதி கொஞ்சமும் இல்லை என்றது கலைமான்.

இதைக்கேட்ட கரடிக்கு முதலில் அதிர்ச்சியாகத்தான் இருந்தது. இருந்தாலும் அதனை வெளியே காட்டிக் கொள்ளாமல் "கலைமானே! உனக்கு உன் கொம்புகள் மிகுந்த அழகுதான். அதை நானும் ஒப்புக்கொள்கிறேன். அது மட்டுமல்லாது என் நண்பன் மிகவும் அழகானவன் என்பதும் எனக்கும் தானே பெருமை! என்றது பெருந்தன்மையுடன்.

ஆனால், உன்னை என் நண்பன் என்று சொல்லிக்கொள்வது எனக்கு அசிங்கமாக இருக்கிறது. நான் தனியாக வாழ முடிவு செய்து விட்டேன் என்று கூறியபடி கலைமான் அங்கிருந்து புறப்பட்டுப் போய் விட்டது.

இது நாள் வரை தன்னோடு ஒற்றுமையாக வாழ்ந்த மான், பிரிந்து போவதைக் கண்டு வேதனையில் துடித்தது கரடி. இருப்பினும் மனதை தேற்றிக்கொண்டது.

ஒரு நாள் கலைமான், இரை தேடுவதற்காக வெளியில் சென்றது. அப்போது மரம் ஒன்றில் இருந்த சிறுத்தை கலைமானை வேட்டையாடத் துரத்தியது.

சிறுத்தைக்கு பயந்து தலை தெறிக்க ஓடிய கலைமானின் தலை ஒரு மரத்தின் கிளைகளுக்கு இடையில் வசமாக மாட்டிக்கொண்டது. எவ்வளவு முயன்றும் அதன் தலை வெளியே வரவில்லை தன் முழு பலத்தினைக் கொண்டு கலைமான் தலையை வெளியே எடுக்க முயன்றது. இறுதியில் அதன் கொம்புகள் முறிந்து தலை வெளியே வந்தது.

கொம்புகள் ஒடிந்து போனதால் கலைமான் பார்ப்பதற்கே அசிங்கமாக தோற்றம் அழித்தது. இதைப் பார்த்த மற்ற விலங்குகள் கேலி பேசி சிரித்தன.

கலைமான் அழகிழந்து பழைய படி கரடியிடமே சென்றது. கரடியோ, கலைமானுக்கு நடந்ததைக் கேட்டு வருந்தியது.

மானே! அழகு என்பது எப்போதும் நம்முடன் இருக்கப்போகிற சொத்தில்லை.

வயதாக வயதாக அது நம்மை விட்டு விலகுவது உறுதி. உனக்கு கொஞ்சம் விரைவாக போய் விட்டது. இதற்காக வருந்தாதே என்று கலைமானை தேற்றியது கரடி. கரடியின் பெருந்தன்மையைக் கண்டு வெட்கத்தில் தலை குனிந்த கலைமான், அதனிடம் மன்னிப்புக் கேட்டது.

இருவரும் பழையபடி நண்பர்களாக வாழத்தொடங்கின.

## 2018.05 29 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1453-ஒட்டோமான் படைகள் கான்ஸ்டான்டினோபிள் நகரைக் கைப்பற்றி பைசண்டைன் பேரரசை முடிவுக்குக் கொண்டுவந்தனர்.
- 1727-இரண்டாம் பீட்டர் ரஷ்யாவின் மன்னனாக முடிசூடினான்.
- 1848-விஸ்கொன்சின் ஐக்கிய அமெரிக்காவின் 30ஆவது மாநிலமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- 1869-பிரித்தானியாவில் பகிரங்க மரண தண்டனை தடை செய்யப்பட்டது.
- 1903-சேர்பியாவின் மன்னன் அலெக்சாண்டர் ஒப்ரெனோவிச் மற்றும் அராசி திராகா இருவரும் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1919-ஐன்ஸ்டீனின் சார்புக் கோட்பாடு சோதிக்கப்பட்டது. பின்னர் இது உறுதிப்படுத்தப்பட்டது.
- 1947-இந்தியத் தரக்கட்டுப்பாட்டு நிறுவனம் அமைக்கப்பட்டது.
- 1972-டெல் அவிவ் விமான நிலையத்தில் மூன்று ஜப்பானியர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் 26 பேர் கொல்லப்பட்டனர்.
- 1982-இலங்கை மட்டக்களப்பில் சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரி ஆரம்பிக்கப் பட்டது.
- 1988-அமெரிக்க ஜனாதிபதி றொனால்ட் ரேகன் முதற் தடவையாக சோவியத் ஒன்றியத்துக்கு விஜயம் செய்தார்.
- 1999-டிஸ்கவரி விண்ணோடம் பன்னாட்டு விண்வெளி நிலையத்துடனான தனது முதலாவது இணைப்பை வெற்றிகரமாக முடித்தது.
- 2005-ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகளைத் தீவிரவாத அமைப்பாக அறிவித்துத் தடை செய்தது.

### பிறப்புகள்

- 1890-மார்ட்டின் விக்கிரமசிங்க, சிங்கள எழுத்தாளர் (இ. 1976)
- 1914-டென்சிங் நோர்கே, நேபாள்-இந்திய மலையேறி (இ. 1986)
- 1917-ஜான் எஃப். கென்னடி, அமெரிக்காவின் 35ஆவது குடியரசுத் தலைவர் (இ. 1963)
- 1937-மானா மக்கீன், ஈழத்து எழுத்தாளர், ஊடகவியலாளர்
- 1942-மாதுலுவாவே சோபித தேரர், இலங்கைப் பௌத்த பிக்கு, மனித உரிமை செயற்பாட்டாளர் (இ. 2015)
- 1964-ஆறுமுகன் தொண்டமான், இலங்கை மலையக அரசியல்வாதி, தொழிற்சங்கத் தலைவர்

### இறப்புகள்

- 1500-பார்த்தலோமியோ டயஸ், போர்த்துக்கீச நாடுகாண் பயணி, மாலுமி (பி. 1451)
- 1829-ஹம்பிரி டேவி, ஆங்கிலேய-சுவிட்சர்லாந்து வேதியியலாளர் (பி. 1778)
- 1958-வான் ரமோன் ஹிமெனெஸ், நோபல் பரிசு பெற்ற ஸ்பானியக் கவிஞர் (பி. 1881)
- 1979-மெரி பிக்ஃபோர்ட், கனேடிய-அமெரிக்க நடிகை, தயாரிப்பாளர் (பி. 1892)
- 1984-மார்க்கண்டு சுவாமிகள், ஈழத்து சித்தர் (பி. 1899)
- 1987-சரண் சிங், இந்தியாவின் 5ஆவது பிரதமர் (பி. 1902)
- 2005-ஹாமில்டன் நாகி, தென்னாபிரிக்க மருத்துவர் (பி. 1926)
- 2008-டி.பி.முத்துலட்சுமி, தென்னிந்தியத் திரைப் பட நடிகை
- 2009-சோ.கிருஷ்ணராஜா, இலங்கை வரலாற்றாளர், மெய்யியல் பேராசிரியர் (பி. 1947)
- 2013-ஜயலத் ஜயவர்தன, இலங்கை அரசியல்வாதி, மருத்துவர் (பி. 1953)

### சிறப்பு நாள்

- ஜனநாயக நாள் (நைஜீரியா)
- ஐக்கிய நாடுகளின் அமைதி காப்போருக்கான சர்வதேச நாள்.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 80 | 80 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 95 | 120 | 110 |
| பச்சைமிளகாய் | 80 | 120 | 120 | 80 | 120 | 70 |
| தக்காளி | 200 | 200 | 200 | 130 | 200 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 | 35 | 40 | 35 |
| கோவா | 80 | 120 | 100 | 80 | 120 | 75 |
| கரட் | 180 | 250 | 200 | 120 | 300 | 200 |
| பூசணி | 40 | 20 | 40 | 20 | 40 | 30 |
| புடோல் | 80 | 80 | 80 | 60 | 120 | 80 |
| வாழைக்காய் | 50 | 40 | 40 | 35 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 140 | 200 | 160 | 130 | 160 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 85 | 100 | 100 |
| பாகற்காய் | 140 | 200 | 140 | 110 | 200 | 180 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 100 | 60 | 160 | 70 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 80 | 65 | 120 | 60 |
| பயற்றங்காய் | 120 | 200 | 100 | 80 | 120 | 120 |
| லீக்ஸ் | 250 | 300 | 200 | 190 | 280 | 250 |
| பீற்றூட் | 100 | 100 | 100 | 40 | 100 | 80 |
| கறிமிளகாய் | 120 | 200 | 160 | 65 | 160 | 120 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 200 | 90 | 200 | 200 |
| போஞ்சி | 250 | 300 | 240 | — | 280 | 250 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | — | — | 100 | 90 |
| கீரை-1பிடி | 40 | 40 | 30 | 30 | 40 | 50 |
| தேசிக்காய் | 200 | 100 | 200 | 200 | 300 | 240 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 80 | 75 | 35-60 | 50-75 | 70 |
| இராசவள்ளி | 180 | 200 | 160 | — | 160 | 180 |
| வெங்காயப்பூ | 250 | 350 | 280 | — | 320 | 300 |
| முள்ளங்கி | 100 | 150 | 140 | 30 | 120 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 40 | 10 | 30 | 30 |
| வல்லாரை | 10 | 20 | 20 | 10 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | — | — | — | 80 | 120 |

பலத்தினால்தான் சமாதானத்தைப் பெற இயலும்,
பலம் என்பது ஒற்றுமையால் கிடைக்கக்கூடியது.
– யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் மக்கள் பேரவையை முதன்மைப்படுத்தியிருந்தால்...

முற்றுமுழுதாக சுயநலம் இருக்கின்ற இடத்தில் பொதுநலத்துக்கு அறவே இடமில்லை என்பது நிறுதிட்டமான உண்மை.

இந்த உண்மையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் போக்கு சான்றுப்படுத்தும்.

தங்களின் சுயலாபத்துக்கே முன்னுரிமை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை நினைத்துச் செயற்பட்டபோது, தமிழ் மக்களுக்கான அத்தனை உரிமைசார் விடயங்களும் செல்லுபடியற்றதாகிப் போயிற்று.

எனினும் இந்த உண்மையை தமிழ் மக்கள் முழுமையாக உணரவில்லை என்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

சர்வதேச போர்க்குற்ற விசாரணை மற்றும் தமிழர் தாயகத்தில் உள்ள படையினரின் ஆக்கிரமிப்பு, காணாமல்போனவர்களைக் கண்டறிதல், அரசியல்கைதிகளின் விடுதலை என எதுவும் நடந்தேறாத வகையில் எங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுடன் இணைந்து தன்னைப் பலவீனப்படுத்திக் கொண்டது.

இனிமேல் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனோ அன்றி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடனோ பேசிக் கதைத்து எந்தத் தீர்மானத்தையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் பெறமுடியாதென்பது வெளிப்படையான உண்மை.

ஓர் இனத்தின் அரசியல் தலைமை என்பது முதலில் தனது நேர்மைத்தனத்தை உறுதிப்படுத்த வேண்டும். பணம் உள்ளிட்ட எந்தச் சலுகைகளுக்கும் விலைபோகாத மனத்திடம் இருக்க வேண்டும்.

எதிரியும் குறை சொல்லாத அளவுக்கு நேர்மை இருக்கும்போது தான் கொண்ட இலட்சியத்தை அடைய முடியும்.

எனினும் துரதிர்ஷ்டவசமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது நேர்மைத்தனத்தை நிரூபிக்கத் தவறிவிட்டது.

இதன் விளைவுதான் இன்று அவர்களால் எதுவும் செய்ய முடியாத நிலைமையை ஏற்படுத்தியுள்ளது எனலாம்.

உண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் உரிமையை வென்றெடுக்க வேண்டும் எனக் கருதியிருந்தால், தமிழ் மக்களின் இயக்கமாக உருவாக்கப்பட்ட தமிழ் மக்கள் பேரவையை கூட்டமைப்பு ஆதரித்திருக்க வேண்டும்.

இனப்பிரச்சினை உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பில் அரசுடன் பேசும்போது தமிழ் மக்கள் பேரவையைக் கூட்டி தங்களின் பிடியை வலுப்படுத்தியிருக்க முடியும்.

ஆனால் இதனைச் செய்வதற்கு கூட்டமைப்பின் தலைமை ஒருபோதும் தயாராக இருக்கவில்லை.

மாறாக தமிழ் மக்கள் பேரவை தமக்கு எதிரான அமைப்பென்றே அவர்கள் கருதினர்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு என்று பேசப்படுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சிங்கள பேரினவாதக் கட்சிகளைச் சுட்டிக் காட்டி அவர்கள் குழப்புவார்கள், அவர்கள் விடமாட்டார்கள் என்று பொய்யுரைத்துப் பொய்யுரைத்தே எங்களுக்கு எதுவும் தராமல் விட்ட ஆட்சியாளர்களின் இராஜதந்திரம் கூட்டமைப்பிடம் இருந்திருந்தால், அவர்கள் தமிழ் மக்கள் பேரவையை இன்னும் பலப்படுத்தியிருப்பார்கள்.

என்ன செய்வது! தனி மனித ஆதிக்கம் மேலோங்கி கூட இருப்பவர்கள் கைகட்டி நிற்கும் நிலை வந்தால், இதுதான் நடக்கும் என்பதற்கு ஈழத் தமிழர்கள்தான் மிகச்சிறந்த உதாரணமாவர்.

## நிறைவேற்று ஜனாதிபதி முறைமை தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தி காலத்தை கடத்த நாம் தயாரில்லை – அநுரகுமார

(கொழும்பு)

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையினை நீக்குவதா? இல்லையா? என்பது குறித்து ஜனாதிபதியுடனே? அல்லது பிரதமருடனே? கலந்துரையாடி காலத்தை கடத்துவதற்கு நாம் தயாரில்லை என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் செய்தியாளர் சந்திப்பு கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

20ஆவது திருத்தம் குறித்து ஜனாதிபதி, பிரதமருடன் கலந்துரையாட முடியும்.

ஆனால் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையினை நீக்குவது குறித்து பிரதமருடனோ அல்லது ஜனாதிபதியுடனே? கலந்துரையாட வேண்டிய அவசியம் இல்லை.

அவர்கள் இருவருமே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதாக கூறியே ஆட்சிக்கு வந்தனர்.

ஆகவே நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்குவதா? இல்லையா? என்பது குறித்து இவர்களுடன் பேச வேண்டிய அவசியம் இல்லை.

அதேபோல் பேச்சுவார்த்தை என்ற பெயரில் காலத்தை கடத்தவும் நாம் தயாராகவும் இல்லை. மேலும் காலத்தை கடத்தி தமது தேவைகளை பூர்த்தி செய்யும் சதிகளுக்கு நாம் இடமளிக்கப்போவதில்லை.

எனினும் அரசியல் அமைப்பின் 20ஆவது திருத தம் குறித்து சகல தரப்புடனும் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து ஆரோக்கியமான மாற்றங்களை மேற்கொள்ள நாம் தயார் என்றார். (ம)

## பலாலி விமான நிலைய விஸ்தரிப்புக்கு ஆயிரம் ஏக்கர் காணி வேண்டாம்

### பிரதமரிடம் பாதுகாப்பு படைத்தரப்பு தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பலாலி பிராந்திய விமான நிலைய விஸ்தரிப்புக்கு 724 ஏக்கர் காணிமட்டுமே தேவை என விமானப்படை தரப்பு தெரிவித்துள்ள நிலையில் விமான நிலைய விஸ்தரிப்புக்கு என மீண்டும் மேலதிகமாக பொதுமக்களின் காணி சுவீகரிக்கப்படக் கூடாது என மக்கள் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் படையினர் வசமுள்ள பொதுமக்களின் காணி விடுவிப்பு தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் பாதுகாப்பு படைத்தரப்பினர், அரச அதிகாரிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளுக்கு இடையிலான கலந்துரையாடல் ஒன்று நேற்று யாழ். மாவட்ட அரச அதிபர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலிலேயே மேற்குறித்த விடயத்தை விமானப்படை அதிகாரி தெரிவித்துள்ளார்.

பலாலி விமானநிலையை விஸ்தரிப்புக்கு ஏற்கெனவே 600 ஏக்கர் காணி சுவீகரிக்கப்பட்டது. இந்த நிலையில் மேலதிகமாக பொதுமக்களின் 400 ஏக்கர் காணி சுவீகரிக்கப்படப்போவதாக அண்மையில் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் மக்களின் காணிகள் சுவீகரிக்கப்படவுள்ளமைக்கு பொதுமக்கள், மக்கள் பிரதிநிதிகள் தமது எதிர்ப்பினை வெளியிட்டிருந்தனர்.

எனவே நேற்றைய கலந்துரையாடலில் இந்த விடயம் தொடர்பாக கலந்துரையாடியிருந்தனர். அதில், பலாலி பிராந்திய விமான நிலைய விஸ்தரிப்புக்கு குறைந்த பட்சம் எத்தனை ஏக்கர் காணி தேவை என படைத்தரப்பிடம் கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த விமானப்படை அதிகாரி பலாலி விமான நிலைய விஸ்தரிப்புக்கு 724 ஏக்கர்போதும் எனவும் அதை விட குறைந்த அளவு காணி விஸ்தரிப்புக்கு போதாது எனவும் மேலதிகமாக காணி தேவையில்லை எனவும் தெரிவித்தனர்.

எனவே அதற்கு அனைத்து தரப்பும் சம்மதித்துள்ள நிலையில் விமானநிலைய விஸ்தரிப்புக்கு மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதமர் தெரிவித்திருந்தார்.

குறித்த கலந்துரையாடலில் வலி வடக்கு பிரதேசத்தில் கடற்படையினர் வசமுள்ள காணிகளை விடுவிக்குமாறு மக்கள் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்திருந்தனர். அத்துடன் படையினர் வசமுள்ள பிரதான வீதிகளை விடுவிக்குமாறும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

பாரிய படை முகாம்கள் அமைந்துள்ள பகுதிகள் தற்போது விடுவிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதுடன், பிரதான வீதிகள், மதஸ்தலங்கள் பாடசாலைகள் உள்ளிட்ட பகுதிகள் எதிர்வரும் சில மாதங்களுக்குள் விடுவிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக படைத்தரப்பு தெரிவித்துள்ளது. (ம-9)

## மிருசுவில் தூய வேளாங்கன்னி அன்னைக்கு இன்று கொடியேற்றம்

(மிருசுவில்)

மிருசுவில் பழைய வாய்க்கால் தூய வேளாங்கன்னி ஆலயத்தின் வருடாந்த திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து ஆயத்த வழிபாடுகள் 30, 31ஆம் திகதிகள் இடம்பெறும்.

முதலாம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணை விழாவும் மறுநாள் சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு திருச்செபமாலையுடன் திருவிழாத் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து அன்னையின் திருச்சொரூப பவனியும் திருச்சொரூப ஆசீர்வாதமும் இடம்பெறும்.

இம்முறையும் பக்தர்களின் நலனைக் கருத்திற் கொண்டு சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக பங்குத் தந்தை அருட்திரு. ஜேம்ஸ் அடிகளார் அறிவித்துள்ளார். (இ)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ்.பிரதேசத்தில சுருவில், மெலிஞ்சிமுனை ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில பண்டாரிக்குளம் கிராமம், தவசிக்குளம் கிராமம், அட்டம்பஸ்கட கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின்தடைப்படும். (இ-9)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- மனிதனுக்குள் புதைந்திருக்கும் பரிபூரணத் தன்மையை வெளிப்படுத்துவது தான் கல்வியின் குறிக்கோள்.
- மன உறுதியும், அதை வெளிப்படுத்தும் விதமும், பயன்தரும் விதத்தில் மனஆற்றலை அமைப்பதும் பயிற்சிகள் கல்வியில் இடம்பெற வேண்டும்.
- வெறும் புள்ளிவிபரங்களைச் சேமிப்பதில் பயனில்லை. மனதை ஒருமுகப்படுத்துவதாக கல்வித்திட்டம் அமையவேண்டும்.
- மூளைக்குள் பல்வேறு விடயங்களைத் திணித்து வைப்பதால் யாருக்கும் பயனில்லை. அவை ஜீரணமாகாமல் வாழ்நாளெல்லாம் தொந்தரவையே கொடுக்கும்.
- தன்னம்பிக்கையைத் தந்து ஒருவனைத் தன் சொந்தக்கால்களில் நிற்கும்படி செய்வதில் தான் கல்வியின் உண்மையான வெற்றி இருக்கிறது.
- ஐந்தே ஐந்து உயர்ந்த கருத்துக்களைக் கிரகித்துக்கொண்டு அவற்றை வாழ்வில் சரிவரக் கடைப்பிடித்தால்கூட, கல்வி கற்ற பயன் ஒருவருக்கு கிடைத்துவிடும்.
- சிங்கம் போன்ற மனஉறுதி, நல்ல ஒழுக்கம், பிறருக்கு உதவி புரியும் குணம் ஆகியவையே கல்வி பெற்றதன் அடையாளங்கள்.

# வடமாகாண விளையாட்டு விழா யாழ்.மாவட்டம் சம்பியன்

வடமாகாண விளையாட்டுத்திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடமாகாண மாவட்டங்களுக்கிடையிலான 12 ஆவது விளையாட்டுப் போட்டிகள் 26 மற்றும் 27 ஆகிய இரு தினங்களில் யாழ்ப்பாணம் துரைய்ப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது. ஏற்கனவே பெரு விளையாட்டுப் போட்டிகள் முடிவடைந்த நிலையில், ஐந்து மாவட்டங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும், வீர. வீராங்கனைகளுக்கிடையில் தடகள மற்றும் மைதான நிகழ்வுகள் நடைபெற்றன.

27 ஆம் திகதி நடைபெற்ற நிகழ்வுகளில் ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஏ.புவிதரன் 4.60 மீற்றர் உயரம் பாய்ந்து முன்னர் இருந்த, 4.40 மீற்றர் என்ற சாதனையை தகர்த்தார். 27 ஆம் திகதி நடைபெற்ற தடகள மற்றும் மைதான நிகழ்வுகளில் தடங்களைப்பதிவு செய்தவீர. வீராங்கனைகள்.

100 மீற்றர் ஆண்களுக்கான ஓட்டம் - மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த எம்.பிறேம்தாஸ் முதலிடத்தையும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆர்.சதீஸன் இரண்டாமிடத்தையும், அதே மாவட்டத்தைச் சேர்ந்த ரி.விதுசன் மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

400 மீற்றர் ஆண்களுக்கான ஓட்டம் - மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த ஜெ.எஸ்ராஜன் பெர்னாண்டோ முதலிடத்தையும், அதே மாவட்டத்தைச் சேர்ந்த



வடமாகாண விளையாட்டு விழாவில் 79 தங்கப் பதக்கங்களை வென்று யாழ்ப்பாண மாவட்டம் முதலிடம் பெற்றது. சிறந்த மெய்வல்லுநர்களாக மன்னார் மாவட்டத்தின் எம்.பிறேம்தாஸ் மற்றும் யாழ்ப்பாணத்தின் ஏ.புவிதரன் தெரிவு செய்யப்பட்டனர்.

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில், வடமாகாண மாவட்டங்களுக்கிடையிலான 12 ஆவது விளையாட்டுப் போட்டிகள் 26 மற்றும் 27 ஆகிய இரு தினங்களில் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது.

ஏற்கனவே பெரு விளையாட்டுப் போட்டிகள் முடிவடைந்த நிலையில், ஐந்து மாவட்டங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும், வீர. வீராங்கனைகளுக்கிடையில் தடகள மற்றும் மைதான நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்த விளையாட்டு நிகழ்வில் 79 தங்கம், 54 வெள்ளி மற்றும் 29 வெண்கலப் பதக்கங்களைப் பெற்று யாழ்.மாவட்டம் சம்பியனாகியது.

28 தங்கம், 20 வெள்ளி மற்றும் 40 வெண்கலப் பதக்கம் பெற்ற வவுனியா மாவட்டம் இரண்டாமிடத்தையும், 25 தங்கம், 33 வெள்ளி மற்றும் 39 வெண்கலப் பதக்கங்கள் பெற்ற முல்லைத்தீவு மாவட்டம் மூன்றாமிடத்தையும், 22 தங்கம், 35 வெள்ளி மற்றும் 24 வெண்கலப் பதக்கங்கள் பெற்ற கிளிநொச்சி மாவட்டம் நான்காமிடத்தையும் 13 தங்கம், 15 வெள்ளி மற்றும் 19 வெண்கலப் பதக்கங்கள் பெற்ற மன்னார் மாவட்டம் ஐந்தாவது இடத்தையும் பெற்றது.

(படங்கள்:-பொபி. சுரேன்)

பெண்களுக்கான முப்பாய்தல் - கிளிநொச்சியைச் சேர்ந்த ஏ.மேரி தயாநிதி முதலிடத்தையும் மன்னாரைச் சேர்ந்த எஸ்.தேனுசா இரண்டாமிடத்தையும் கிளிநொச்சியைச் சேர்ந்த ஜே.சுகிர்தா மூன்றாமிடத்தையும் பெற்றனர்.

பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் - யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜெ.அனித்தா முதலிடத்தையும் அதே மாவட்டத்தைச் சேர்ந்த சி.ஹெறினா இரண்டாமிடத்தையும் கிளிநொச்சியைச் சேர்ந்த பி.திவியா மூன்றாமிடத்தையும் பெற்றனர்.

பெண்களுக்கான ஈட்டி எறிதல் - கிளிநொச்சியைச் சேர்ந்த வி.கிறிஸ்ரீனா முதலிடத்தையும் முல்லைத்தீவைச் சேர்ந்த கே.சாமந்தி இரண்டாமிடத்தையும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எஸ்.கஜானி மூன்றாமிடத்தையும் பெற்றனர்.

பெண்களுக்கான குண்டு சுற்றி எறிதல் - மன்னாரைச் சேர்ந்த எம்.டொமினிக்கா முதலிடத்தையும் கிளிநொச்சியைச் சேர்ந்த எஸ்.லினோஜிதா இரண்டாமிடத்தையும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த என்.அஸ்மியா மூன்றாமிடத்தையும் பெற்றனர்.

4X400 மீற்றர் ஆண்களுக்கான ஓட்டம் - மன்னார் மாவட்ட அஞ்சலோட்ட அணி முதலிடத்தையும் யாழ்ப்பாண மாவட்ட அஞ்சலோட்ட அணி இரண்டாமிடத்தையும் முல்லைத்தீவு மாவட்ட அஞ்சலோட்ட அணி மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

4X400 மீற்றர் பெண்களுக்கான ஓட்டம் - கிளிநொச்சி மாவட்ட அஞ்சலோட்ட அணி முதலிடத்தையும் யாழ்ப்பாண அஞ்சலோட்ட அணி இரண்டாமிடத்தையும் முல்லைத்தீவு மாவட்ட அஞ்சலோட்ட அணி மூன்றாமிடத்தையும் பெற்றன.

சிறந்த தடகள வீரராக 100 மீற்றர்



டத்தையும் கிளிநொச்சி மாவட்டத்தின் மேரி தர்சிகா இரண்டாமிடத்தையும் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த ஏ.அனுசலா மூன்றாமிடத்தையும் பெற்றனர்.

400 மீற்றர் பெண்களுக்கான ஓட்டம் - கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ரி.டென்சிகா முதலிடத்தையும் வவுனியாவைச் சேர்ந்த கே.குமுதா இரண்டாமிடத்தையும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜெ.திருட்

என்.நாசாத்கான் மற்றும் ஏ.அபினாஸ் முறையே இரண்டாம் மூன்றாமிடங்களையும் பெற்றனர்.

1500 மீற்றர் ஆண்களுக்கான ஓட்டம் - வவுனியாவைச் சேர்ந்த எஸ்.கிந்துசன் முதலிடத்தையும் மன்னாரைச் சேர்ந்த வை.துஸியந்தன் இரண்டாமிடத்தையும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கே.ஜெயந்தன் மூன்றாமிடத்தையும் பெற்றனர்.

5000 மீற்றர் ஆண்களுக்கான

ஆர்.எஸ்.றினோஸன் லம்பேர்ட் இரண்டாமிடத்தையும் அதே மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.ஜேசுதாஸன் மூன்றாமிடத்தையும் பெற்றனர்.

ஆண்களுக்கான நீளம் பாய்தல் - யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த என்.நிதுஜன் முதலிடத்தையும் அதே மாவட்டத்தைச் சேர்ந்த கே.கீர்த்திகன் இரண்டாமிடத்தையும் மன்னாரைச் சேர்ந்த என்.எம்.பர்மன் மூன்றாமிடத்தையும் பெற்றனர்.





சிகா மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

1500 மீற்றர் பெண்களுக்கான ஓட்டம் - முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.ஹேமா, எஸ்.விதுசா, எஸ்.டிலக்சனா ஆகியோர் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்றனர்.

10 ஆயிரம் மீற்றர் பெண்களுக்கான

ஓட்டத்தை 11 செக்கன்களில் ஓடி முடித்த மன்னாரைச் சேர்ந்த எம்.பிறேம்தாஸ் தெரிவு செய்யப்பட்டதுடன், சிறந்த தடகள வீராங்கனையாக 100 மீற்றர் ஓட்டத்தை 13.50 செக்கன்களில் ஓடி முடித்த மன்னாரைச் சேர்ந்த ஏ.சௌமியா பெர்னாண்டோ தெரிவு செய்யப்பட்டார்.

சிறந்த மைதான வீரராக கோலூன்



ஓட்டம் - வவுனியாவைச் சேர்ந்த எஸ்.கிந்துசன் முதலிடத்தையும் முல்லைத்தீவைச் சேர்ந்த எல்.தேவகரன் இரண்டாமிடத்தையும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கே.ஜெயந்தன்

ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் - யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஏ.புவிதரன் முதலிடத்தையும் அதே மாவட்டத்தைச் சேர்ந்தவர்களான எஸ்.டிலக்சன், கே.நெப்தலி ஜொய்சன்





மூன்றாமிடத்தையும் பெற்றனர்.

110 மீற்றர் ஆண்களுக்கான தடைதாண்டல் - யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆர்.சதீஸன் முதலிடத்தையும், மன்னாரைச் சேர்ந்த

முறையே இரண்டாம் மற்றும் மூன்றாமிடங்களைப் பெற்றனர்.

ஆண்களுக்கான தட்டெறிதல் - முதலிடத்தை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எஸ்.பிரகாஸ்ராஜ் முதலிடத்

தையும், அதே மாவட்டத்தைச் சேர்ந்த வி.ஜதார்த்தன், எஸ்.தேவகுமாரன் முறையே இரண்டாம் மூன்றாமிடங்களைப் பெற்றனர்.

ஆண்களுக்கான குண்டு சுற்றி எறிதல் - யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எஸ்.பிரகாஸ்ராஜ் முதலிடத்தையும் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த சி.ஜெனோஜன் இரண்டாமிடத்தையும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வி.ஜதார்த்தன் மூன்றாமிடத்தையும் பெற்றனர்.

100 மீற்றர் பெண்களுக்கான ஓட்டம் - மன்னார் மாவட்டத்தின் ஏ.சௌமியன் பெர்னாண்டோ முதலி

ஓட்டம் - முல்லைத்தீவைச் சேர்ந்த எஸ்.ஹேமா முதலிடத்தையும், அதே மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.விதுசா இரண்டாமிடத்தையும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எல்.மங்கையற்கரசி மூன்றாமிடத்தையும் பெற்றனர்.

100 மீற்றர் பெண்களுக்கான தடைதாண்டல் - யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜெ.அனித்தா முதலிடத்தையும் அதே மாவட்டத்தைச் சேர்ந்த சி.தீபிகா இரண்டாமிடத்தையும் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஏ.மேரி தயாநிதி மூன்றாமிடத்தையும் பெற்றனர்.

றிப் பாய்தலில் 4.60 மீற்றர் உயரம் பாய்ந்து சாதனை நிகழ்த்திய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஏ.புவிதரன் தெரிவு செய்யப்பட்டதுடன், சிறந்த மைதான வீராங்கனையாக முப்பாய்தலில் 10.70 மீற்றர் தூரம் பாய்ந்த மன்னாரைச் சேர்ந்த ஏ.மேரி தயாநிதி தெரிவு செய்யப்பட்டார்.

சிறந்த மெய்வல்லுநர்களாக யாழ்ப் பாணத்தைச் சேர்ந்த ரி.புவிதரன் மற்றும் மன்னாரைச் சேர்ந்த எம்.பிறே ம்தாஸ் தெரிவு செய்யப்பட்டனர். (க-26)

## துப்பாக்கியை காட்டி...

றுத்தினார். ஒரு பாராளுமன்ற உறுப்பினராக இருந்தும் கூட அவர் என்னுடன் அப்படி நடந்து கொண்டார் என பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் நேற்று பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

நேற்று கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி மீளாய்வு கூட்டம் பிரதமர் ரணில் விக்கிர சிங்க தலைமையில் இடம்பெற்றது. இதன் போதே பாராளுமன்ற உறுப்பினர் பிரதமரிடம் இவ் முறைப்பாட்டை பகிரங்கமாக தெரிவித்தார்.

குறித்த அதிகாரி ஒரு மனிதரை போல நடந்து கொள்ளவில்லை, இடுப்பில் பிஸ்டலுடன் என்னை ஊற்றுப்புலம் காட்டுக்குள் வைத்து மிரட்டினார். அவர் ஒரு தமிழ் அதிகாரி. அவர் மக்களின் நலன்களுக்கு புறம்பாகவே நடந்து கொள்கின்றார். இவரின் செயற்பாடு காணி இல்லாத மக்களுக்கு காணி வழங்குவதற்கு தடையாக இருக்கிறது எனத் தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த பிரதமர் குறித்த விடயம் தொடர்பில் ஆளுநர் மற்றும் பொலிஸாருக்கு முறையிடுமாறும் தன்னால் விசாரணை செய்ய முடியாது என்றும் தெரிவித்தார். (ம)

## பொலிஸாரின் மோட்டார்...

சிகிச்சை பலனின்றி நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

வட்டுக்கோட்டை மேற்கு மதவடிச்சந்தி பகுதியை சேர்ந்த வேலுப்பிள்ளை மகேந்திரம் (வயது 65) என்ற நபரே மேற்படி உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் கடந்த 25ஆம் திகதி வீட்டில் இருந்து பொருட்கள் வாங்குவதற்கு மதவடி சந்தியில் உள்ள கடைக்கு சென்றுள்ளார். பொருட்கள் வாங்கிவிட்டு வீதியை கடக்க முற்பட்ட போது வட்டுக்கோட்டையில் இருந்து சித்தன்கேணி நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்ற போக்குவரத்து பொலிஸார் குறித்த நபரை மோதியுள்ளனர்.

அந்த .டத்தில் காயமடைந்து விழுந்த நபர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். இந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று காலை உயிரிழந்துள்ளார். இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். (ம-9)

## ரணில் விருந்துக்காக...

பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள ரணில் விக்கிரமசிங்க நேற்று இரவு யாழில் உள்ள தனியார் விடுதியில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த இரவு விருந்துக்கு சென்றிருந்தார்.

பொலிஸார் மற்றும் சிறப்பு அதிரடிப் படையினர் பாதுகாப்புக் கடமைக்கு அதிகளவில் அமர்த்தப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் இரவு 9.45 மணியளவில் யாழ்ப்பாண நகரத்தில் மின் தடை ஏற்பட்டது. விடுதியின் வெளிப்புறத்தில், யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியில் கல் வீச்சு தாக்குதல் நடத்தப்பட்டது. எனினும் கல் வீச்சை மேற்கொண்டோர் தப்பி ஓடிவிட்டனர் எனவும் இச்சம்பவம் தொடர்பில் துரித விசாரணைகளை பொலிஸார் மேற்கொள்வதாக தெரிவித்துள்ளனர்.

எனினும் ஹோட்டல் மீது எந்த கல்வீச்சுத் தாக்குதலும் இடம்பெறவில்லை என நிர்வாகம் தெரிவித்தது எனப் பொலிஸார் குறிப்பிட்டனர். (ம-9)

## வலி.வடக்கை தவிர்ந்த...

யாழ்.மாவட்ட அரச அதிபர் அலுவலகத்தில் இடம்பெற்றது. அதன் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்

அதாவது வலி.வடக்கு பகுதியில் தேசிய பாது காப்பு கருதி நிலங்கள் விடுவிப்பதில் கால தாமதம் ஏற்படுகிறது. வலி வடக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் உள்ள பொதுமக்கள் மற்றும் அரச நிலங்களை இராணுவத்தினர் விடுவிப்பதற்கு நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ளுமாறு படைத்தரப்புக்கு பிரதமர் தெரிவித்துள்ளார். (ம-9)

## படையினர் வசமுள்ள...

கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்.

இந்தக் கலந்துரையாடல்களுக்கு வடக்கு மாகாண முதலமைச்சருக்கு அழைப்பு விடுத்த போதும் அவர் பங்கேற்கவில்லை.

இந்த நிலையில் தனது கோரிக்கைகள் அடங்கிய ஆவணத்தை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், தனது செயலாளர் ஊடாக பிரதமரிடம் நேற்று கையளித்தார்.

அந்த ஆவணத்தின் தமிழாக்கம் இங்கு முழுமையாகத் தரப்படுகிறது.

01. காணி விடுவித்தல்

படையினர் வசமுள்ள காணிகள் அனைத்தையும் மக்கள் காணிகள் ஆயின் மக்களிடமும் அரச காணிகளாயின் மாகாண காணி ஆணையாளரிடமும் கையளிக்கப்பட வேண்டும். 2013ல் இருந்து காணிகளை எம்மிடம் ஒப்படையுங்கள் என்று கேட்டு வருகின்றோம். அரச காணிகள் மேல் எமக்கிருக்கும் சட்ட உரித்து அரசியல் யாப்பின் ஒன்பதாவது அட்டவணையின் முதலாம் நிரலின் கீழ் வரும் அனுபந்தம் IIல் தரப்பட்டுள்ளன.

பாதுகாப்பு வேலைகளைப் பொலிஸாரிடம் கையளிக்கலாம். தேவையெனில் ஏதேனும் வேலைகளை படையினர் செய்ய வேண்டி வந்தால் அந்த குறிப்பிட்ட சேவைகளை எமது மேற்பார்வையின் கீழ் அவர்கள் செய்யலாம். அதற்காகப் படையினரை உரிய அதிகாரிகள் இங்கு அனுப்பலாம். இன்று வரையில் நிலைபெற்றிருக்கும் ஒரு இராணுவமாகவே போர் முடிந்த பின்னரும் படையினர் இங்கு குடியிருந்து வருகின்றனர். இப்போது அவர்கள் தமது தந்திரோபாயங்களை மாற்றி மக்களுக்கு உதவி செய்ய முன்வந்துள்ளனர். சோழியன் குடுமி சும்மா ஆடாது.

02.கட்டமைப்புக்களின் அபிவிருத்தி

1.(i)காங்கேசன்துறைத் துறைமுக வேலைகள் எப்போது ஆரம்பிப்பது?

(ii)தூத்துக்குடி-தலைமன்னார், படகு சேவையை மீண்டும் தொடங்க வேண்டும். தொடங்கினால் புலம்பெயர்ந்த எம் மக்கள் தமது உடைமைகளை இங்கு கொண்டுவர முடியும்.

(iii) பாக்குநீரிணையில் இருந்து வெளியேற்றி இழுவைப் படகுகளை வங்காள விரிகுடா, அரேபியன் கடல் போன்றவற்றிற்கு கொண்டு செல்ல இந்திய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

2. பலாலி விமானத் தளத்தை சர்வதேச அல்லது பிராந்திய விமானத் தளமாக மாற்ற வேண்டும். மேலதிகமாகாண காணிகள் சுவீகரிக்கத் தேவையில்லை என்று இந்திய அரசாங்கம் கூறியுள்ளது.

3. மாகாண ஏரிகள், குளங்கள் என்பன மறு சீரமைக்கப்பட வேண்டும். அப்போது நீர் மட்டத்தின் மேல் சூரிய ஒளிச் சட்டங்களை (Solar Power Panels) பரவி விடலாம். இது மின்சாரத்தைத் தருவது மட்டுமல்லாது குளத்து நீர் ஆவியாக மாறுவதைத் தடுப்பதாகவும் அமையும்.

4.எமது கிராமத்தில் இருக்கும் மக்கள் அபிவிருத்தி சங்கங்களின் கட்டடங்களைப் புனர் நிர்மாணிக்க வேண்டும். அவ்வாறு சீரமைப்பதன் பின்னர் அங்கு கணனிகள் போன்ற வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். இதற்கான கோரிக்கை ஏற்கெனவே இந்திய உயர் ஸ்தானிகரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

5.அரச மின்நிலைய இணைப்புடன் சேர்க்கும் முகமாக காற்றாடி, சூரிய சக்தி போன்ற பதில் மின்சார உற்பத்தி முறைகளைக் கையாள வேண்டும்.

6.கொக்கிளாயில் வடக்கு கிழக்கை இணைக்க பாலம் ஒன்று கட்டப்பட வேண்டும்.

03. வீடமைப்பும் மீள் குடியிருத்தலும்

வடமாகாண சபை மூலம் 50000 வீடுகள் கட்டித்தர வேண்டும். ஆனால் அரசாங்கம் எம்மை நம்புவதில்லை. வீடமைப்புக்கான செலவு பணம் அனைத்தையும் அரசாங்க அதிபர்களுக்கே கொடுத்து வருகின்றார்கள். அவர்கள் எமது அலுவலர்களைக் கொண்டே வேலைகளைச் செய்து முடிக்கின்றார்கள். இப்பணத்தை நேரடியாக எமக்கு அனுப்புவதில் என்ன தயக்கம்? மக்களால் தேர்ந்தெடுக்கும் பிரதிநிதிகள் மீது நீங்கள் நம்பிக்கை கொள்ள வேண்டும். ஆனால் எங்கள் மீது உங்களுக்கு நம்பிக்கை இல்லை.

கேப்பாப்பிலவு போன்ற இடங்கள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை. உடனே அவை விடுவிக்கப்பட வேண்டும். அதை விட்டு காணிகளைத் தம் கைவசம் வைத்திருக்கப் படையினர் முனைந்தால் அது சம்பந்தமாக வெளிப்படையான விசாரணைகள் நடைபெற இடம் அளிக்க வேண்டும். விசாரணை நடைபெற்றால் படையினர் கோரும் காணிகள் அவர்கள் செய்யும் வேலைக்கு தேவையானதல்ல என்பதனை நாம் எடுத்துக் காட்ட முடியும்.

4. அவசரமான தேவைகள்

(i). பிரதேச சபை ரோட்டுகள் திருத்தப்பட வேண்டும். போக்குவரத்துக்கு உகந்ததாக வீதிகள் சரிசெய்து கொடுக்கப்பட வேண்டும். திணைக்கள வீதிகளின் அபிவிருத்தியும் பார்க்கப்பட வேண்டும்.

(ii) i. முதலமைச்சர் நிதிய நியதிச்சட்டம் ஆளுநரால் அங்கீகரிக்கப்பட்டு வர வேண்டும். தேவையில்லாமல் அதனைத் தாமதப்படுத்திக்கொண்டே இருக்கின்றார்.

ii.மாகாண, மத்திய அலுவலர்களின் வெற்றிடங்கள் உடனே நிரப்பப்பட வேண்டும்.

iii.செங்குத்தான கட்டடம் அமைக்கும் செயற்றிட்டத்தை (Vertical Building Project) யாழ்ப்பாணத்தில் அமைக்க அமைசசர் பைசர் முஸ்தபா முன் வந்தார். ஆனால திடீரென அதற்கான நிதிகள் வேறெங்கேயோ மாற்றப்பட்டு விட்டன. விட்ட இடத்தில் இருந்து இந்த செயற்றிட்டம் தொடர ஆவன செய்ய வேண்டும்.

iv.பாரிய நகர அமைப்பு அமைச்சர் அவர்களால் (Minister of Megapolis) யாழ் மாநகர சபைக் கட்டடம் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வந்தன. பூர்வாங்க வேலைகளும் முடிந்து விட்டன. இதற்குரிய நிதியம் வேறெங்கோ கொண்டு சேர்க்கப்பட்டுள்ளது.

v.வலிகாமம் வடக்கில் விடுவிக்கப்பட்ட நிலங்களில் மீள் குடியேற்றம் முறையாக நடப்பதை உறுதி செய்ய ஒரு விசேட சிவில் செயலணி நியமிக்கப்பட வேண்டும். மயிலிட்டியிலும் நியமிக்கப்பட வேண்டும்.

vi.இரணைதீவில் சிவில் நிர்வாகம் மீண்டும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

vii.வவுனியா, மன்னார் ஆகிய இடங்களுக்கு தமிழ் அரசாங்க அதிபர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

ஆனால் சிங்களவர்களைத் தமிழ் பிரதேசங்களுக்கும் தமிழர்களைச் சிங்கள பிரதேசங்களுக்கும் நியமிக்கும் ஒரு கொள்கை உங்களுக்கிருந்தால் யாழ்ப்பாணத்திற்கு அல்லது கிளிநொச்சிக்கு சிங்களவர் ஒருவரை நியமியுங்கள். எல்லைப்புற மாவட்டங்களுக்கு சிங்கள அரசாங்க அதிபர்களை நியமிப்பதால் சட்டப்படி காணிகளை உள்ளூர் மக்களுக்கு முன்னுரிமையின் அடிப்படையில் கொடுக்காமல், அவர்கள் மாகாணத்துக்கு வெளியில் இருந்து மக்களைக் கொண்டு வந்து வடமாகாண காணிகளில் குடியேற்றுகின்றார்கள்.

viii.தமிழ் மொழியில் உயர் கல்வி கற்கவும் வணிகம் பற்றி கற்கவும் ஏதுவாக வடமாகாண சபை தமிழ்நாட்டுடன் ஒப்பந்தங்களில் கைச்சாத்திட அனுமதி தாருங்கள்.

ix.பதின்மூன்றாம் திருத்தச் சட்டத்தின் கீழ் அதிகாரப் பரவலாக்கம் நடைபெற்ற படியால் மகாவலிச் சட்டம், நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம் போன்றவற்றிற்கு திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டும். அதாவது மாகாண அதிகாரங்களைப் பாதுகாத்து சட்டங்கள் திருத்தப்பட வேண்டும். தற்போது மாகாணங்களுக்கு எந்தவித அதிகாரமும் இல்லை என்ற அடிப்படையிலேயே அவர்கள் செயலாற்றுகின்றார்கள்.

x. தீவிரவாத தடுப்புச் சட்டத்தை (PTA) உடனே கைவாங்க வேண்டும்.

XI.அரசியல் கைதிகள் அனைவரும் பொது மன்னிப்பில் விடுதலை செய்யப்பட வேண்டும். (ம)

# மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் இராணுவத்தின் சிவில் நடவடிக்கைக்கு தடை

## யாழ்.மாநகர சபையில் ஏகமனதாக தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபை ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் இராணுவத்தினர் சிவில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு தடை விதிக்க வேண்டும் என யாழ் மாநகரசபையில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நேற்று மாநகரசபை அமர்வு யாழ் மாநகர சபை மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. அதில் மாநகரசபை உறுப்பினர் மணிவண்ணன் மேற்குறித்த விடயம் தொடர்பாக சபையில் சுட்டிக்காட்டினார்

அதாவது பண்ணைப்பகுதியில் இராணுவத்தினர் சிவில் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமையை காணக்கூடியதாக உள்ளது. நாம் இராணுவம் வெளியேற வேண்டும் என தெரிவித்து வருகிறோம் இவ்வாறான சிவில் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தினால் இராணுவத்திரை மீண்டும் இங்கு இருத்துவதற்கு நாம் அனுமதிப்பதாக அமையும்.

இதற்கு பதிலளித்த மாநகரசபை முதல்வர் ஆனோல்ட், நாம் அதே நிலைப்பாட்டில் தான் உள்ளோம். இராணுவத்தை நாம் அழைக்கவில்லை. சர்வதேச சுற்றுச்சூழல் தினத்துக்காக ஆளுநர்மேற்குறித்த திட்டத்தை மேற்கொண்டுள்ளார். அவரே அனைவரையும் உள்ளடக்கி செயற்படுகிறார் என தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து அனைத்து உறுப்பினர்களின் சம்மதத்துடன், இராணுவத்தை யார் கொண்டுவந்தும் சிவில் நடவடிக்கையில் ஈடுபடுத்தினால் நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. அத்துடன் அவ்வாறு இராணுவத்தினர் சிவில் நடவடிக்கையில் ஈடுபடும் நிகழ்வுகளில் மாநகரசபை உறுப்பினர்கள் கலந்து கொள்ள மாட்டார்கள் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது, (ம-9)

## அபிவிருத்தித் திட்டங்களை...

யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி மீளாய்வு தொடர்பான கூட்டம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அக்கலந்துரையாடலில் ஒரு பகுதியாக கடல் நீரை நன்னீர் ஆக்கும் திட்டம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

அதில் தாளையடியில் இருந்து கடல்நீரை சுத்திகரிப்பதில் பிரச்சினை எதுவும் இல்லை. அங்கிருந்து நன்னீரை பெற முடியும் என மக்கள் பிரதிநிதியொருவர் தெரிவித்தார். அங்கிருந்து தண்ணீர் எடுப்பதற்கு பலர் எதிராக இருக்கிறார்கள் என மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் பதில் கருத்து தெரிவித்தார். அதற்கு பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திட்டங்கள் தயார்படுத்துவது, நடைமுறைப்படுத்துவது தொடர்பாக நீங்களே பேசி, முடிவெடுத்து செய்யக்கூடிய விடயங்கள். எதற்காக என்னிடம் தெரிவிக்கிறீர்கள். இவை தொடர்பாக நீங்களே சுமுகமான முடிவெடுத்து, இவற்றை ஒற்றுமையாக செயற்படுத்துங்கள். பின்னர் திட்டத்தை எம்மிடம் தாருங்கள் நாம் ஒத்துழைப்பு வழங்குவோம் என தெரிவித்தார்.

தொடர்ந்து இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் மேலும் தெரிவிக்கையில் ஏனைய மாவட்டங்களை விட வடக்கு மாகாணத்தில் உள்ள மாவட்டங்கள் அபிவிருத்தியில் பின்தங்கிய நிலையில் உள்ளது. அதை மீள கட்டியெழுப்ப வேண்டியது அவசியம். வடக்கில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் பாரிய அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்வதற்கு திட்டமிட்டுள்ளோம். விவசாயம், மீன்பிடி சுற்றுலாத்துறை, வீதி அகலிப்பு போன்ற திட்டங்களை மேற்கொண்டு அதன் மூலம் வடக்கின் வருமானத்தை அதிகரிப்பதற்கு திட்டமிட்டுள்ளோம்.

மேலும் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை, தகவல் தொழில்நுட்ப வலயமாக மாற்ற திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் முதலீடு செய்வது மிக கூடுதலான அளவு பணம் அறவிடப்படுவதாகவும் அதனால் அங்கு இதுவரை தொழிற்சாலைகள் அதிகளவில் அமையவில்லை எனவும் அது தொடர்பாக கவனம் செலுத்துமாறு கோரிக்கை விடப்பட்டது.அது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாக மேலும் தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலில் மேலும் பல அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக மக்கள் பிரதிநிதிகளால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. அவை தொடர்பில் பரிசீலனை செய்வதாக பிரதமர் தெரிவித்திருந்தார். (ம-9)

## துணைத் தலைவரா...

வேற்றுக் குழு தெரிவிலேயே அமைச்சர் ராஜித சேனாரத்ன துணைத் தலைவராகத் தெரிவாகினார். (ம)

## நாட்டை முன்னேற்ற...

குறிப்பிட்ட பிரதமர், பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சிவஞானம் சிறீதரன் ஆகியோரை சந்தித்தபோது முக்கியமான பிரச்சினைகளை அவர்கள் முன்வைத்துள்ளார்கள்.

யாழ்ப்பாணத்தையும் கிளிநொச்சியையும் அபிவிருத்தியடையச்செய்யவேண்டும். பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் முக்கியமான பிரச்சினைகளை எடுத்துக்கூறியிருக்கின்றார். இலங்கையில் ஒன்பது மாகாணங்களிலும் வடக்கு மாகாணம் மிகவும் ஒரு வேறுபட்டது. யுத்த முடிவடைந்து பல வருடங்களிற்குப் பின்னர் இந்த மாகாணத்தை நாங்கள் அபிவிருத்தி செய்யவேண்டும் என்பது முக்கிய நோக்கமாகும்.

முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் பல குறைபாடுகள் இருக்கின்றன. வவுனியா மாவட்டம் தற்போது முன்னேற்றம் அடைந்து காணப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தைப்பொறுத்தவரையில் பாதுகாப்புப்படையினரிடம் நிறையக்காணிகள் கைவசம் உள்ளன. எங்களினுடைய மக்களின் நாகரிக வளர்ச்சிக்காகவும் அதேவேளை நீர் வசதியையும் அபிவிருத்தி செய்ய வேண்டும். இன்னும் பொருளாதாரம் தொடர்பான அபிவிருத்தி தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். மீன்பிடி, மீள்குடியேற்றம், காணி விடுவிப்பு போன்ற நடவடிக்கைகள் துரித கதியில் மேற்கொள்ள வேண்டும். சில இடங்களில் குறைபாடுகள் இருக்கின்றன.

மக்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்தவேண்டும். 1977ம் ஆண்டு மகாவலி அபிவிருத்தித்திட்டத்தின் பிரகாரம் இருந்த போதிலும் இந்த காலநிலை மாற்றத்தின் பிரகாரம் சில நீர் வசதிகள் அருகி வருகின்றன.

மல்வத்ஓயா ஊடாக வவுனியா, மன்னார் போன்ற மாவட்டங்களுக்கு உதவிகள் கிடைத்தாலும் ஏனைய மாவட்டங்களையும் அபிவிருத்தியடையச் செய்யவேண்டும்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களை ஒருங்கிணைத்து முன்னேற்ற வேண்டும். அதேபோல நீர் வசதிகளை பேணிப்பாதுகாக்க வேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். வடக்கிலே இந்தக்கைத்தொழில் என்பது மிக முக்கியமான ஒரு விடயமாகக் காணப்படுகின்றது.

பிரதேச அபிவிருத்தியை நாங்கள் மேம்படுத்த வேண்டும். ஜனாதிபதி காணிப்பிரச்சினை தொடர்பாக பல தடவைகள் வந்திருந்தாலும், நாங்கள் பொருளாதாரப்பிரச்சினை பற்றியே நாங்கள் வந்திருக்கின்றோம். அனைவரும் இணைந்து எமது நாட்டை பொருளாதார ரீதியில் அபிவிருத்தி செய்ய வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-315)

## காலைக்கதிர் செய்தி...

தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பத்திரிகை விநியோகத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் யாழ்ப்பாணம், கொழும்புத்துறை துண்டிச் சந்தியில் வழிமறித்த 10 பேர் கொண்ட கும்பல் இராஜேந்திரன் மீது சரமாரியாகத் தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

குறித்த தாக்குதலை மேற்கொண்ட 10 பேரும் முகத்தை துணியால் மறைத்திருந்ததுடன் அவர்களிடம் கைக்கோடரி, வாள்கள் உள்ளிட்ட கூரிய ஆயுதங்கள் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துவருவது குறிப்பிடத்தக்கது. (ம-9)

## வற்றாப்பளைக்கு...

அவதானித்த தருமபுரம் பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் கொள்ளையர்களைத் துரத்திச் சென்று வழிமறித்து மோதலில் ஈடுபட்டு 2 கொள்ளையர்களைப் பிடித்ததுடன், 2 மோட்டார் சைக்கிள்களையும் கைப்பற்றி தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று திங்கட்கிழமை மாலை 6 மணியளவில் நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரியவருவது,

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் திருவிழாவிற்கு கொடிகாமத்தில் இருந்து 2 ஆண்கள் உட்பட 5 பெண்கள், 2 சிறுவர்களுமாக மொத்தம் 9 பேரடங்கிய குழுவினர் மகேந்திர பிக்கப் வாகனத்தில் பரந்தன் - முல்லைத்தீவு வீதி ஊடாக பயணித்துக் கொண்டிருந்த போது தருமபுரம் பிரதேச வைத்தியசாலைக்கு முன்பாக பயங்கர ஆயுதங்களுடன் வழிமறித்த கொள்ளையர் குழுவொன்று வாகனத்தை மறித்து தாக்குதல் நடத்தி சேதமாக்கியதுடன், பயணிகளையும் தாக்கி விட்டு, பெண்கள் அணிந்திருந்த தாலிக்கொடி, சங்கிலி உட்பட சுமார் 20 பவுண் நிறையுடைய தங்க நகைகளையும், வாகனத்தின் திறப்பினையும் அபகரித்துக் கொண்டு மோட்டார் சைக்கிள்களில் சுண்டிக்குளம் -கட்டைக்காடு பகுதியை நோக்கி தப்பிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவத்தின் போது, பிக்கப் வாகனத்தில் பயணித்தவர்கள் எழுப்பிய அவலக் குரல் கேட்டு ஓடி வந்த தருமபுரம் பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் கொள்ளையர்கள் சென்ற வீதி ஊடாக மோட்டார் சைக்கிளில் துரத்திச் சென்று வழிமறித்து தாக்குதல் மேற்கொண்ட போது, பல கொள்ளையர்கள் தப்பிச் சென்ற நிலையில், 2 கொள்ளையர்களை மடக்கிப் பிடித்ததுடன் 2 மோட்டார் சைக்கிள்களையும் கைப்பற்றி தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ.ஆர். விமல குணரட்ணா கொள்ளையர்களை துணிகரமாக துரத்திச் சென்று பிடித்த இளைஞர்களைப் பாராட்டியுள்ளதுடன், சம்பவ இடத்துக்கு பொலிஸாருடன் சென்று நிலைமைகளை அவதானித்ததுடன், சேதமாக்கப்பட்ட மகேந்திர பிக்கப் வாகனத்தை மீட்டு பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன், கொள்ளைச் சம்பவம் தொடர்பில் வாகனத்தில் பயணித்தவர்களிடம் முறைப்பாட்டினை பதிவு செய்து கொண்டு இளைஞர்கள் பிடித்து ஒப்படைத்துள்ள கொள்ளையர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-15)

## யாழ்.நகரிலிருந்து...

அமைந்துள்ள இராணுவ முகாம்கள் அனைத்தும் அகற்றப்படும் என இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

கோட்டையை இராணுவத்திற்கு வழங்கினால் தற்போது இராணுவத்தினர் நிலை கொண்டுள்ள பல இடங்களை மீட்டு அபிவிருத்தி செய்யமுடியும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை வழங்கியுள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் படையினர் வசமுள்ள பொதுமக்களின் காணி விடுவிப்பு தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் பாதுகாப்பு படைத்தரப்பினர், அரச அதிகாரிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளுக்கு இடையிலான கலந்துரையாடல் ஒன்று நேற்று யாழ்.மாவட்ட அரச அதிபர் அலுவலகத்தில் இடம்பெற்றது. குறித்த கலந்துரையாடலிலேயே மேற்கண்டவாறு இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் கோட்டை அமைந்துள்ள நிலப்பரப்பினுள் உள்ள 40 ஏக்கர் நிலப்பரப்பில் இருந்து 6 ஏக்கர் நிலத்தினை இராணுவத்தினருக்கு தந்தால் யாழ். நகரப்பகுதியில் ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாம்கள் அனைத்தும் உடனடியாக அகற்றப்படும் என இராணுவத்தளபதி தெரிவித்தார்.

யாழ். கோட்டை தொல்லியல் சார் முக்கியத்துவத்தை கொண்ட மையமாகவும் மரபுரிமை சின்னமாக இருப்பதுடன் சுற்றுலா மையமாக உள்ளது. எனவே அங்கு இராணுவத்தினரை எவ்வாறு அமர்த்துவது என மக்கள் பிரதிநிதிகள் கேள்வி எழுப்பியிருந்தனர்.

அதற்கு பதிலளித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நகர் அபிவிருத்திக்கு காணிகள் தேவைப்பாடாக உள்ளது. எனவே 6 ஏக்கர் நிலப்பரப்பை கோட்டையில் இராணுவத்துக்கு கொடுத்தால் நகர்ப்புற காணிகளை நாம் மீட்க முடியும். அங்கு அபிவிருத்தி செய்ய முடியும் என மக்கள் பிரதிநிதிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

எனவே தொல்லியல் திணைக்களத்திடம் இது தொடர்பாக பேசி மிக விரைவில் நடவடிக்கை எடுப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (ம-9)


5 நட்சத்திர விருது வென்ற இலங்கையின் முதற்தர வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்
Emerald Isle Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists

வடக்கில் முதல் தடவையாக வழங்கும்
வேலைவாய்ப்புக்கள்

இலவச விசா - தொழில்நுட்பவியலாளர் - 94,600/-
ஓமான் / பாஃரேன் - தாதியர் - 166,400/-
கட்டார் - சாரதிகள் - 49,200/- 82,000/-
குவைத் - Dish Washer, Waiter, Manager, Kitchen Helper, Commi, Chef - 67,990/- 287,650/-

விபரங்களுக்கு 077 00 38 215 / 077 55 46 956

வெற்றிகரமான 9th Year
SIKARAM ACADEMY
Business - Hospitality - English
FAST TRACK to CAREERS
Sri Lankan Entrepreneur of the Year 2017
இல.221-1/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
021 221 9 221 www.sikaram.lk
(C-2723)



வேலைவாய்ப்பு

புதியதோர் எதிர்காலத்தை நோக்கி வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டத்துக்கான பல்வேறுபட்ட பதவி வெற்றிடங்கள் உள்ளன. (3333)
* தங்குமிடம், உணவு வசதி * 15 பேர் மட்டும்
* வயதெல்லை 18-30 * தகைமை -O/L, A/L
தொடர்புக்கு:- 076 6767620, 021 5679001



Quality Royal Guaranteed
நல் ஆரோக்கியத்திற்கு
"றோயல் சுத்தமான தேன்"
உங்கள் நலன் ஆரோக்கியம் கருதி "ஆய்வுகூடத்தில்" தரம் பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகின்றது.
Packed By: Royal Industries
Marketed By: சிவா நறுமணப் பூங்கா
இல.288,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இல: 021 222 2567
குறிப்பு: யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து பாமசிகளிலும் பலசரக்கு கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.
(C-2741)



விற்பனைக்கு
* மீன்பிடி றோலருக்கான 30 அடி புதிய வள்ளம், யன்மார் 2 சிலிண்டர் (Full Recondition) எஞ்சினுடன் விற்பனைக்குண்டு.
வேம்படி வல்வெட்டித்துறை
தொடர்புகளுக்கு 077 357 3055



ஜசுபி பழரசத் தொழிற்சாலை
சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம் (வது)
JACHUFI Fruit Based Factory
CHUNNAKAM MPCS Ltd

எமது நோக்கு
வட மாகாணத்தில் முதல்தர உணவு பதனிடல் தொழிற்சாலையாக நாம் தொழிற்படுவோம்.

எமது இலக்கு
"எமது மதிப்பிற்குரிய நுகர்வோருக்கு பல்வேறுபட்ட பாதுகாப்பான, போஷாக்கான, தரமான, இயற்கையான பழம்சார் உற்பத்திகளை நியாய விலையில் யாழ்ப்பாண உற்பத்திக்கான நவீன தொழில்நுட்பத்துடன் சமூக வலுவூட்டப்பட்ட அர்ப்பணிப்புள்ள தொழிலாளர்களைக் கொண்டு நியாயமான பிரதிபலன்கள் சமூகப் பொறுப்பானவர்களுக்கு கிடைக்க வழியமைத்தல்"

எமது உற்பத்திகள்
* நெல்லிக் கிரஸ் * மிக்ஸ்புறூட் ஜாம்
* கிரேப்ஸ் கோடியல் * அன்னாசி ஜாம்
* ஒரேஞ் கோடியல் * ஸ்ரோபெரி ஜாம்
* மிக்ஸ் புறூட் கோடியல் * விளாம்பழ ஜாம்
* மாம்பழ உடனடி பானம்

மேற்படி உற்பத்திகளை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
(C-2730)
ஜசுபி பழரசத் தொழிற்சாலை, ஆடி, மானிப்பாய் வீதி, உடுவில். T.P.No- 021 225 6065 E-mail : jachufijaffna@gmail.com
சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம் (வது) காங்கேசன்துறை வீதி, சுன்னாகம். T.P.No- 021 2243627 E-mail : chunnakammpcs1557@gmail.com



Techno World
(வெலிங்டன் சந்தி, லிங்கன் கூல்பார் அருகாமை-யாழ்)
A/L தொழில்நுட்பப் பிரிவு
A/L 2020,2019 மாணவர்களுக்கான கல்விச் சுற்றுலா...
கண்டி நுவரெலியா
(ஆராய்ச்சி நிலையம், பண்ணை, Tissue Culture lab பார்வையிடப்படும்.)
A/L 2018 மாணவர்களுக்கான விசேட வகுப்புக்கள்.
SFT - ICT பாடம் நடைபெறுகின்றது
E-Tec - இலத்திரனியல்
ICT - Paper class
Agri - Paper class
A/L 2020 புதிய பிரிவு ஆரம்பம் 02.06.2018 (சனி) காலை 08.00
ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்
077 017 5346
(அ-2754)



வேலைவாய்ப்பு
பதவி: சந்தைபடுத்தல் முகாமையாளர் (முன்னனுபவம் விரும்பத்தக்கது)
தொடர்பு: 077 718 4901
Smart Media Network
இல.81, பலாலி வீதி, இலுப்பையடி சந்தி, யாழ்ப்பாணம்.
(4232)



விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK- 550 /-Kg
கனடா-900 /-Kg
ஜேர்மனி-700 /-Kg
நெதர்லாந்து-700 /-Kg
DELIVERY IN 3-5 DAYS
(C-2657)
மானிப்பாய் 0768226240
யாழ்ப்பாணம் கிளிநொச்சி சாவகச்சேரி நெல்லியடி பருத்தித்துறை வல்வெட்டித்துறை
V2 TRAVELS


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.05.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.